தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www. tamilnaduepaper.com

MLM SOFTWARE Company

- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:285 | 30-04-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ●சென்னை ●மதுரை ●கோவை ●திருச்சி

# 5 மாநில பேரவைத் தேர்தல்! கருத்துக் கணிப்பு முடிவுகள்

**சென்னை, ஏப்.30**

தமிழக சட்டப்பேரவைக்கு ஏப். 23 ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்றது. பதிவான வாக்குகள் மே 4 ஆம் தேதி எண்ணப்படவுள்ளன. இதனையொட்டி, கருத்துக் கணிப்பு முடிவுகள் இன்று மாலை வெளியானது.

இதில், தமிழ்நாட்டில் அக்ஸிஸ் மை இந்தியா கருத்துக் கணிப்புகள் தவெக ஆட்சி என்றும், சிஎன்என், ஜேவிசி கருத்துக் கணிப்புகள் அதிமுக தலைமையிலான ஆட்சி என்று சொன்னாலும், பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் திமுக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதாகக் கூறியிருக்கிறது.


புதுச்சேரியில் என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதாகவும், இது கிட்டத்தட்ட 18 தொகுதிகள் வரை வெல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் சில கருத்துக் கணிப்புகள் திரிணமூல் காங்கிரஸ் ஆட்சியே என்று சொன்னாலும் வேறு சில கருத்துக் கணிப்புகள் பாஜக ஆட்சியைக் கைப்பற்றுவதாகக் கூறுகிறது.

கேரளத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தலைமையிலான கூட்டணி, சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சி அமைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான கூட்டணி 2 ஆம் இடத்துக்குத் தள்ளப்படும் என கருத்துக் கணிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகளில் அஸ்ஸாம் மாநிலத்தில் ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியே ஆட்சியமைக்கும். இங்கு கிட்டத்தட்ட 88 - 100 தொகுதிகளை வெல்லும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டில் தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்கும் என இந்தியா டுடே - ஆக்ஸிஸ் மை இந்தியா கருத்துக் கணிப்பு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




### தமிழ்நாடு சட்டசபை தேர்தல் 2026- எக்ஸிட் போல்
சட்டசபை மொத்த இடங்கள்: 234·பெரும்பான்மைக்கு தேவை 118

| Channels | DMK+ | AIADMK+ | TVK | NTK | OTH |
|---|---|---|---|---|---|
| Peoples Pulse | 125-145 | 65-80 | 18-24 | 0 | 2-6 |
| Axis My India | 92-110 | 22-33 | 98-120 | 0 | 0 |
| Chanakya Strategies | 145-160 | 50-65 | 13-18 | 05-08 | 0 |
| Matrize | 122-132 | 87-100 | 12-16 | 01-06 | 0 |
| P-Marq | 125-145 | 65-85 | 16-26 | 01-06 | 0 |
| Agni News Service | 169 | 64 | 01 | 0 | 0 |
| JVC | 75-95 | 128-147 | 08-15 | 0 | 0 |
| Poll Diary | 148-168 | 61-81 | 0 | 0 | 1-9 |
| Vote Vibe | 103-113 | 114-124 | 4-10 | 0 | 0 |
| Praja Poll | 148-168 | 61-81 | 0 | 0 | 1-9 |
| Minnambalam | 155 | 72 | 5 | 2 | 0 |
| **Poll of Polls** | **128-142** | **72-85** | **19-26** | **2-6** | **1-8** |

### மேற்கு வங்காளம் சட்டசபை தேர்தல் 2026- எக்ஸிட் போல்
சட்டசபை மொத்த இடங்கள்: 294·பெரும்பான்மைக்கு தேவை 148

| Channels | BJP | TMC | INC | LF+ | OTH |
|---|---|---|---|---|---|
| Peoples Pulse | 95-110 | 177-187 | 01-03 | 00-01 | 01-03 |
| Chanakya Strategies | 150-160 | 130-140 | 0 | 0 | 06-10 |
| Matrize | 146-161 | 125-140 | 0 | 0 | 06-10 |
| Times Now-JVC | 138-159 | 131-152 | 00-02 | 0 | 0 |
| Poll Diary | 142-171 | 125-140 | 03-05 | 0 | 05-09 |
| P-Marq | 150-175 | 118-138 | 0 | 0 | 02-06 |
| Janmat Poll | 80-90 | 195-205 | 01-03 | 00-01 | 03-05 |
| Praja Poll | 178-201 | 85-110 | 0 | 0 | 00-05 |
| **Poll of Polls** | **135-153** | **136-152** | **1-3** | **0-1** | **3-7** |

### அசாம் சட்டசபை தேர்தல் 2026- எக்ஸிட் போல்
சட்டசபை மொத்த இடங்கள்: 126·பெரும்பான்மைக்கு தேவை 64

| Channels | NDA | ASM | OTH |
|---|---|---|---|
| Axis My India | 88-100 | 24-36 | 0 |
| JVC | 88-101 | 23-33 | 00-05 |
| Matrize | 88-98 | 22-32 | 3-5 |
| Chanakya Strategies | 85-95 | 25-32 | 6-12 |
| Poll Diary | 86-101 | 15-26 | 3-7 |
| **Poll of Polls** | **87-99** | **22-32** | **3-7** |

### கேரளா சட்டசபை தேர்தல் 2026- எக்ஸிட் போல்
சட்டசபை மொத்த இடங்கள்: 140·பெரும்பான்மைக்கு தேவை 71

| Channels | UDF | LDF | NDA | OTH |
|---|---|---|---|---|
| Peoples Pulse | 75-85 | 55-65 | 0-3 | 0 |
| P MARQ | 71-79 | 62-69 | 1-4 | 0-3 |
| Vote Vibe | 58-68 | 70-80 | 0-4 | 0 |
| Matrize | 70-75 | 60-65 | 3-5 | 2-4 |
| JVC | 72-84 | 52-61 | 3-7 | 0 |
| **Poll of Polls** | **69-78** | **60-68** | **1-5** | **1-4** |

### புதுச்சேரி சட்டசபை தேர்தல் 2026- எக்ஸிட் போல்
சட்டசபை மொத்த இடங்கள்: 30·பெரும்பான்மைக்கு தேவை 16

| Channels | NDA | INC+ | TVK | OTH |
|---|---|---|---|---|
| Peoples Pulse | 16-19 | 10-12 | 0 | 1-2 |
| Axis My India | 16-20 | 6-8 | 2-4 | 1-3 |
| Praja Poll | 19-25 | 06-08 | 0 | 0 |
| Agni News Service | 0 | 0 | 0 | 0 |
| Poll of Polls | 17-21 | 7-9 | 2-4 | 1-3 |

## இன்றைய பஞ்சாங்கம்

30.04.2026 சித்திரை 17
வியாழக்கிழமை

சூரிய உதயம் 5.58

திதி:
இன்று இரவு 9.50 வரை சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 1.10 வரை அஸ்தம் பின்பு சித்திரை

யோகம் :
இன்று இரவு 9.22 வரை வஜ்ரம் பின்பு சித்தி.

கரணம் :
இன்று 9.25 வரை கரசை பின்பு இரவு 9.50 வரை வணிசை பின்பு பத்திரை.

அமிர்தாதி யோகம்:
இன்று அதிகாலை 1.10 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று அதிகாலை 1.10 வரை சதயம் பின்பு பூரட்டாதி.

நல்ல நேரம்
காலை 11.30 – 12.00.
மாலை 12.30 – 1.30

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

இன்று சுபமுகூர்த்த நாள்
ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி
ஸ்ரீகள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழா

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## ஒரே நாளில் 2-வது முறையாக குறைந்த தங்கம் விலை



**சென்னை, ஏப்.30:**

தங்கம் விலை கடந்த 19-ந்தேதியில் இருந்து குறைந்து கொண்டே வந்தது. பின்னர் 25-ந்தேதியில் இருந்து விலை சற்று உயரத் தொடங்கியது. இதனையடுத்து நேற்று விலை மீண்டும் குறைந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்று காலையிலும் தங்கம் விலை குறைந்தது. அதன்படி இன்று காலையில் தங்கம் விலை கிராமுக்கு ரூ.150-ம், சவரனுக்கு ரூ.1,200-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.13,950-க்கும், ஒரு சவரன் ரூ.1,11,600-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று ஒரே நாளில் 2-வது முறையாக தங்கம் விலை குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று மாலையில் சவரனுக்கு ரூ.400 குறைந்து, ஒரு சவரன் ரூ.1,11,200-க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.50 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,900-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ.1,600 குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. வெள்ளி விலை நேற்று காலையில் மாற்றமின்றி விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், மாலையில் குறைந்துள்ளது. அதன்படி வெள்ளி விலை மாலையில் கிராமுக்கு ரூ.5-ம், கிலோவுக்கு ரூ.5 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.260-க்கும், ஒரு கிலோ 2 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## மேற்கு வங்கம்: 89.99% வாக்குப்பதிவு!

**புதுடெல்லி, ஏப்.30:**



மேற்குவங்கத்தில் இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் மாலை 5 மணி நிலவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 78.68 சதவிகித வாக்குகள் பதிவான நிலையில்,மாலை 5 மணி நிலவரப்படி 89.99 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளனன.

அதிகபட்சமாக, கிழக்கு பர்தமான் தொகுதியில் 92.46 சதவிகிதமும், ஹூக்ளியில் 90.34 சதவிகிதமும், நாடியா தொகுதியில் 90.28 சதவிகிதமும், ஹவுரத் தொகுதியில் 89.44 சதவிகிதமும், வடக்கு கொல்கத்தாவில் 87.77 சதவிகிதமும், தெற்கு கொல்கத்தாவில் 86.11 சதவிகிதமும் பதிவாகியுள்ளன.

294 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட மேற்கு வங்கத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளுக்கு கடந்த ஏப்.23 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது.முன்னெப்போதும் இல்லாத அளவில் 93.19 சதவிகித வாக்குகள் பதிவாகின.

இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 142 தொகுதிகளுக்கு இன்று காலை வாக்குப்பதிவு தொடங்கியது. இந்தத் தேர்தலில் 1.64 கோடி ஆண்கள், 1.57 கோடி பெண்கள், 792 மூன்றாம் பாலினத்தவர் என 3.21 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்குப்பதிவுக்காக 41,001 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்கு வங்கத்தில் முதல் மற்றும் இரண்டாவது கட்டமாக இன்று பதிவான வாக்குகள் மே 4 ஆம் தேதி எண்ணப்படு கிறது.

## வானிலை முன்னறிவிப்பு: கோவை, நீலகிரி உள்ளிட்ட 6 மாவட்டங்களுக்கு கனமழை வாய்ப்பு

**சென்னை, ஏப்.30:**

சென்னை வானிலை ஆய்வு மையத்தின் உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு: வட உள் கர்நாடகா முதல் மன்னார் வளைகுடா வரை தென் உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில், ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது.இதன் காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோரப்பகுதிகளில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இன்று (ஏப்.29) இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் ஏப்.30, மே 1, 2 ஆகிய தேதிகளில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏப்.30-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய 6 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

## காவிரியில் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறக்க கர்நாடகாவுக்கு உத்தரவு

**புதுடெல்லி, ஏப்.30:**

காவிரி நதிநீரை கர்நாடகம், தமிழ்நாடு புதுச்சேரி மற்றும் கேரளா ஆகிய 4 மாநிலங்களும் பிரச்சினை இன்றி பகிர்ந்து கொள்வதற்காக சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின் பேரில் காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு கடந்த 2018-ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் 50-வது கூட்டம் டெல்லியில் இன்று நடைபெற்றது. ஆணைய தலைவர் எஸ். கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய 4 மாநில நீர்வளத்துறை அதிகாரிகள் காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் மே மாத பங்கீடாக காவிரி ஆற்றில் இருந்து 2.5 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டிற்கு திறந்து விட கர்நாடகாவுக்கு காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Loss of Share
- Legal Notice
- Merger
- Tender Notice
- Acquisition
- Society Notice
- AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-605

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்



காலம் நீட்டித்தல், சோம்பல், மறதி, அளவு மீறியத் தூக்கம் ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

## சிந்திக்க ஒரு நொடி



மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கியாகிவிட்டது.

கரையேற கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர மண் குதிரை கரையுதே என்று கவலைப்பட்டு பயனில்லை...

**உஷா முத்துராமன்**

## பாவேந்தர் பாரதிதாசனின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை



பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாளை தமிழ் நாடு அரசு தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாடி வருவதை முன்னிட்டு அவரது 135ஆவது பிறந்தநாளான நேற்று மதுரை தமுக்கம் பேருந்து நிறுத்தத்தில் அமைந்துள்ள சங்ககால மதுரைப் புலவர்கள் நினைவுத் தூணுக்குத் தமிழ் வளர்ச்சி துறையின் மதுரை மாவட்ட துணை இயக்குனர் முனைவர் ம.சுசிலா அவர்கள் மாலை அணிவித்து பாவேந்தர் பாரதிதாசனின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் . உடன் மாமதுரைக் கவிஞர் பேரவையின் செயலர் தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா. இரவி, தொல்காப்பியர் மன்றத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் தேவி மற்றும் தமிழறிஞர் அழகுராஜ் , வள்ளலார் அறிவியல் மையத்தின் நிறுவுனர் திரு. ஆதிரை சசாங்கன் மற்றும் தமிழ் வளர்ச்சி துறை பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 136 வது பிறந்தநாள்




திருவண்ணாமலை மாவட்டம் போளூர் நகராட்சியில் பேருந்து நிலையம் எதிரில் புரட்சி கவிஞர் பாரதிதாசன் 136 வது பிறந்தநாள் நகர திராவிடர் கழகம் சார்பில் நேற்று நடைபெற்றது. பழனி நகரத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் பன்னீர்செல்வம் P.கிருஷ்ணமூர்த்தி ஜானகிராமன் ரவி ராஜன் எம் வீரமுத்து, வெற்றி செல்வன், பழனிவேல், க.அபிபுல்லாகான் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### நல்லூர் தன்வந்திரி பகவானுக்கு ஹோம பூஜைகள்...!



**வந்தவாசி, ஏப் 30:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த நல்லூர் ஸ்ரீ சுந்தர வரதராஜ பெருமாள் கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு சிறப்பு ஹோம பூஜைகள் நடைபெற்றது. இந்த யாகசாலை பூஜையில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக மூல மூர்த்திகளுக்கு பால், தயிர், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்களை கொண்டு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. பங்கேற்ற பக்தர்கள் அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது. பூஜைகளை கோவில் அர்ச்சகர் ராஜன் சுவாமிகள் மேற்கொண்டார். **பா. சீனிவாசன், வந்தவாசி.**

# ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் உற்சவம்



**திருவண்ணாமலை, ஏப்.30:** திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூரில் அருளாட்சி புரிந்திடும் அருள்மிகு ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலில் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு ஒன்பதாம் நாள் உற்சவத்தில், செவ்வாய்க்கிழமை, உத்திரம் நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் திருக்கயிலாய ஸ்ரீகந்த பரம்பரை ஸ்ரீகணேச சுவாமிகள்,ஸ்ரீசிதம்பரேஸ்வரர் திருமடம், திருமங்கலம் மற்றும் திருக்கயிலாய ஸ்ரீகந்த பரம்பரை சைவ வழிபாட்டு நெறிமுறைகளை உலகெங்கும் சென்று சேர்க்கும் திருமுறைச்செம்மல் ஸ்ரீ சிவாக்கர சுவாமிகள், திருஞானசம்பந்தர் திருமடம், கோபிசெட்டிபாளையம், ஈரோடு ஆகியோர் முன்னிலையில் காலை 7.45 மணியளவில் கீழ்பென்னாத்தூர் ஸ்ரீதேவி பூதேவி சமேத வைகுண்டவாச பெருமாள் கோவிலிருந்து ஸ்ரீசுந்தரேசுவரர் மாப்பிள்ளை அழைப்பும், தொடர்ந்து சீர்வரிசை தட்டுடன் புறப்பட்டு, காலை 8.15 மணியளவில் வடக்கு மாடவீதியில் ஸ்ரீமீனாட்சியம்மை எதிர்சேவையும் தொடர்ந்து காலை 8.30 மணியளவில் மிதுன லக்கினத்தில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடைபெற்றது.

பின்னர் காலை 11.00 மணியளவில் ஆதீனங்கள் அருளுரை மற்றும் அருளாசிகள் வழங்கினார்கள். அதை தொடர்ந்து காலை 12.30 மணியளவில் அறுசுவை திருக்கல்யாண விருந்தும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சுமார் 2500க்கும் மேற்பட்ட மக்கள் வருகைபுரிந்து வழிபாடு செய்தனர்.

மேலும் வேடந்தவாடி அருள்மிகு வேதநாயகி உடனுறை வேதநாதர் திருக்கோவில் அடியார்கள் திருக்கூட்டம் வருகைபுரிந்து வழிபட்டனர். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரரை வேண்டி அருள் பெற்றனர். ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.மாலை 5.:30 மணிக்கு மேல் பஞ்சமூர்த்திகள் மற்றும் சுவாமி, அம்மன் மாட வீதி உலா நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மீனாட்சி சுந்தரேசுவரரை வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## அருள்மிகு அண்ணாமலையார் வசந்த உற்சவம், பொம்மை பூ கொட்டும் விழா மற்றும் ஒளிவு நிகழ்ச்சி



**திருவண்ணாமலை ஏப்.30:** அருள்மிகு அண்ணா மலையார் திருக்கோயில் சித்திரை மாதம் 10 நாட்கள் நடைபெறும் வசந்த உற்சவத்தில் தினமும் அண்ணாமலையார் உண்ணாமலையாருக்கு வெட்டிவேர் பள்ளக்கில் மூன்றாம் பிரகாரத்தில் உள்ள மகிழ மரத்தை வலம் வந்து பொம்மை பூ கொட்டுதல் நிகழ்வு நடைபெற்றது.

அண்ணாமலையார் மற்றும் உண்ணாமலையார் அம்மன் ஆலயத்தில் உள்ள மகிழ மரத்தை 10 முறை வலம் வந்து வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க,பொம்மை பூ கொட்டியதும் மண்டகப்படியுடன் மகாதீபாரா தனையும் நடைபெற்றது. ஏராளமானோர் குழந்தைகள், பெரியவர்கள் அனைவரும் பொம்மை கொட்டும் நிகழ்வை கண்டு ரசித்தனர். மற்றும் சுவாமி அலங்காரத்துடன் இரவு ஒளிவு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## ஸ்ரீ ராஜகோபால சுவாமி புறப்பாடு



**தஞ்சாவூர், ஏப்.30:** தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் சித்திரை திருவிழாவில் ஐந்தாவது திருவிவான (28.04.2026) செவ்வாய்க் கிழமை மாலை சுவாமி ராஜகோபால சுவாமி அலங்காரத்தில் எழுந்தருளி நம் ஸௌராட்ஷ்ட்ர சமூக வீதிகளில் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். திருவிழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள்,ஸ்ரீ ராஜகோபால சுவாமி புறப்பாடு குழு மற்றும் உபயதார்கள் செய்து இருந்தனர்.

**செய்தி: T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## பாளையங்கோட்டையில் பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா



**நெல்லை, ஏப்.30:** பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா பாளையங்கோட்டையில் நடைபெற்றது.

" தமிழுக்கு அமுதென்று பேர் ...இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என பாடிய இனமான கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் 136 -ஆவது பிறந்தநாள் நிகழ்ச்சி பொதிகைத் தமிழ்ச் சங்கம் சார்பாக நேற்று 29.04.2026 காலையில் நடைபெற்றது.

பொதிகைத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர் கவிஞர் பேரா என்ற பே. இராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியில் சங்க செயற்குழு உறுப்பினர் இரா.ரெங்கராஜன் வரவேற்புரை வழங்கினார்.


சிறுமிகள் மதிவதனி, மதுபாலா ஆகியோர் பாரதிதாசன் பாடல்களைப் பாடினர். பாரதிதாசனின் படைப்புகள் பற்றி கவிஞர் பேரா,திருக்குறள் இரா.முருகன் ஆகியோர் உரை நிகழ்த்தினர் .

நிறைவாக பாரதிதாசன் திருவுருவப்படத்திற்கு மாலையிட்டு மலர்கள் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் எழுத்தாளர் தளவாய், குறும்பட இயக்குநர் லெனின், கவிஞர் வீரை மைதின், சிறுமிகள் மதிவதனி ,மதுபாலா, செந்தில், விக்னேஷ் உட்பட பலர் கலந்துகொண்டு பூக்கள் தூவி மரியாதை செலுத்தினர். வி.டி.இராஜன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பொதிகைத் தமிழ்ச் சங்க நிறுவுநர் கவிஞர் பேரா செய்திருந்தார்.

## வேத துர்க்கை அம்மனுக்கு ராகு கால பூஜை சிறப்பு வழிபாடு



**கடலூர்,ஏப் 30:** கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு மீனாட்சி உடனுறை வேதபுரீஸ்வரர் திருக்கோவிலில் செவ்வாய்க்கிழமை ராகுகால பூஜையை முன்னிட்டு அருள்மிகு வேத துர்க்கை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்கள், வண்ண மலர் மாலைகளால் அலங்காரங்கள், எலுமிச்சம்பழ மாலைகளால் அலங்கரித்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

வேத துர்க்கை அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## 7ம் திருநாள் காலை திருத்தேர்



மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 7ம் திருநாள் காலை திருத்தேர்.

## வந்தவாசி பகுதியில் பிரதோஷ வழிபாடு..!



**வந்தவாசி, ஏப் 30:** திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தென்னாங்கூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சித்திரை மாத பிரதோஷ வழிபாட்டில் நந்தி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. மூல மூர்த்திகளுக்கு மகா தீபாராதனை நடந்தேறியது.

வந்தவாசி ஸ்ரீஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் நந்தி பகவானுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்று தங்க கவச அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். உற்சவ மூர்த்தி மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார். வந்தவாசி அருகே மருதாடு ஸ்ரீபுரந்தரீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## சித்திரை மாதம் வளர்பிறை பிரதோஷ வழிபாடு



**திருவண்ணாமலை, ஏப். 30:** சித்திரை மாதம் வளர்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பெரிய நந்திகேச பெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், பன்னீர், இளநீர், விபூதி, தேன், பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், வில்வமாலைகளால் அலங்கரித்து, வில்வத்தினால் அர்ச்சனை செய்து, வண்ணப் பூக்களால் அலங்காரங்கள், வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, சிவ மேலங்கள் ஒலிக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாரதனையும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் பிரதோஷ பூஜையில் கலந்து கொண்டு அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு நந்திகேச பெருமானை வேண்டி அருள் பெற்றனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## இரு தொகுதிகளில் போட்டியிட சட்டம் அனுமதிக்கிறது: நீதிமன்றம்

**சென்னை, ஏப்.30:**

தேர்தலின்போது இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம் இடைத்தேர்தல் செலவை திரும்பப்பெற உத்தரவாத பத்திரம் வாங்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 33(7)- இன்படி, ஒரு வேட்பாளர் ஒரே தேர்தலில் அதிகபட்சம் இரண்டு தொகுதிகளில் போட்டியிட முடியும் என்பது நடைமுறையில் உள்ள சட்டம் என்றும், இந்த சட்டப் பிரிவை எதிர்த்த வழக்கை உச்ச நீதிமன்றமே ஏற்கெனவே தள்ளுபடி செய்துள்ளது என்றும் நீதிபதிகள் சுட்டிக் காட்டினர். தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியது.

## அரிய வகை புற்றுநோய்க்கு வெற்றிகரமான சிகிச்சை அரசு மருத்துவமனை புதிய சாதனை

**சென்னை, ஏப்.30:**

கடலூரைச் சேர்ந்த பேருந்து நடத்துநர் புருசோத்தமனுக்கு மார்பெலும்பில் கோண்ட்ரோசார்க்கோமா என்ற அரிய வகை புற்றுநோய் கண்டறியப்பட்டது. அது விலா எலும்புகள் மற்றும் நெஞ்சுப்பகுதி சுவர் வரை பரவி யிருந்த நிலையில், சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை மருத்துவர்கள் டைட்டானியம் உலோகத்தால் ஆன சட்டகத்தை முப்பரிமாண முறையில் துல்லியமாக வடிவமைத்து பொருத்தி வெற்றிகரமான அறுவை சிகிச்சை செய்தனர். தனியார் மருத்துவமனைகளில் பல லட்சங்கள் செல வாகும் இத்தகைய உயர் ரக சிகிச்சைகள் தமிழ்நாடு அரசு மருத்துவமனையில் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளது என நோயாளி நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். நவீன தொழில்நுட்பமும் மருத்துவர்களின் அர்ப் பணிப்பும் இணைந்து ஒரு மனிதனின் சுவாசத்தை மீட்டெடுத்த இந்த சாதனை மருத்துவ உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

## ‘தேர்தல் முடிவுகளை அமைதியாக எதிர்கொள்ளுங்கள்!’

**சென்னை, ஏப்.30:**

தேர்தல் முடிவுகள் வெளியாக இருக்கும் இந்த தரு ணத்தில், இளைஞர்கள் வெற்றி தோல்விகளை சமமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஓய்வுபெற்ற நீதிபதி கிருபாகரன் வலியுறுத்தியுள்ளார். அரசியல் கட்சித் தலைவர்கள் தங்கள் இளம் தொண் டர்களுக்கு தேர்தல் முடிவு எப்படி இருந்தாலும் எந்த தீவிர மான முடிவும் எடுக்கக் கூடாது என்று அறிக்கை வெளி யிட வேண்டும் என்றும், ரசிகர் பட்டாளத்தைக் கொண்டுள்ள சினிமா நடிகர்களும் இக்காலத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார். பெரும் தலைவர்களே பலமுறை தோல்வியைத் தழுவிய வரலாற்றை சுட்டிக்காட்டிய அவர், சமூக வலைதளங்களில் பரவும் சில பதிவுகளின் மூலம் அதிர்ச்சிகரமான சம்பவங்கள் நடக்க வாய்ப்புள்ளது என எச்சரித்தார்.

## ‘அமைச்சருக்கு எதிராக வழக்குப் பதிய உத்தரவிடவில்லை!’

**சென்னை, ஏப்.30:**

புகார் மீது மட்டுமே வழக்குப் பதிய உத்தரவிட்டோம், குறிப்பாக அமைச்சர் நேரு மீது வழக்கு தொடர உத்தரவிடவில்லை என சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தர்மாதிகாரி தெளிவுபடுத்தியுள்ளார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை ஜூன் மாதம் நான்காவது வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## தமிழகம், புதுவையில் இந்தியா கூட்டணி ஆட்சி அமையும்: நாராயணசாமி

**புதுச்சேரி, ஏப்.30:**

தமிழகத்தில் திமுக தலைமையிலும், புதுச்சேரியில் காங்கிரஸ் தலைமையிலும் இந்தியா கூட்டணி ஆட்சி அமைவது உறுதி என்று புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். வீடியோ பதிவொன்றில் அவர் பேசுகையில், புதுச்சேரியில் எல்லாத் துறைகளிலும் ஊழல் மலிந்த ஆட்சி நடந்த தாகக் குற்றம் சாட்டி, சட்டசபை தேர்தலில் மக்கள் என்.ஆர்.காங்கிரஸ்-பாஜக கூட்டணிக்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்று கூறினார். புதுச்சேரியில் இந்தியா கூட்டணி சிறிய சலசலப்பை சந்தித்திருந்தாலும் காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமையும் என்றும், தவெக கட்சியின் தாக்கம் எந்த அளவுக்கு வாக்குகளைப் பிரிக்கும் என கணிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## சென்னை கோட்டத்தில் ஓர் ஆண்டில் ஆதரவின்றி தவித்த 556 பேர் மீட்பு: ரயில்வே அதிகாரிகள் தகவல்



**சென்னை, ஏப்.30:**

சென்னை கோட்டத்துக்கு உட்பட்ட ரயில்வே வளாகத்தில், கடந்த ஓர் ஆண்டில் கைவிடப் பட்ட அல்லது ஆதரவின்றி தவித்த 556 பயணிகள் மீட்கப் பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறியதாவது: கடந்த நிதியாண்டில் (2025-26), சென்னை ரயில்வே கோட்டத்துக்கு உட் பட்ட ரயில் நிலையங்கள், ரயில்வே வளாகத்தில் ஆதரவின்றி தவித்த மற்றும் கைவிடப் பட்ட 227 பெண்கள் உள்பட 556 பயணிகளை ஆர்பிஎஃப் போலீஸார் மீட்டனர்.

இதில் சிறுவர்கள், முதியவர்களும் அடங்குவர். சிறுவர், சிறுமியர்களை குழந்தைகள் நல உதவி மையங்களிலும், பெரியவர்களை தொண்டு நிறுவனங்களிலும் ஒப்படைக்கப்பட்டனர்.


‘ஆப்ரேஷன் சேவா’ கீழ், சென்னை ரயில்வே கோட்டத்தில் பல்வேறு ரயில்களில் பயணத்தின் போது, உடல் நலம் பாதிக்கப்பட்ட 1,125 பயணிகளுக்கு முதலுதவி அளித்து, போதிய மருத்துவ உதவி கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இது தவிர, ‘ஆப்ரேஷன் மாத்ருசக்தி’ கீழ், ரயில்களில் பயணத்தின் போதோ, ரயில் வளாகத்திலோ பிரசவ வலியால் துடித்த 8 கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான மருத்துவ உதவி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பயணிகள் தவறவிட்ட ரூ.4.36 கோடி மதிப்பிலான சொத்துக்களை மீட்டு, உரியவர்களிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மருத்துவ சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசு முதலிடம் பெற்றது




**சென்னை, ஏப்.30:**

அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சேர்ந்து சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையில் 43 சதவீதத்துடன் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் பிடித்துள்ளது என தேசிய புள்ளியியல் ஆய்வக அறிக்கை தெரிவிக்கிறது. தரமான மருத்துவ சிகிச்சை, இலவச சிகிச்சை வசதிகள் மற்றும் அரசு மருத்துவர்கள் மீது பொது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையே இந்த சாதனைக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தென்னிந்திய மாநிலங்களான கேரளம் 30 சதவீதமும், கர்நாடகா 29.8 சதவீதமும் பதிவு செய்திருக்கும் நிலையில், தமிழ்நாடு 43 சதவீதத்துடன் கணிசமான இடைவெளியில் முன்னிலை வகிக்கிறது. மேலும், தமிழ்நாட்டில் சுமார் 99 சதவீத பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளிலேயே நடைபெறுவதும், உயர்தர சிகிச்சை வசதிகள் மேம்பட்டுள்ளதால் நடுத்தர மற்றும் உயர் வருவாய் பிரிவினரும் அரசு மருத்துவமனைகளை நாடி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## கடலோர மேலாண்மை வாரியம் அனுமதி மறுப்பு சென்னை கடற்கரை சீரமைப்புத் திட்டம் கைவிடப்பட்டது

**சென்னை, ஏப்.30:**

சென்னையின் 51 கி.மீ நீளக் கடற்கரைப் பகுதியை மேம்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்ட ‘சென்னை கடற்கரை மறுசீரமைப்பு மற்றும் புத்து யிரூட்டும் திட்டம்’ அதி காரப்பூர்வமாகக் கை விடப்பட்டுள்ளது.

சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டத்திற்கு, கட லோர ஒழுங்குமுறை மண்டல விதிகளின்படி அனுமதி வழங்கத் தமிழ்நாடு கட லோர மண்டல மேலாண்மை வாரியம் மறுத்துவிட்டது. மேலும், மத்திய சுற்றுச்சூழல் அமைச்ச கத்தின் முறையான அனுமதி இன்றி இத்திட்டத்தைத் தொடரக் கூடாது எனத் தேசிய பசுமைத் தீர்ப்பாயமும் இடைக் காலத் தடை விதித்திருந்தது. சில பகுதிகள் ‘புளூ பிளாக்’ தரத்திற்கு மாற்றப் பட வேண்டும் என அறி வுறுத்தப்பட்ட போதிலும், கடந்த இரண்டு ஆண்டு களாக எவ்வித திருத்தப் பட்ட திட்ட அறிக்கையும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்திட்டத்தினால் வாழ் வாதாரம் பாதிக்கப்படும் என எண்ணூர் முதல் கோ வளம் வரையிலான 65 மீனவ கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த னர். கடற்கரையில் சுற்றுலாப் பயணிகளுக்கான நடை பாதைகள், உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கப் பட்டால், படகுகளை நிறுத்த வும் வலைகளை உலர்த்தவும் இடம் கிடைக்காது என அவர்கள் கவலை தெரி வித்தனர். முதலில் மெரினா முதல் கோவளம் வரை 31 கி.மீ தூரத்திற்குத் திட்டமிடப் பட்டு, பின்னர் 51 கி.மீ ஆக விரிவுபடுத்தப்பட்ட இத்திட்டம், சென்னையின் கடற்கரையை ஐந்து மண்ட லங்களாகப் பிரித்துப் பொழுதுபோக்கு, கலை மற்றும் கலாச்சாரம், நீர் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களுடன் மேம்படுத்த இலக்கு நிர்ண யித்திருந்தது. தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டதன் மூலம் தங்கள் வாழ்வாதாரம் காக்கப்பட்டுள்ளதாக மீனவ சங்கங்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389

## புதுச்சேரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஜூனில் தொடக்கம்

**புதுச்சேரி, ஏப்.30:**

புதுச்சேரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி ஜூன் மாதம் 1 ஆம் தேதி முதல் தொ டங்குவதாக அறி விக்கப்பட்டுள்ளது. 33 விவரங்கள் சேகரிக்கும் இப்பணியில் தவறான தகவல்கள் வழங்கி னால் ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப் படும் என்று மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயில் நேரத்தில் மாற்றம்

**சென்னை, ஏப்.30:**

திரு வனந்தபுரம் கோட்டத் தில் மே மாதம் தண்ட வாளப் பராமரிப்பு பணி நடைபெற இருப்ப தால், சென்னை-குருவாயூர் இடையே இயக்கப்படும் குரு வாயூர் எக்ஸ்பிரஸ் ரயி லில் மாற்றங்கள் செய் யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்து உள்ளது. சென்னையி லிருந்து குருவாயூ ருக்கு மே 2 மற்றும் 9 ஆம் தேதிகளில் ஒரு மணி நேரம் 20 நிமி டங்களும், மே 4 மற்றும் 14 ஆம் தேதிகளில் இரண்டு மணி நேரம் 10 நிமிடங்களும் தாமதமாக செல்லும். குருவாயூரிலிருந்து சென்னை எழும்பூ ருக்கு மே 2 மற்றும் 28 ஆம் தேதிகளில் 30 நிமி டங்கள் தாமதமாக இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரி வித்துள்ளது.

## வாக்கு எண்ணும் ஊழியர்களுக்கு சிறப்பு வகுப்பு



**சென்னை, ஏப்.30:**

சென்னை கலைவாணர் அரங்கில் தேர்தல் ஆணையம் சார்பில் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு புதன் கிழமை (ஏப்.29) சிறப்பு வகுப்பு நடைபெற உள்ளது என இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தொடர்ந்து ரிப்பன் மாளிகை யில் மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் பயிற்சி நடைபெறவுள்ள துடன், தபால் வாக்குகள் மற்றும் படிவங்களைப் பராமரிப்பது குறித்தும் அதிகாரிகளுக்கு விளக்க மளிக்கப்படுகிறது.

## அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு எதிரான அமலாக்கத் துறை வழக்கு ரத்து!

**சென்னை, ஏப்.30:**

சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு திண்டுக்கல், ஏப். 28 - ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு எதிராக அமலாக்கத்துறை தொடர்ந்திருந்த பணப் பரிமாற்ற வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது. 2008-ஆம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத் தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் விருப்புரிமை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாக கூறி, 2011-இல், அதிமுக ஆட்சியின் போது, லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்தது. லஞ்ச ஒழிப்புப் போலீசார் தொடுத்த இந்த வழக்கு 2024- ஆம் ஆண்டு, நீதிமன்றத்தால் ரத்து செய் யப்பட்டது. எனினும், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், அமைச்சர் ஐ. பெரியசாமி மீதான முடிந்து போன வழக்கை, தாமாக முன் வந்து மறுவிசா ரணைக்கு எடுத்துக்கொண்டார். இந்த வழக்கில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் ஏன் மேல்முறையீடு செய்யவில்லை என்று கேள்வியை முன் வைத்து, அவர்களை மேல்முறையீடு செய்ய வைத்தார். முன்னதாக, வீட்டுமனை ஒதுக்கீடு குற்றச்சாட்டில், ஒன்றிய அரசின் அமலாக்கத் துறையும் தனியாக அமைச்சர் ஐ. பெரிய சாமி மீது 2020-ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தது. இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஐ. பெரியசாமி கோரியிருந்தார். மூல வழக்கிலேயே குற்றம் நிரூபிக்கப் படாத நிலையில் அதன் அடிப்படையில் பதியப்பட்ட அமலாக்கத்துறை வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று அமைச் சர் ஐ. பெரியசாமி தரப்பில் வாதங்கள் வைக்கப்பட்டன. இதனை ஏற்றுக்கொண்ட தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி தலைமையிலான அமர்வு, அமலாக்கத் துறை தொடர்ந்த வழக்கை ரத்து செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது.

# வாக்கு எண்ணிக்கை: பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தலைமை செயலாளர் ஆலோசனை





**சென்னை, ஏப்.30:**

தமிழக சட்டசபைக்கான தேர்தல் கடந்த 23-ந்தேதி ஒரே கட் டமாக நடந்து முடிந்தது. 234 தொகுதிகளிலும் மக்கள் ஆர்வத்துடன் திரண்டு வந்து வாக்களித்தனர். விறுவிறுப்பாக நடந்த இந்த வாக்குப்பதிவு முடிவில் தமிழக தேர்தல் வரலாற்றில் இதுவரை காணாத வகையில் 85.10 சதவீத வாக்குகள் பதிவாகின.

பதிவான வாக்குகளை எண்ணுவதற்கான தமிழகம் முழுவதும் 62 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஓட்டுகள் பதிவான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் வி.வி.பாட் ஆகியவை பலத்த பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மையத்திலும் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாக்கு எண்ணிக்கை வருகிற 4-ந்தேதி (திங்கட்கிழமை) நடக் கிறது. அன்றைய தினம் வாக்குகள் எண்ணும் பணி சரியாக காலை 8 மணிக்கு தொடங்கும். முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும். காலை 8.30 மணிக்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் வாக்காளர்கள் பதிவு செய்த வாக்குகள் எண்ணும் பணி தொடங்க உள்ளது. வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையமும், தமிழக அரசும் தீவிரமாக செய்து வருகிறது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் சாய்குமார் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. வாக்கு எண்ணும் மையங்களுக்கு 3 அடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், பணியின்போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்தும், தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. இந்த கூட்டத்தில் டிஜிபி சந்தீப் ராய்ரத்தோர், சென்னை, தாம்பரம் காவல்துறை ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் பங்கேற்றனர்.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.94 கோடி

**திருப்பதி, ஏப்.30:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 79 ஆயிரத்து 878 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

33 ஆயிரத்து 37 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 94 லட்சம் ஆகும்.

# திருத்தணியில் முருகர்-தெய்வானை திருக்கல்யாணம்



**திருத்தணி, ஏப்.30:**

திருத்தணி முருகன் கோயில் சித்திரை பிரம்மோற்சவ விழாவின் ஒருபகுதியாக செவ்வாய்க்கிழமை இரவு உற்சவர் முருகர் - தெய்வானைக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது.

சித்திரை மாத பிரம்மோற்சவம் கடந்த, 22-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து தினமும் உற்சவ முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன், ஒவ்வொரு வாகனத்திலும் காலை, மாலை சிறப்பு அலங்காரத்தில் தேர்வீதியில் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

திங்கள்கிழமை இரவு உற்சவர் முருகர், வள்ளி தெய்வானையுடன் மரத்தேரில் எழுந்தருளி தேர்வீதியில் ஒரு முறை வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். செவ்வாய்க்கிழமை மாலை, 6 மணிக்கு உற்சவர் முருகர் சிறப்பு அலங்காரத்தில் யாளி வாகனத்திலும், தொடர்ந்து குதிரை வாகனத்தில் வலம் வந்தார். பின்னர் இரவு, 9.30 மணிக்கு உற்சவர் முருகப்பெருமானுக்கும், தெய்வானை அம்மனுக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றது.

இதில்,திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியை வழிபட்டனர். பக்தர்கள் அனைவருக்கும் திருமண விருந்து வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை முருகன் கோவில் இணை ஆணையர் க. ரமணி, கோயில் அறங்காவலர் குழுவினர் மற்றும் ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

# மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரை திருவிழா தேரோட்டம் கோலாகலம்

**மதுரை, ஏப்.30:**

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரை திருவிழா திருத்தேரோட்டம், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க வெகுவிமரிசையாக தொடங்கியது.



உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் சித்திரை திருவிழா ஏப்ரல் 19 -ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவை முன்னிட்டு தினமும் காலை, மாலை வேளைகளில் சுவாமி-அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தனர்.

விழாவின் பத்தாம் நாளான நேற்று மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விழாவின் 11ம் நாளான இன்று காலை திருத்தேரோட்டம் வெகு விமரிசையாக தொடங்கியது.

திருத்தேரோட்டத்தை முன்னிட்டு மீனாட்சி அம்மனும், பிரியாவிடை சுந்தரேஸ்வரரும் காலை 8 மணி அளவில் கோயிலில் இருந்து புறப்பாடாகி கீழமாசி வீதியில் தேரடி பகுதியில் எழுந்தருளினர். அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான பெரிய தேரில் பிரியாவிடை சுந்தரேசுவரர், சிறிய தேரில் மீனாட்சி அம்மனும் எழுந்தருளினர்.

காலை 6.30 மணிக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் 'ஹர ஹர சங்கர மீனாட்சி சுந்தரர்' என்ற பக்தி முழக்கத்தோடு சுவாமி, அம்மன் தேர்களை வடம்பிடித்து இழுக்க தொடங்கினர். சிவ பக்தர்கள் ருத்ராட்சையால் ஆன சிவ லிங்கத்தை தோளில் சுமந்தபடியும், பெண் பக்தர்கள் கயிலாய வாத்தியங்கள், சங்குகளை ஊதியபடியும் திருத்தேரின் முன்பாக சென்றனர் சுவாமி, அம்மனின் திருத்தேர்களானது மதுரை நகர வீதிகளான கீழமாசி வீதி, தெற்குமாசி வீதி, மேலமாசி வீதி, வடக்குமாசி வீதிகளில் வலம் வருகிறது. இதன் காரணமாக மாசி வீதிகள் முழுவதும் பல்லாயியரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர்.

தேரோட்டத்தை காண மதுரை மற்றும் சுற்று வட்டாரங்களில் இருந்தும் அண்டைமாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்துள்ள நிலையில், மதுரை மாநகர காவல்துறை சார்பில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட காவல்துறையினர் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சீருடை அணியாத காவல்துறையினர் தொடர்ந்து ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்

தேரோட்டம் நடைபெறுவதை முன்னிட்டு மாசி வீதிகள் முழுவதிலும் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டது. மாசி வீதிகளில் உயரமாக செல்லும் மின்வயர்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு வாகனங்கள் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசர ஊர்திகள் பாதுகாப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

# தூத்துக்குடி சிவன் கோவில் சித்திரை திருவிழா: குதிரை, கிளி வாகனங்களில் சுவாமி-அம்பாள் வீதி உலா

**தூத்துக்குடி, ஏப்.30:**

தூத்துக்குடி சங்கர ராமேஸ்வரர் கோவில் சித்திரை பெருந்திருவிழாவின் 8-ம் திருநாளான நேற்று மாலை சுவாமி குதிரை வாகனத்திலும், அம்பாள் கிளி வாகனத்திலும் எழுந்தருளி 4 ரத வீதிகளிலும் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.






சித்திரை திருவிழாவின் 8-ம் நாளான நேற்று விசேஷ வழிபாடுகள் நடைபெற்றன. மாலையில் அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தில் சங்கர ராமேஸ்வரரும், எழில் கொஞ்சும் கிளி வாகனத்தில் பாகம்பிரியாள் அம்பாளும் எழுந்தருளினர். மேள தாளங்கள் முழங்க, தீவட்டி மரியாதையுடன் சுவாமி - அம்பாள் 4 ரத வீதிகளிலும் பவனி வந்தனர்.

ரத வீதிகளில் திரண்டிருந்த ஏராளமான பக்தர்கள், தங்கள் வீடுகளுக்கு முன்பாக சுவாமிக்குத் தேங்காய் உடைத்து, தீபாராதனை காண்பித்து வழிபட்டனர். குறிப்பாக கிளி வாகனத்தில் எழுந்தருளிய அம்பாளைக் காண பெண் பக்தர்கள் அதிகளவில் திரண்டிருந்தனர். சித்திரை திருவிழாவின் மிக முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (ஏப்ரல் 30, வியாழக்கிழமை) நடைபெற உள்ளது. இதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோவிலில் உண்டியல் காணிக்கை மூலம் ரூ. 69 லட்சம் வருவாய்

**திருச்சி, ஏப்.30:**

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாத சுவாமி கோவில் உள்ளது. 108 வைணவ திருத்தலங்களுள் முதல் திருத்தலமாக இந்த கோவில் திகழ்கிறது.



இந்நிலையில், அரங்கநாத சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துவிட்டு கோவில் உண்டியலில் பணம், தங்கம், வெள்ளி பொருகளை காணிக்கையாக செலுத்துகின்றனர். இந்த உண்டியல்கள் மாதம் தோறும் திறக்கப்பட்டு காணிக்கைகள் எண்ணப்படுகின்றன.

இந்நிலையில், அரங்கநாத சுவாமி கோவிலில் இன்று (28.04.2026) மாதாந்திர உண்டியல்கள் திறக்கப்பட்டு பக்தர்களின் காணிக்கைகள் கணக்கிடப்பட்டத்தில் ரூபாய் 69,93,601, தங்கம் 78.900 கிராம், வெள்ளி 840.200 கிராம், மற்றும் 283 வெளிநாட்டு ரூபாய் தாள்கள் எண்ணிக்கைகள் உண்டியல் காணிக்கை வருவாய் ஆக கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.






## நலம் தரும் மருத்துவம்

# காபி, டீ தரும் நன்மைகள்!

**தேநீர் (TEA) தரும் நன்மைகள்:**

தேநீர் இதய ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது; இது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் வராமல் தடுக்க உதவும். இதைச் சர்க்கரை இல்லாமல் குடித்தால், எடை இழப்பு மற்றும் வளர்சிதை மாற்றத்திற்கு (METABOLISM) மிகவும் உதவுகிறது. மேலும், தேநீர் நமக்கு ஒருவிதப் புத்துணர்ச்சி தருவதை நாம் அனைவரும் உணர்வோம்.

ஃபிளாவனாய்ட்ஸ் (FLAVONOIDS): டீயில் உள்ள ஃபிளாவனாய்ட்ஸ் ஒரு வரப்பிரசாதம். இது ரத்த அழுத்தத்தைக் குறைப்பதோடு, மாரடைப்பு அபாயத்தையும் குறைக்கிறது.

ஆன்டி-ஆக்சிடன்ட்கள்: இதில் உள்ள ஆன்டி-ஆக்சிடன்ட்கள் செல் (திசு) பாதுகாப்பு மற்றும் புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகின்றன.

பலன்கள்: எலும்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது; மதியை (புத்தியை) கூர்மையாக்குகிறது.

இன்று பால் இல்லாத தேநீர் வகைகள் மிகவும் பிரபலம் அடைந்து வருகின்றன. பிளாக் டீ, லெமன் டீ, மசாலா டீ, புதினா டீ, இஞ்சி டீ, ஏலக்காய் டீ, தேன் டீ எனப் பல ருசிகளில் இவை கிடைக்கின்றன. மக்கள் அதிக அளவில் லெமன் மற்றும் இஞ்சி டீயை விரும்பித் தேர்ந்தெடுத்து வருகிறார்கள்.

**காபி (COFFEE) தரும் நன்மைகள்:**

தேநீரைப் போலவே காபியும் உடல் நலத்திற்குப் பெரிதும் உதவுகிறது. காபி குடித்தால் உடலில் ஆற்றல் அதிகரிப்பதோடு, கவனக் கூர்மையும் (FOCUS) கூடும். இவை அனைத்தும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வெளியிட்ட தகவல்கள்!

பாதுகாப்பு: பார்க்கின்சன் நோய், அல்சைமர் மற்றும் கல்லீரல் பாதிப்புகளைத் தடுக்க காபி உதவுகிறது.

மூளை செயல்பாடு: இது மூளையைத் தூண்டி விழிப்புணர்வுடன் இருக்கச் செய்யும்; நினைவாற்றலை அதிகரிக்கும்.

இதய ஆரோக்கியம்: இதய ஆரோக்கியத்தைப் பேணுவதோடு, நீரழிவு நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படுவதையும் தடுக்கிறது.

கவனிக்க வேண்டிய ஒன்று: காபிக்குத் தூக்கத்தைத் தள்ளிப்போடும் குணம் உண்டு. எனவே, தூங்கச் செல்வதற்கு 5 மணி நேரத்திற்கு முன்னதாகவே காபி குடிப்பதை நிறுத்திவிட வேண்டும். எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு. டீ அல்லது காபியை ஒரு நாளைக்கு 3 முதல் 5 கப் வரை தாராளமாக ரசித்து, ருசித்துக் குடிக்கலாம். ஒரு நாளைக்கு 5 கப்பைத் தாண்டாமல் இருந்தால், அது எந்தவித அசௌகிரியத்தையும் தராது.

சந்தேகமில்லாமல், நமக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள் டீ & காபி!

# உங்கள் ஸ்மார்ட்போன் போதும்... ஆதார் முகவரியை நொடியில் மாற்றலாம்!

இந்தியாவின் டிஜிட்டல் அடையாள அட்டையான ஆதார், தற்போதைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு ஆவணமாக மாறியுள்ளது. வங்கிச் சேவைகள் முதல் அரசு நலத்திட்டங்கள் வரை அனைத்திற்கும் ஆதார் அவசியமாகிறது. பயனர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு, இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது.




இனி பொதுமக்கள் தங்களின் மொபைல் எண் மற்றும் முகவரியைப் புதுப்பிக்க ஆதார் சேவை மையங்களுக்கு நேரில் செல்லவேண்டிய அவசியமில்லை. தங்களுடைய ஸ்மார்ட்போன் மூலமாகவே சில நிமிடங்களில் இதைச் செய்து முடிக்கலாம். வாருங்கள். இது குறித்து விரிவான தகவல்களை இங்கு காணலாம்.

இந்திய அரசின் 'டிஜிட்டல் இந்தியா' திட்டத்தின் ஒருபகுதியாக, இந்தச் செயல்முறை மிகவும் எளிமையாக்கப் பட்டுள்ளது. குறிப்பாக, கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கும், வேலைப்பளு அதிகம் உள்ளவர்களுக்கும் இந்த வசதி ஒரு வரப்பிரசாதமாகும்.

புதிய அப்டேட் மூலம், பயோமெட்ரிக் கருவிகள் இல்லாமலேயே 'ஃபேஸ் அங்கீகாரம்' (FACE AUTHENTICATION) மற்றும் OTP முறை மூலம் மொபைல் எண் மாற்றத்தைச் செய்ய முடியும். இதன் மூலம் நீண்ட வரிசையில் காத்திருப்பது மற்றும் ஆவணங்களை நேரில் சமர்ப்பிக்கும் சிரமங்கள் தவிர்க்கப்படுகின்றன.

மொபைல் எண்ணை ஆன்லைனில் மாற்றுவது எப்படி?

உங்கள் மொபைல் எண்ணைப் புதுப்பிக்க, முதலில் உங்கள் ஸ்மார்ட்போனில் அதிகாரப்பூர்வமான ஆதார் செயலியை (MAADHAAR APP) பதிவிறக்கம் செய்யவேண்டும். செயலியைத் திறந்து, அதில் உள்ள 'UPDATE MOBILE NUMBER' என்ற விருப்பத்தைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர், நீங்கள் இணைக்க விரும்பும் புதிய மொபைல் எண்ணை டைப் செய்ய வேண்டும். அந்த எண்ணிற்கு வரும் OTP-யை உள்ளீடு செய்து சரிபார்க்கவும். இறுதிப் படியாக, உங்கள் முகத்தை ஸ்கேன் செய்யும் 'FACE AUTHENTICATION' முறையை முடித்தவுடன் உங்கள் கோரிக்கை சமர்ப்பிக்கப்படும். மேலும், உங்கள் ஆதார் அப்டேட் எந்த நிலையில் உள்ளது என்பதை செயலியிலேயே கண்காணித்துக் கொள்ளலாம்.

முகவரியை மாற்றம் செய்யும் வழிமுறை:

முகவரி மாற்றத்தைப் பொறுத்தவரை, உங்களிடம் முறையான ஆவணங்கள் இருந்தால் மிக விரைவாகச் செய்துவிடலாம். செயலியில் லாகின் செய்த பிறகு, 'SERVICES' பகுதிக்குச் சென்று 'ADDRESS UPDATE' என்பதைத் தேர்ந்தெடுக்கவும். உங்கள் குடும்பத் தலைவரின் (HEAD OF FAMILY) ஆதாரைப் பயன்படுத்தியோ அல்லது உங்களிடம் உள்ள முகவரிச் சான்றுகளைப் பதிவேற்றியோ மாற்றங்களைச் செய்யலாம். புதிய முகவரி விவரங்களை உள்ளிட்டு, தேவையான ஆவணங்களை ஸ்கேன் செய்து அப்லோட் செய்யவேண்டும். இதற்கு கட்டணமாக ₹75 செலுத்த வேண்டியிருக்கும். பணம் செலுத்திய பின், UIDAI அதிகாரிகள் உங்கள் விவரங்களைச் சரிபார்த்து சில நாட்களில் அப்டேட் செய்துவிடுவார்கள்.

இந்த ஆன்லைன் முறையினால் கால விரயம் தவிர்க்கப்படுகிறது. அலுவலகங்களுக்குச் சென்று அலையவேண்டிய தேவையில்லை என்பதால் பயணச் செலவுகளும் குறைகின்றன. ஃபேஸ் ஆதென்டிகேஷன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால், இது மிகவும் பாதுகாப்பானதாகவும், முறைகேடுகளுக்கு இடமளிக்காத வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஆதார் விவரங்கள் துல்லியமாக இருப்பது ஏன் முக்கியம் என்றால் கேஒய்சி (KYC) சரிபார்ப்பு மற்றும் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கு இதுவே அடிப்படை. முகவரியோ அல்லது மொபைல் எண்ணோ தவறாக இருந்தால், அரசு வழங்கும் மானியங்கள் மற்றும் இதர சலுகைகள் உங்களுக்குக் கிடைப்பதில் சிக்கல் ஏற்படலாம். குறிப்பாக, ஆன்லைன் சேவைகளைப் பயன்படுத்தும் போது பழைய மொபைல் எண் பயன்பாட்டில் இல்லை என்றால், உங்களால் ஓடிபி-யைப் பெற முடியாது.

எனவே,தடையற்ற சேவைகளைப் பெற உங்கள் ஆதாரைப் புதுப்பித்து வைத்திருப்பது அவசியமாகும்.

கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், அதிகாரப்பூர்வமான ஆதார் செயலியை மட்டுமே பயன்படுத்துங்கள்.

பாதுகாப்பற்ற இணைய தளங்களிலோ அல்லது செயலிகளிலோ உங்கள் ஆதார் எண்களைப் பகிரவேண்டாம். இந்த வசதியைப் பயன்படுத்தி உங்கள் ஆதாரை மேம்படுத்தி, டிஜிட்டல் சேவைகளைத் தடையின்றி அனுபவியுங்கள்.

# விஷம்




தூத்துக்குடியின் அனல் காற்று வீசும் அந்த மதிய வேளையில், தர்மலிங்கத்தின் உரக்கடை பரபரப்பாக இருந்தது. கடையில் வேலை பார்க்கும் ரமேஷ், மூட்டை தூக்குவதும் பில் போடுவதுமாக சுழன்று கொண்டிருந்தான். அப்போதுதான் கடையின் ஒரு மூலையில், தூணுக்குப் பின்னால் வெகுநேரமாக நின்றுகொண்டிருந்த அந்தப் பெண்ணை கவனித்தான். வாடிய முகம், கலைந்த தலைமுடி, யாரோ துரத்துவது போன்ற ஒருவித அச்சம் அவளது விழிகளில் தெரிந்தது. "அக்கா, ரொம்ப நேரமா நிக்கிறீங்க... என்ன வேணும்?" என்றான்.

"விஷம்..." என்றாள் ஜெயந்தி, வெறித்த பார்வையுடன். ரமேஷ் அதிர்ந்துபோக, உடனே சுதாரித்தவள், "இல்லை... எலி விஷம்," எனச் சமாளித்தாள். ஆனால், அவள் கண்கள் பொய் சொல்லவில்லை. ரமேஷ் அந்தப் பார்வையின் வலியைப் புரிந்துகொண்டான். ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்பதை உணர்ந்த ரமேஷ், முதலாளியிடம் அனுமதி பெற்று அவளை அருகிலுள்ள பேருந்து நிலையத்திற்கு அழைத்துச் சென்றான். ஒரு தண்ணீர் பாட்டிலை வாங்கிக் கொடுத்துவிட்டு, "அக்கா, நான் உங்க தம்பி மாதிரி. என்ன விஷயம்னு சொல்லுங்க," என்றான்.

அணை உடைந்த வெள்ளமென அவள் அழத் தொடங்கினாள். அவள் பெயர் ஜெயந்தி. கணவர் மறைவுக்குப் பின் அவர் பார்த்த வேலையில் இவள் சேர்ந்திருக்கிறாள். ஆனால், கணவனின் நண்பர்களாக இருந்தவர்களே இப்போது அவளை வேட்டையாடும் ஓநாய்களாக மாறியிருக்கிறார்கள். மேலதிகாரிகளின் பாலியல் தொல்லைகளும், அதற்கு இணங்காவிட்டால் வேலையை விட்டுத் தூக்கிவிடுவோம் என்ற மிரட்டலும் அவளை தற்கொலை விளிம்பிற்குத் தள்ளியிருந்தது. "என் கணவர் போனதுக்கு அப்புறம் இந்த உலகம் என்னை ஒரு மனுஷியாவே பாக்கல தம்பி. வேலை செய்யுற இடத்துல பாலியல் தொல்லை குடுக்குறாங்க. 'இணங்கலைன்னா உன் மேல தப்பா போஸ்ட் போடுவோம், மிரட்டிப் பணம் பறிக்கிறதா சொல்லி உன் மானத்தை வாங்குவோம்'னு மிரட்டுறாங்க. எனக்கு வேற வழி தெரியல தம்பி..." என்றாள்.

"அக்கா, பயம் இருக்குற இடத்துல தான் அராஜகம் அதிகமா இருக்கும். நீங்க சாகுறது அவங்களுக்கு வெற்றி. ஆனா நீங்க நிமிர்ந்து நிக்கிறது தான் அவங்களுக்குத் தண்டனை. நான் சொல்றதைச் செய்யுங்க..." என்றான். ரமேஷ் அவளுக்கு ஒரு திட்டத்தைச் சொன்னான். அது வெறும் தற்காப்பு அல்ல, எதிரிகளை நிலைகுலையச் செய்யும் ஒரு வியூகம். ஜெயந்திக்கு ரமேஷின் வார்த்தைகள் ஒரு புதிய தெம்பைக் கொடுத்தன. சில வாரங்கள் கழித்து, அதே உரக்கடைக்கு ஒரு பெண் கம்பீரமாக நடந்து வந்தாள். அது ஜெயந்தி! அவள் முகத்தில் பழைய அச்சம் இல்லை, மாறாக ஒரு தெளிவு இருந்தது. "தம்பி ரமேஷ், அன்னைக்கு நீ சொன்ன மாதிரியே செஞ்சேன். அவங்க என்கிட்ட தப்பா பேச வந்தப்பவே, 'எல்லாம் ரெக்கார்ட் ஆகுது, போலீஸ்ல கொடுத்தா உங்க குடும்பம் என்னாகும்னு யோசிங்க'னு சத்தமா சொன்னேன். பயந்துட்டாங்க தம்பி! இப்போ எல்லாரும் ஒரு அடி தள்ளி நிக்கிறாங்க. எனக்கான மரியாதையை நானே தேடிக்கிட்டேன்," என்று நெகிழ்ச்சியுடன் கூறினாள். எப்போதெல்லாம் அந்த உரக்கடையைக் கடந்து செல்கிறாளோ, அப்போதெல்லாம் தன் உடன்பிறவா தம்பியான ரமேஷுக்கு மனதார நன்றி கூறிக்கொள்கிறாள்.

தற்கொலை தீர்வல்ல; துணிச்சலே தீர்வு!



-மை. சத்திய பாரதி

# திகில் அல்ல தியாகமே!!



ஸ்வீட்டி!! இன்னிக்கு டின்னர் வெளில.. நான் வர லேட்டாகும்.. நீ சாப்பிட்டு தூங்கிடு மா.. என்கிட்ட ஒரு சாவி இருக்கு என்ன.. என்ற கணவனிடம், "சரிங்க" என்று சிணுங்கி விட்டு திரும்பியவள் "பயங்கர பசி மா.. சாப்பிட என்ன இருக்கு" என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தவனைப் பார்த்து அதிர்ந்தாள்... ஆமாம் வந்தவன் பிரதீப் . மதுரிமாவின் கணவன் சஞ்சய்யுடைய சஞ்சயுடைய பெரியப்பா மகன் . மதுரிமாவும் சஞ்சய்யும் நிச்சயதார்த்தம் முடிந்த பின் ஓரிரு முறை காபி ஷாப்பில் அமர்ந்து பேசி கொண்டிருந்த போது அங்கு வந்து பேசினான் .அப்போது சஞ்சய் கோபத்துடன் முகம் திருப்பி கொண்டு அங்கிருந்து மதுரிமாவை கூட்டி கொண்டு வேறு ஹோட்டலுக்கு சென்று விட்டான் .

அப்போது பிரதீப்பை பற்றி கூறினான் . 15 வயதிருக்கும் போதே காதல் விவகாரத்தில் சிக்கி , ஒரு பெண்ணை கூட்டி கொண்டு ஓடி விட்டான். அக்கா கல்யாணத்திற்கு வைத்திருந்த பணத்தை எடுத்து கொண்டு , கூட்டு குடும்பத்தில் இருந்த தன் தந்தை நிலம் வாங்க வைத்திருந்த பணத்தையும் திருடி கொண்டு ஓடி விட்டதாக சொன்னார்கள். பின்னரும் ஏதோ ஒரு காரணம் கூறி அவர் பெரியம்மாவை ஏமாற்றி அவ்வப்போது பணம் வாங்கி சென்றதாக வேறு கூறி கோபமாக சொல்லி கொண்டிருந்தது ஞாபகம் வந்தது .

அதிலும் கடைசியாக சஞ்சயின் பெரியம்மா இறந்த போது செத்த வீட்டில் கூட இந்த பிரதீப் பணம் திருடியதாக , அதை சஞ்சயின் சித்தி கையும் களவுமாக பிடிபட்டதாகவும் கூறி அதுதான் கடைசியாக நாங்கள் பிரதீப்பை பார்த்தது . அவன் ஒரு கிரிமினல் என்று கூறி விட்டான்

அதிலிருந்து மொத்தமாக குடும்பம் அவனை ஒதுக்கி விட்டது.

அதனால் நீ அவனை எங்காவது பார்த்தால் கூட நகர்ந்து விடு . என் உறவென்று கூறி உன்னிடம் ஏதாவது ஏமாற்றி விட போகிறான் என்று சொல்லி இருந்தான் சஞ்சய் . கணவன் கூறியதை நினைவு கூர்ந்து அச்சச்சோ ...அந்த பிரதீப் இங்கு வந்து இருக்கான் !!!! எப்படி ?

பூட்டிய கதவை எப்படி திறந்து கொண்டு வந்தான் ? அச்சச்சோ நான் இப்போது என்ன செய்வேன் என ஒரு நிமிடம் மதுரிமா மிக கலங்கி , பயந்து , மனம் எதிலும் ஒட்டாமல் PRESENCE OF MIND தொலைந்தார் போன்றே நினைத்தாள் !!!

அந்த நேரம் சட்டென்று ஒன்றும் பேசாமல் பக்கத்தில் உள்ள ரூமிற்கு சென்று கதவை சாற்றி கொண்டாள் . உதவிக்கு தங்கை அம்ரிதாவை கூப்பிடலாம் என்று போனை கையில் எடுக்கும் போது அவளது தங்கையே போனில் கூப்பிட்டாள் .

அம்ரிதா எனக்கு பயமாக உள்ளது என்று நடுங்கிய குரலில் மதுரிமா தங்கையிடம் கூறினாள் .அப்போது இங்கே திடீர்னு என் கணவரின் ஒரு உறவுக்கார கிரிமினல் பிரதீப் வந்து பசி என்கிறான் என்று கூறி , எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை என்றாள் .

அரசாங்க சிறையின் மருத்துவமனையில் நர்ஸாக பிஸியோதெரபிஸ்டாக இருக்கும் தங்கை மதுரிமாவிடம் பயப்படாதே .... மனிதாபிமானபடி முதலில் நீ இருக்கும் இடத்தில இருந்தே அவனை டைனிங் டேபிளில் இருக்கும் சாப்பாடை சாப்பிட சொல் ...பசி என்று தானே கேட்கிறான் , சமாளி அதற்குள் நான் வருகிறேன் என்று கூறினாள் .

20 நிமிடங்களில் அங்கு வந்த அம்ரிதா பிரதீப்பை பார்த்து அதிர்ந்தாள் ...ஏனெனில் அம்ரிதாவின் CLASSMATE கணவன்தான் இந்த பிரதீப் . உண்மையில் பிரதீப் ஒரு தவறும் செய்யாதவன் . அம்ரிதாவின் தோழி சந்தியாவை அவர்கள் பள்ளி லேப் ATTENDER கெடுத்து விட்டான் அவள் SUCIDE அட்டெம்ப்ட் பண்ணிய போது சீனியர் ஸ்டுடென்ட்டான பிரதீப் அவளை காப்பாற்றியதோடு அல்லாமல் அவளுக்கு வாழ்வளித்து , வேறொரு ஊருக்கு அழைத்து சென்று தான் கெட்ட பெயர் வாங்கி அவளது குழந்தைக்காக டிரைவர் வேலை பார்த்து கொண்டு இருக்கிறான் .

நிச்சயம் அவனது அம்மா இருக்கும் வரை தாயின் உதவியோடு நிம்மதியும் இருந்தது பிரதீப்பிற்கு . அவனது குடும்பம் அவனை ஒரு ரௌடியாக சித்தரித்து வாழ்க்கையை அழித்து விட்டது .உண்மையில் பிரதீப் நல்லவன் என்றாள் அம்ரிதா .

மதுரிமாவிற்கு ஆச்சர்யம் சந்தேகம் எல்லாம் இருந்தது ...பிரதீப்பை பார்த்து பூட்டி இருந்த வீட்டில் வந்தது எப்படி என்றாள் ?

சிஸ்டர் ...நீங்கள் பூட்டவே இல்லை நான் சவாரி ஏற்றி வந்தவரை பக்கத்து வீட்டில் இறக்கி விட்டு திரும்பும் போது உங்கள் கணவருக்கு நீங்கள் கையசைத்து உள்ளே வந்ததை பார்த்து , உங்கள் மூலமாவது என்னை பற்றி கூறலாம் என்று வந்தேன் .... கதவை தட்ட தொடும் போது தானே திறந்து கொண்டது ...உங்கள் கவனம் ஈர்க்கவே பசி என்றேன் !!!

அம்ரிதா தன் தோழியின் போட்டோவை மொபைலில் காண்பித்து பிரதீப் அவளது குழந்தை ஜானகி படத்தையும் காண்பித்து அனைத்தும் கூறினாள் . அவளை கெடுத்து சீரழித்த லேப் அட்டெண்டர் ஒரு ACCI-DENT இல் இறந்ததால் தன தோழி கவிதாவிற்கு பிரதீப் கணவனானான் .

பிரதீப் வாழ்க்கை நிஜத்தில் குற்றத்தில் அல்ல தியாகத்தில் என்பதை அம்ரிதா மூலம் அறிந்த மதுரிமா சஞ்சயிடம் கூறி உறவை சேர்த்ததை கூறவும் வேண்டுமோ !!!

திகில் அல்ல தியாகமே !!



-செல்லம் சேகர்
கோவை

# Boomer to Gen Z

பாகம் 28



**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்.**

கோமதி என்றொரு சகாப்தம் முடிந்தது. மூன்று தலைமுறைகளுடன் வாழ்க்கை நடத்திய உன்னத பிறவி. பலருக்கும் வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தவள். பலரை வாழ வைத்தவள். பஞ்சு ஐயர், பார்வதி, கல்யாணி, வரதன், வாசு, ஹரி, மாலு, சுந்தரி மற்றும் துணை தேவதைகள், பண்ணையாட்கள் என கூட்டமாய் வாழ்ந்தவள். அமைதியானவள். ஆடம்பரம் அதிகம் இல்லாத அழகானவள்.

எப்பேர்ப்பட்ட மனுஷி! எத்தனை நாட்களுக்கு எத்தனை பேர் நினைவு வைத்துக் கொள்ளப் போகிறோம்? சுவர்க்கம், நரகம் என்பதெல்லாம் எந்த அளவுக்கு உண்மை? தெரியவில்லை. ஹரிக்கு அம்மாவின் பிரிவு நிறைய சொல்லித்தந்தது. ஏன் அவன் மனைவி சித்ராவே அசந்து போய்விட்டாள். கிராமத்தில் கோமளத்தின் இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களும், அவர்கள் கூறிய புகழாரங்களும், பிரியா விடைத் தந்த ஊர்க்காரர்களும் சித்ராவை உலுக்கியது எனலாம். இப்பேர்ப்பட்ட மனுஷியா தனது மாமியார் என்று ஆச்சர்யப்பட்டாள். தனி மனுஷியாய் அத்துனை பேரையும் அன்பால் கட்டிப் போட்டிருக்கிறாள்.

"இனியாரும் வருவரோ இட்டு நிரப்ப உன் இடத்தை" என்பதைப் போல் ஹரி,மாலு, சுந்தரி மூவரும் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டனர்.

ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? எத்துனை பாசமும் நேசமும் வைத்திருந்தாலும் நம்மில் பாதியாய் வாழும் உறவுகளும், நமக்காகவே வாழும் உறவுகளும் நம்மைப் பிரியும் போது விடை கொடுத்து அனுப்புவதை தவிர வேறு வழியில்லை. ஆராத ரணங்கள் தான். தாங்கித்தான் ஆகவேண்டும். நாமும் ஒரு நாள் மடியத்தான் போகிறோம். நமக்காக நான்கு பேராவது வருத்தப்பட வேண்டும். இதுதான் நியதி.

காரியங்கள் முடிந்தது. மீண்டும் ஹரி மிச்ச மீதி சாமான்களை விற்க, வீட்டை வாடகைக்கு விட என கொஞ்ச நாட்கள் தங்க முடிவு செய்தான்.



தாய் மாமாக்கள் வயதானாலும் பாசத்தால் குறையவில்லை. அன்று இருந்த அதே அன்பு, கொஞ்சல்தான்.

சித்ராவின் இந்த முடிவு எல்லோரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. ஆம். கோமுவின் ஆப்தீகம் வரை ஹரியுடன் இங்கேயே தங்கி ஊன மாசியங்களை கிரமப்படி இங்கேயே செய்ய நினைத்தாள். ஆப்தீகம் ஆனதும் இங்கேயே தங்கிவிட்டதும் மாதவனுக்கு பாசத்துடன் சமைத்துப் போட்டுப் பார்த்துக் கொண்டதும் எல்லோருக்கும் ஆச்சர்யம்தான்.

மாலுவும் ஹரியும் போனில் பேசிக்கொண்டார்கள். அடுத்த வாரம் மாலுவின் பேத்தி இந்தியாவிற்கு வருவதாகவும், அவள் மேற்படிப்பிற்கு சில ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதற்காகவும் வருவதாகச் சொன்னாள்.

"இங்க வந்து என்ன எழுதப் போறா?" கேட்டான் ஹரி.

"கோவில்களும் தகவல்களும்" அப்டின்னு சொன்னா. ரொம்ப பிரசித்திப் பெறாத ஆனால் ஏதாவது அரிய சிறப்புகள் இருந்தா அதப்பத்தி எழுதப் போறாளாம். அவளோட பி.ஹெச்.டி.க்கு உதவுமாம். அப்பறம் அதையே வால்யூம் வால்யூமா புத்தகமாகப் போடப் போறாளாம்".

"ரொம்ப சந்தோஷமா இருக்கு மாலு. அவ மட்டும் வராளா?"

"இல்ல கூடவே ஒரு பொண்ணும், பையனும் வரானாம். ஆளுக்கொரு தீஸிஸ் எழுதப் போறா போல இருக்கு. எவ்வளவு நாள் தங்கறா, எல்லா விவரமும் சொல்றேன் சொன்னா ஹரி".

"ஓகே, பாத்துக்கோ. ஏதானும் உதவித் தேவைப்பட்டா சொல்லு".

"கேக்கறேன். அபிஷேக்கும் சித்ராவும் அரேஞ்ச்மெண்ட்ஸ் எல்லாம் பாத்துக்கறேன்னு சொன்னா. ஏதாவதுன்னா கண்டிப்பா சொல்றேன்".

போனை வைத்து விட்டு ஸ்பூர்த்தியுடன் வருவது யாராக இருக்கும்? அந்தப் பையன் வெள்ளக்காரனா? ஏதானும் ஏடா கூடமா? யோசனையில் ஆழ்ந்தாள். தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள், அப்படியெல்லாம் இருக்காது. நமக்கு ஏன் இப்பிடித் தோன்றது? இன்னும் நம்ப மாறவே இல்லையே! எதுக்காக மாறனும்? எல்லாம் கேள்வியும் நானே பதிலும் நானே பாணியில் யோசித்தவாறு தலைக்கு எண்ணெய் தடவி வாரிக் கொண்டு வந்தாள். பூஜையறையில் விளக்கேற்றி கொஞ்சம் வேண்டிக் கொண்டாள்.

தொடரும்...

# ஸ்ரீராமலட்சுமண கதை

ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் ஏற்ற பின் ராமரை பார்த்து ஆசிகூற அகஸ்திய மாமுனிவர் அயோத்திக்கு வருகை புரிந்தார்.

அகஸ்தியர் சபையில் அமர்ந்ததும் இராவண வதம் பற்றி விவாதிக்கலாயினர் அனைவரும்.

அப்பொழுது அகஸ்தியர் சபையினரை பார்த்து இராவண கும்பகர்ண வதத்தை விட லக்ஷ்மணன் ராவணன் மகன் மேகநாதனை வதைத்ததே மாபெரும் வீர செயல் என்றார் அகஸ்தியர். அதை கேட்டு அனைவரும் ஆச்சரியமாக அகஸ்தியரை பார்க்க ஸ்ரீராமர் ஏதும் அறியாதவர் போல் ஸ்வாமி எதை வைத்து அப்படி கூறினீர்கள். மேகநாதன் அவ்வளவு சக்தியுள்ளவனா என்று கேட்க,

அகஸ்தியர் ராமா எல்லாம் அறிந்தவன் நீ ஆனால் ஏதும் அறியாதவன் போல்

லக்ஷ்மணனின் பெருமையை என் வாயாலே கூறவேண்டும் என்றுதானே இப்படி அறியாதவன் போல் கேட்கிறாய், சரி நானே கூறுகிறேன் சபையோர்களே

இராவணன் மகன் மேகநாதன் தேவலோக அரசன் இந்திரனுடன் போர்புரிந்து அவனை வென்று சிறையில் அடைத்து வைத்தது யாவரும் அறிந்ததே.

நான்முக கடவுளான பிரம்மா இந்திரனை விடுவிக்க மேகநாதனிடம் கோரிக்கை வைக்க மேகநாதன் இந்திரனை விடுவிக்க வேண்டுமென்றால் தாங்கள் எனக்கு மூன்று அறிய வரங்கள் தர வேண்டும் என நிபந்தனை வைத்தான்.

அவை

1.பதினான்கு ஆண்டுகள் உணவு உண்ணாதவனும்,

2.அதே பதினான்கு ஆண்டுகள் ஒரு நொடி கூட உறங்காது இருப்பவனும்,

3.அதே பதினான்கு ஆண்டுகள் எந்த ஒரு பெண் முகத்தையும் ஏறெடுத்து பார்க்காது இருப்பவன் எவனோ அவனால் மட்டுமே எனக்கு மரணம் நிகழவேண்டும் என்று பிரம்மாவிடம் மூன்று அறியவரங்களை பெற்று இந்திரனை விடுவித்தான். அதனால் மேகநாதனை யாவரும் இந்திரஜித் என்று அழைத்தனர்.

இப்படி பட்ட மேகநாதனை வதம் செய்த பெருமை லக்ஷ்மணனையே சேரும் என்று கூறி முடிக்க,

இராமர் ஸ்வாமி லக்ஷ்மணன் என்னுடன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் இருந்த போது அவன் எந்த ஒரு மாதையும்(பெண்ணையும்) ஏறெடுத்து பார்த்ததில்லை என்பதை நான் அறிவேன்.

ஆனால் உணவும்



உறக்கமும் இல்லாமல் எப்படி இருந்திருப்பான் என்று கேள்வி எழுப்ப அகஸ்தியர் அனைத்தும் அறிந்து வைத்து கொண்டே கேட்கிறாயே சரி சற்று பொறு உன் கேள்விக்கான விடையை லக்ஷ்மணனிடமே கேட்டு தெரிந்து கொள்வோம் என்று கூறி லக்ஷ்மணனை அழைத்து வர ஏற்பாடு செய்தார்.

அகஸ்தியர் சபைக்கு வந்த லக்ஷ்மணன் அண்ணன் ராமரையும் குரு அகஸ்தியரையும் சபையோரையும் வணங்கிய பின் ராமர் தன் சந்தேகத்தை கேட்டார்

இலக்ஷ்மணா என்னோடு வனவாசம் இருந்தபோது எந்த பெண்ணையும் ஏறெடுத்து பார்க்காமையும் உணவு உண்ணாமையும் உறக்கம் கொள்ளாமையும் இருந்தாய் என அகஸ்தியர் கூறுகிறாரே எப்படி என சபையோர் முன் விளக்கமுடியுமா.?

இலக்ஷ்மணர் அண்ணா உங்களுக்கு நினைவு இருக்கலாம் ரிஷிமுக பர்வதத்தில் மாதா சீதையை தேடி அலைந்த போது மாதாவால் வீசப்பட்ட அணிகலன்களை சுக்ரீவன் நம்மிடம் காட்டும்போது அன்னையின் பாத அணிகலன்களை தவிர வேறு எதுவும் என்னால் அடையாளம் காண முடியவில்லை, காரணம் அன்னையின் பாதத்தை மட்டுமே பார்த்து நான் தினமும் வணங்குவேன்.

அதனால் பாத அணிகலன்களை மட்டுமே என்னால் அடையாளம் காணமுடிந்தது.

அடுத்து வனவாசத்தின் போது நீங்களும் மாதாவும் இரவில் உறங்கும்போது நான் காவல் புரியும் நேரம் நித்ராதேவி என்னை ஆட்கொள்ள வரும் நேரம் நான் நித்ராதேவியிடம் ஒரு வரம் கேட்டேன்.

அம்மா என் அண்ணன் ராமரையும் என் அண்ணியான மாதா சீதா தேவியையும் பாதுகாக்கவே நானும் அண்ணனோடு வனவாசம் வந்துள்ளேன். அதனால் எங்கள் வனவாசம் முடியும் வரை என்னை நீ ஆட்கொள்ளவே கூடாது.

இந்த வனவாசம் முடியும் வரை எனக்கு உறக்கமே வரக்கூடாது என வேண்டிக்கொண்டேன் நித்ராதேவியும் என் வேண்டுதலுக்கு செவி சாய்த்து என்னை பதினான்கு ஆண்டுகள் ஆட்கொள்ள மாட்டேன் என வரமளித்தாள். அதனால் எனக்கு உறக்கம் என்பதே இல்லாமல் இருந்தது வனவாசத்தின் போது.

மூன்றாவது நம் குருநாதராகிய விஸ்வாமித்திரர் நம் உடல் சோர்வு அடையாமல் இருக்கவும் பசியே எடுக்காமல் இருக்கவும் பலா அதிபலா என்னும் மிகவும் சக்தி வாய்ந்த காயத்திரி மந்திரத்தை நம் இருவருக்கும் அவரது யாகம் வெற்றி பெற காவல் புரிந்ததற்காக உபதேசித்தார். அந்த பலா அதிபலா மந்திரத்தை தினமும் உச்சரித்தே எனக்கு பசி ஏற்படாமலும் உடல் சோர்வு அடையாமலும் பார்த்துக்கொண்டேன் என்று கூற சபையினர் எல்லோருமே லக்ஷ்மணனை ஆச்சிரியமாக பார்க்க ஆஞ்சநேயர் அயர்ந்தே போனார்.

இலக்ஷ்மணின் இராம பக்தியை நினைத்து ராமர் அரியணையை விட்டு இறங்கி வந்து லக்ஷ்மணனை கண்ணீருடன் ஆரத்தழுவி கொண்டார்.



**எம் .எல். பிரபா**
ஆதம்பாக்கம்.
சென்னை

# தினம் ஒரு தலைவர்கள் நாராயண் பலேகர் வரலாறு

நாராயண் பலேகர் (23 ஜூலை 1927 - 25 ஜூலை 2006) கோவா விடுதலை இயக்கத்தில் பங்கேற்ற ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்தார். அவர் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் (AI-TUC) கோவா மாநில கவுன்சிலின் தலைவராக இருந்தார். அவர் கோவா மக்கள் கட்சியின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார், அதன் சில உறுப்பினர்கள் பின்னர் கோவாவில் ஜார்ஜ் வாஸ் மற்றும் எஸ். ஏ. டாங்கே ஆகியோருடன் சேர்ந்து CPI ஐ உருவாக்கினர்.

ஆரம்பகால வாழ்க்கை நாராயண் விட்டல் பலேகர் ஜூலை 23, 1927 அன்று போர்த்துகீசிய கோவாவின் சால்செட் தாலுகாவில் உள்ள டிராமபூரில் விட்டல் நாராயண் பலேகருக்குப் பிறந்தார். அவர் தனது முதுகலைப் பட்டத்தையும் எல்.எல்.பி.யையும் முடித்தார்.

தேசியவாத இயக்கம் 1946 ஆம் ஆண்டில், பலேகர் மற்றும் விஸ்வநாத் லாவண்டே ஆகியோர் கோவா வெல்ஹாவில் ஒரு சிறிய குழுவை உருவாக்கினர், அவர்கள் தேசபக்தி பாடல்கள் மற்றும் போவாடாக்களைப் பாடினர். 1946 நவம்பர் 18 அன்று கோவா வெல்ஹாவின் மைனேயில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தபோது, பலேகர் சுமார் மூன்று வாரங்கள் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டார். 1945 முதல் 1947 வரை, அவர் கோவாவில் எம்.என். ராயின் தீவிர ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருந்தார். 1947 மற்றும் 1948 க்கு இடையில், அவர் பம்பாயில் கட்சியில் சேர்ந்தார். கோவாவில் இருந்தபோது, அவர் 1946 இல் டி.பி. குன்ஹாவின் கோவா இளைஞர் கழகத்தில் சேர்ந்தார் மற்றும் 1946 மற்றும் 1948 க்கு இடையில் கோவாவின் தேசிய காங்கிரஸின் ஒரு பகுதியாக இருந்தார்.

1948 மற்றும் 1961 க்கு இடையில், பலேகர் கோவா மக்கள் கட்சியின் (GPP) ஒரு பகுதியாக இருந்தார். அவர் 1948 மற்றும் 1954 க்கு இடையில் செயலக உறுப்பினரானார், பின்னர் 1954 மற்றும் 1960 க்கு இடையில் அதன் பொதுச் செயலாளரானார்.

1954 ஆம் ஆண்டில், பலேகர், மரியோ ரோட்ரிக்ஸ் மற்றும் ஜார்ஜ் வாஸ் ஆகியோருடன் சேர்ந்து, நாகர் ஹவேலியில் 60 க்கும்



மேற்பட்ட கிராமங்களைக் கைப்பற்ற ஜிபிபியின் தன்னார்வலர்களை வழிநடத்தினார். இது ஆசாத் கோமந்தக் தளத்தின் தன்னார்வலர்கள் மற்றும் கமாண்டோக்களால் முழுமையாக விடுவிக்கப்படுவதற்கு முன்பு நடந்தது. பலேகருக்கு எதிராக ஒரு கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது, இதற்காக அவர் இல்லாதபோது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பலேகர் ஜெரால்ட் பெரேராவுடன் சேர்ந்து ஜிபிபியின் வெளியீடான கோன் ஏஜை எட்டு ஆண்டுகள் வெளியிட்டார். 1954 ஆம் ஆண்டில் சில காலம் ஜிபிபியின் தலைமையகத்தை பெல்காமுக்கு மாற்ற அவர் பணியாற்றினார், பின்னர் அதன் பொதுச் செயலாளரானார்.

பலேகர் போராட்டங்களை ஒழுங்கமைக்கவும் தேசியவாதிகளை வழிநடத்தவும் கோவாவுக்கு ரகசியமாக வருகை தருவார். வி.கே. சித்தாலே தலைமையிலான 1954 ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தில், பலேகர் கோவா விமோச்சன் சஹாயக் சமிதியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார்.

போர்த்துகீசிய காலனிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளுக்கு தலைமை தாங்கிய கோவா நடவடிக்கை கவுன்சிலின் உறுப்பினராக இருந்தார். விஜய் நடவடிக்கையின் போது, எல்லையில் உள்ள ராணுவ வீரர்களுக்கு பொதுமக்களின் ஆதரவை உருவாக்க உதவுவதற்காக ஒரு குடிமக்கள் குழுவை அவர் ஏற்பாடு செய்தார். டிசம்பர் 18, 1961 அன்று, ராணுவ வீரர்களுடன் கோவாவிற்குள் நுழைந்தார்.

கோவா விடுதலைக்குப் பிறகு பலேகர் பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சிலில் உறுப்பினரானார் மற்றும் கோவாவில் அதன் பொதுச் செயலாளராக இருந்தார். 1948 மற்றும் 1964 க்கு இடையில் பம்பாயில் அரசு ஊழியராகப் பணியாற்றியபோது, 1954 க்குப் பிறகு தொழிற்சங்கவாதியாகவும், சிபிஐ ஊழியராகவும் பணியாற்றினார்.

1989, 1991 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் சிபிஐ வேட்பாளராக தெற்கு கோவா மக்களவைத் தொகுதியில் இருந்து பலேகர் தேர்தல்களில் போட்டியிட்டார், ஆனால் வெற்றி பெறவில்லை.

# "கர" கொண்டாடப்படும்...! இயக்குநர் மாரி செல்வராஜ்



'போர் தொழில்' படத்தின் மூலம் பிரபலமான இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் தற்போது தனுஷ் நடித்துள்ளப் படம் கர. இப்படத்தில் தனுஷுடன் நடிகர்கள் ஜெயராம், ரவிக்குமார், கருணாஸ், மமிதா பைஜு ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஜி.வி. பிரகாஷ் குமார் படத்திற்கு இசையமைத்துள்ளார். வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கே. கணேஷ் இப்படத்தைத் தயாரித்துள்ளார். இப்படத்திற்கு தணிக்கைக் குழு 'யு/ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளது. வரும் 30ஆம் தேதி படம் வெளியாக உள்ளது.
இதற்கிடையே, கர படத்தின் ப்ரிவ்யூ ஷோ இன்று திரையிடப்பட்டது. படத்தை பார்த்த பிறகு செய்தியாளர்களை சந்தித்த இயக்குனர் மாரி செல்வராஜ் கூறியதாவது:-
இப்போது தான் 'கர' பார்த்து முடித்தேன். சரியான சொற்களில் சொல்ல வேண்டுமென்றால் மிக சிறந்த திரை அனுபவத்தை, திரை சிலிர்ப்பை, திரை நெகிழ்வை, திரை சிந்தனையை, திரை விறுவிறுப்பை எனக்குள் தூண்டிவிட்ட நம்பிக்கையான படமாக இருந்தது.

நேற்று பார்த்து உலுக்கிய ஒடிசாவின் ஜித்து முண்டாவின் முகத்தை இன்று திரையில் கரசாமியாக நெஞ்சுக்குள் கொண்டு வந்து உசுப்பிய தனுஷ் சாருக்கு அவ்வளவு நன்றியையும் அன்பையும் சொல்ல தோன்றுகிறது.

அத்தோடு இப்படியான ஒரு படத்தை உருவாக்கிய ஒட்டுமொத்த படக் குழுவுக்கும் என் நன்றியும் அன்பும். கர கொண்டாடப்படும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் சின்னத்திரையில் முக்கிய தொகுப்பாளர்களில் ஒருவராக இருப்பவர் அஞ்சனா. அவர் டிவி ஷோ மட்டுமின்றி பட விழாக்கள், விருது விழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கி வருகிறார். அவருக்கு தற்போதும் அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள். அதற்கு காரணம் இப்போதும் அவர் அதே லுக்கில் இருப்பது தான். அஞ்சனா தற்போது ஹாட் உடையில் போஸ் கொடுத்து கிளாமராக போட்டோஷூட் எடுத்த ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

# பிரபல இசையமைப்பாளர் மீது பாடகி பாலியல் புகார்



7 ஆண்டுகளுக்கு முன்னர் தன்னிடம் இசையமைப்பாளர் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக தமிழ் திரையுலகை சேர்ந்த பாடகி ஸ்வாகதா கிருஷ்ணன் யூடியூப் தளத்திற்கு பேட்டி அளித்தபோது புகார் தெரிவித்துள்ளார்.
இசையமைப்பாளரின் ஸ்டுடியோவிலேயே கடவுளின் பெயரை சொல்லி இசையமைப்பாளர் தன்னிடம் அத்துமீறியதாகவும் அவர் குற்றச்சாட்டினார்.

பாலியல் அத்துமீறலுக்கு பின்னரே சென்னையை விட்டு ரிஷிகேஷ் சென்றுவிட்டதாக அவர் தெரிவித்தார்.
தேவைப்பட்டால் இசையமைப்பாளரின் பெயரை வெளியிட போவதாகவும், தன்னைப்போன்று பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாடகி தெரிவித்தார்.
பாடகி குற்றம்சாட்டி உள்ள இசையமைப்பாளர் 2010 காலகட்டத்தில் தமிழ் சினிமாவிற்குள் இசையமைப்பாளராக நுழைந்தவர் என்றும், ஆரம்ப காலகட்டத்திலேயே சிறந்த இசையமைப்பாளர் உள்ளிட்ட விருதுகளை வென்றவர் என்றும் தெரிவித்தார்.
தற்போது வெளியாகும் பல ஹிட் பாடல்களை இசையமைத்துள்ளார். மேலும் தமிழ், மலையாளம் மொழிகளில் சினிமா பாடல்களை இசையமைத்து வருகிறார் என்றும் பாடகி ஸ்வாகதா கிருஷ்ணன் தெரிவித்தார்.
குறிப்பிட்ட இளம் இசையமைப்பாளருக்கு பல பாடல்களை ஸ்வாகதா பாடி உள்ளார். சிசிடிவி பொருத்தப்பட்ட அறையில் இசையமைப்பாளர் அத்துமீறியதாக குற்றம்சாட்டிய அவர், சிசிடிவி காட்சிகளை வைத்து இசையமைப்பாளர் தன்னை மிரட்டியதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய சினிமாவை தாண்டி தற்போது ஹிந்தியிலும் முன்னணி நடிகையாக வலம் வருகிறார் நடிகை தமன்னா. அவரது கிளாமர் ஆன நடனத்திற்கு மிகப்பெரிய ரசிகர் கூட்டம் இருக்கிறது. அவர் ஒரு படத்தில் ஒரு பாட்டுக்கு மட்டும் டான்ஸ் ஆடினாலே அது மிகப்பெரிய ஹிட் ஆகிறது. நேற்று மும்பையில் நடந்த The Devil Wears Prada 2 படத்தின் திரையிடல் நிகழ்ச்சிக்கு தமன்னா வித்தியாசமான உடையில் வந்திருக்கும் ஸ்டில்கள் இதோ.



# ரத்னகுமாரின் '29' க்ளிம்ஸ் வீடியோ வெளியீடு!




மேயாத மான் இயக்குநர் ரத்னகுமார் எழுத்து மற்றும் இயக்கத்தில் உருவாகி உள்ள காதல் திரைப்படம் 29. இப்படத்தில் விது மற்றும் ப்ரீத்தி அஸ்ரானி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

மாஸ்டர் மகேந்திரன், அவினாஷ், ஷெனாஸ் பாத்திமா மற்றும் பிரேம் குமார் ஆகியோர் பிற கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். கார்த்திக் சுப்புராஜின் ஸ்டோன் பெஞ்ச் கிரியேஷன்ஸ் மற்றும் லோகேஷ் கனகராஜின் ஜி ஸ்குவாட் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இப்படத்தைத் தயாரித்துள்ளன.

இப்படத்திற்கு ஷான் ரோல்டன் இசையமைத்துள்ளார். இப்படத்தின் டீசர், பாடல்கள் எல்லாம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இப்படம் மே.8ஆம் தேதி வெளியாக உள்ளது. இந்நிலையில் இப்படத்தின் க்ளிம்ஸ் வீடியோ வெளியாகி உள்ளது.

# 2062-ல்தான் நிம்மதியாக தூங்குவேன்




சமீபகாலமாக நடிகை திரிஷா தலைப்பு செய்திகளில் தவறாமல் இடம்பிடித்து வருகிறார். அந்த வகையில் தற்போது அவர் வெளியிட்டுள்ள பதிவு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஒரு மணி நேரத்திற்கு தூக்கத்தை இழந்தால் அதனை ஈடுகட்ட சுமார் 4 நாட்கள் ஆகும். அப்படி கணக்கு பார்த்தால் 2062-ல்தான் நான் நன்றாக தூங்குவேன் என்று பதிவிட்டுள்ளார். அவரது பதிவு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதுமட்டுமின்றி திரிஷா பதிவு குறித்து கடும் விமர்சனங்கள் எழுந்து வருகிறது. திரிஷா மனஅழுத்தத்தில் இருப்பதாகவும், தூக்கமில்லாமல் தவிப்பதாகவும் ரசிகர்கள் கருத்துக்களை பதிவிட்டு வருகின்றனர்.

42 வயதான திரிஷாவுக்கு இன்னும் திருமணமாகவில்லை. அடிக்கடி அவரது திருமணம் குறித்து வதந்திகள் பரவி வரும் நிலையில் சமீபத்தில் தன்னைப் பற்றி வரும் திருமண செய்திகளுக்கு வேடிக்கையாக கருத்துக்களை வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'த்ரிஷ்யம் 3' டீசர் வெளியீடு!



இயக்குநர் ஜீத்து ஜோசப் இயக்கத்தில், மோகன்லால் நடிப்பில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றப் படம் த்ரிஷ்யம். இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாம் பாகம் எடுக்கப்பட்டது. அதுவும் வெற்றிப் பெற்றநிலையில் தற்போது மூன்றாம் பாகம், த்ரிஷ்யம் -3 உருவாகி உள்ளது.

முந்தைய பாகங்களைத் தொடர்ந்து, ஜார்ஜ்குட்டி மற்றும் அவரது குடும்பத்தினரின் வாழ்க்கையில் நடக்கும் விறுவிறுப்பான திருப்பங்களை இப்படம் விவரிக்கிறது.

இப்படத்தில் மோகன்லால், மீனா, அன்சிபா ஹாசன் மற்றும் எஸ்தர் அனில் ஆகியோர் முந்தைய பாகங்களில் நடித்த அதே கதாபாத்திரங்களில் மீண்டும் நடித்துள்ளனர்.
இப்படம் மே.21ஆம் தேதி வெளியாகிறது. இதன் ஓடிடி உரிமத்தை அமேசான் பிரைம் வீடியோவை தவிர வேறு நிறுவனங்களுக்கு விற்க டெல்லி உயர் நீதிமன்றம் தற்காலிகத் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் இப்படத்தின் டீசர் வெளியாகி கவனம் ஈர்த்துவருகிறது.

# 'படையப்பா' ரீரிலீஸ் வெற்றி: தேனப்பனுக்கு ரஜினி தங்கச் சங்கிலி பரிசு



1999-ம் ஆண்டு கே.எஸ்.ரவிகுமார் இயக்கத்தில் ரஜினி, சிவாஜி கணேசன், ரம்யா கிருஷ்ணன், சௌந்தர்யா உள்ளிட்ட பலர் நடிப்பில் வெளியான படம் 'படையப்பா'. இப்படத்தை அருணாச்சலா சினி கிரியேஷன்ஸ் நிறுவனத்தின் மூலம் தயாரித்திருந்தார் ரஜினி. இதில் இணை தயாரிப்பாளராக பணிபுரிந்தவர் தேனப்பன்.
கடந்த ஆண்டு ரஜினி பிறந்த நாளை முன்னிட்டு, 'படையப்பா' மறுவெளியீடு செய்யப்பட்டது. இதிலும் இப்படத்துக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. இதனைக் கொண்டாடும் விதமாக தற்போது தேனப்பனை அழைத்து 5 பவுன் தங்க செயின் ஒன்றை பரிசாக வழங்கியுள்ளார் ரஜினி. இந்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி இருக்கின்றன.

மேலும், 'படையப்பா' மறுவெளியீட்டிற்காக பேட்டியொன்றை கொடுத்திருந்தார் ரஜினி. அதில் நீலாம்பரி பார்வையில் இருந்து கதையொன்றை 'படையப்பா' 2-ம் பாகத்துக்காக தயாராகி வருவதாக கூறியிருந்தார். அப்படம் எப்போது தொடங்கும் உள்ளிட்டவற்றை ரஜினி தெரிவிக்கவில்லை.


Happy Birthday
L.SABHARISHWARAN


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home (Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041


Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Key Features
BANK LOAN
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
info@violetcollege.in www.violetcollege.in


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர்
to
செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


துபாயை தலைமையிடமாகக் கொண்டு தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756


WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617


EMI 50% 50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலாவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259


PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN
CONTACT: 8220711499, 8870158259


PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210


ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்படும் தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451


WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451


WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106




## நரகத்தில் இல்லை, நரகம்!

இனிப்பில் இன்பம் எளிது...
இதனால் உடல் ஆரோக்கியம்
அரிது கசப்பில் துவர்ப்பில்
யாரும் களிப்படைவது
இல்லை... காரணம்
அறிந்தோர் கணப் பொழுதும்
சோராமல் கடும் நலமாய்
வாழ்வார்... ஆனந்தம்
அள்ளும் ஆரவாரம்
அகிலப் பார்வைக்கு
அசத்தலாய் தெரியும்
ஆழ்ந்த பார்வைக்கு
அடிமட்டமாய் புரியும்.
சுற்றி வளைக்காமல்
சுருக்கமாய் சொன்னால்
வாழ்வின் சூத்திரம்
வசப்படாத வறுமைச்
சிந்தனையாளருக்கு
சுகபோகமே சொர்க்கம்...
சுத்த அர்த்தத்தில்
சரியாய் சொன்னால்
சுகங்கள் பொழியும்
சோளத்தட்டை
வாழ்க்கை
உள்ளீட்டு உறுதியே
இல்லாத
உதவாக்கரை வாழ்க்கை...
வாழும் வகையை
வகுத்து காட்டிய
வள்ளுவப் பெருந்தகை
துன்பப் படைகள் தான்
துல்லிய– தெள்ளிய
வாழ்க்கையை
துலங்க வைக்கும் என்று
உயரிய வரிகளில்
உரத்துச் சொன்னார்...
தோல்வி துயரங்களை
தொடர்ந்து தாங்கினால்
வேதனை நெருப்பில்
வேள்வியின் வீரியம்
விருட்சமாய் விளைந்து
ஓங்கும் வேத வாழ்வின்
மகத்துவம் வெளிச்சமாய்
விரிந்து விண்ணும் மண்ணும்
வியந்து போற்றும் வண்ணம்
என்றென்றும் நலமாய்
பொங்கும்! எல்லாம் முடியும்
என்பவனே...



என்னினிய இளைஞனே...
இறுதியாய் ஒரு வார்த்தை...
நரகத்தில் இல்லை நரகம்...
சொர்க்கத்தில் இல்லை
சொர்க்கம்!

**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்



## தேனிசைச் செல்லப்பா புகழுடம்பு எய்தினார்

தேனிசை செல்லப்பா!
விடுதலை புலிகளின்
தாகம் _தமிழீழத்
தாயகம் என்று போர்க்
குரல் முழங்கிய ஈழப்
போராளிகளின்
பாசறைப் பாணர்!
ஒட்டுமொத்த தமிழர்க்கும்
வீரம் ஊட்டிய அவரது
வெடிக்குரல் இன்று
ஓய்வெடுத்துக்கொண்டது.
நீள்துயிலில் ஆழ்ந்து
புகழுடம்பு எய்திய
இசைப்போராளியின்
மறைவுக்கு உலகத்
தமிழ்க் கழகம் ஆழ்ந்த
இரங்கலையும் வீர
வணக்கத்தையும்
தெரிவித்துக்கொள்கிறது.

**இல.நிலவழகன்,** தலைவர்
**செ.சி.இளந்திரையன்,**
பொதுச் செயலாளர்
உலகத் தமிழ்க் கழகம்.

1. புகழ்ச்சியில் வாழ்பவனுக்கு
தான் பிறர் துணை தேவை
முயற்சியில் வாழ்பவனுக்கு
தன்னம்பிக்கை தான் துணை

2. கெட்ட பழக்கம் உள்ளவன்
திருந்த அதிக வாய்ப்பு
உள்ளது ஆனால் கெட்ட
எண்ணங்கள் உள்ளவன்
திருந்த வாய்ப்பு குறைவு

3.பிறருக்கு தேவைப்படும்
போது நீ ஏணி
தேவை முடிந்தால்
தேவையில்லாத ஆணி
இதை புரிந்தால் நீ ஒரு ஞானி

4. மனிதன் நிம்மதியாக
இருக்கும்போது
கடவுள் கல்லாக தெரிகிறார்
ஒரு மனிதன் நிம்மதி
இல்லாமல் இருக்கும் போது
கல் கடவுளாக தெரிகிறது

5.வார்த்தைகள்
ஏதும் இன்றி
அன்பை
வெளிப்படுத்தும்
ஒரே மொழி
புன்னகை

1. வீட்டுக்கு அழைத்து
உணவு கொடுத்தால் அது
விருந்தாகும் கேட்டபின்
கொடுத்தால் அது
பிச்சையாகும் இருக்கும் இடம்
சென்று தேடிக் கொடுத்தால்
அது தர்மமாகும் யார் என்று
தெரியாமல் கொடுத்தால் அது
தானமாகும்

2. மனசை நான்கு பக்கமும்
அலைய விட்டால் எந்தப்
பக்கமும் முன்னேறி செல்ல
முடியாது

3. குப்பைகள் இல்லாத ஒரே
இடம் குழந்தைகள் மனசு

4. அழகாக இருப்பவர்களை
இறைவன் ஆதார் கார்டு
மூலம் தண்டித்து விடுகிறார்

5. வாழ்க்கையில் பாவத்தை
சேமித்தவன் பணக்காரன்
வாழ்க்கையில்
பாசத்தை சேர்த்தவன்
பைத்தியக்காரன்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## மகள்

சொத்திற்கு மகனென்போர் பாசத் திற்குச்
சொந்தமாக மகளைத்தான் சொல்லு வார்கள்
எத்தனைதான் ஆண்பிள்ளை இருந்த போதும்
எழிலாக மகளின்றேல் வெறுமை வீடே
முத்தான பெண்ணின்றேல் ஆண்பிள் ளைக்கே
முகம்மாற்றிச் சடைபின்னி மகளாய்ப் பார்ப்பர்
நித்திலமாய் இலக்குமியாய் மங்க லத்தின்
நிலைகளமாய் மகளைத்தான் போற்று வார்கள் !

தாய்தனக்குத் துணையாக வீட்டு வேலை
தயையுடனே செய்பவளும் மகளே யன்றோ
வாய்த்தசினத் தந்தையிடம் அன்பாய்ப் பேசி
வந்தகோபம் தணிப்பவளும் மகளே யன்றோ
ஆய்ந்தெந்த செயலையுமே தந்தை தாயின்
அடிமனமாய்ச் செய்பவளும் மகளே யன்றோ
போய்சேர்ந்த பிணத்தலையின் அருக மர்ந்து
போகாமல் அழுபவளும் மகளே யன்றோ !

கருணைக்குக் காட்டான தெரசா அன்னை
காந்தியாக மாற்றிட்ட வள்ளி யம்மை
அரும்ஆட்சி புரிந்திட்ட இந்திரா காந்தி
அறிவியலில் சாதித்த கல்பனா சாவ்லா
பெரும்புகழில் வாழ்கின்ற இவர்க ளெல்லாம்
பெற்றோர்க்குப் பெயர்சேர்த்த மகள்க
ளன்றோ மருமகளாய்ச் சென்றபோதும்
பிறந்த வீட்டின்
மாண்புகளைக் காப்பவளும் மகளே அன்றோ !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## மேதினியில் மே தினம்

உழைப்பாளிகளின் திருநாள்
போராடிப் பெற்ற வெகுமதி
எட்டு மணி நேர வேலை
எட்டு மணி நேர ஓய்வு
எட்டு மணி நேர உறக்கம்
மாற்றும் சதியில் ஈடுபடலாம்
உருவெடுக்கும்
சூழ்ச்சிகளைத் தலை தூக்க
அனுமதிக்காதீர்
ஒற்றுமையே உங்கள் பலம்
பலவீனப் படுத்தும் செயலில்
புல்லுருவிகள் சதி
செய்யலாம்
உழைப்பே தொழிலக உயர்வு

**பி. பழனி,** சென்னை.

## அலைபாயும் மனம்

சாலையில் நடந்தபோது
சைக்கிள் கேட்டது,
சைக்கிளில் போகும்
போது ஸ்கூட்டர் கேட்டது,
ஸ்கூட்டர் பயணத்தின்போது
கார்கேட்ட மனம், காரில்
பயணம் செய்யும்போது
விமானம் கேட்டது,
விமானத்தில் பறக்கும்போது
இராக்கெட்டில்
சந்திரனுக்கு
செல்லலாமா?
செவ்வாய்க்கு
செல்லலாமா
என
அலைபாய்கிறது.




**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.

## போச்சே! போச்சே!!

அனாவசியமாய்
அவசரப்பட்டு சண்டை
போட்டு மாமியாரை
வீட்டை விட்டு விரட்டியதை
நினைத்து வருந்தி மூணு
நாளாய் சாப்பிடாமல் கிடந்து
அழுகிறாள் மருமகள்

ஒவ்வொரு ஓட்டுக்கும்
நாலாயிரம் ரூபாய்
கொடுப்பாங்கன்னு முன்னமே
தெரியாம ஏமாந்து
போயிட்டனே

**நாகை பாலா**



உன் பார்வை என்ன
பாதாளமா?
இன்னும் எழவே
முடியவில்லை!

வைத்தியமெல்லாம் வேண்டாம்
உன் மீது இதே காதல்
பைத்தியத்தோடு
இருந்து விட்டு போகிறேன்!

மழையில் நனைந்து
கொண்டிருப்பதாய்
நினைக்கிறாய்
எனக்கு மட்டுமே தெரியும்
நான் அழுது கொண்டிருப்பது!

அடிக்கவில்லை ஆனாலும்
வலிக்கிறது
அவள் பார்வை!

நீ மருத்துவரெல்லாம் ஆகாதே
உனக்காகவே நோயாளிகள்
அதிகரிக்க கூடும்!

எல்லாவற்றிற்கும் ஆசைப்படு
அவஸ்தைகள் தரும்
அவளை தவிர!

இரவென்றால் நிலவு
மட்டுமல்ல உறக்கமும் வர
வேண்டும்–ஏனோ
அந்த உறக்கம் எனையறிந்து
வருவதே இல்லை
தப்பி தவறி அசதியில்
உறங்கினாலும்
அந்த உறக்கம்
தற்காலிக சுகத்தை தருகிறது

தற்காலிகமே இப்படியென்றால்
நிரந்தர உறக்கம்
எப்படியிருக்கும்?
உன்னை நினைத்து,நினைத்து
புழுங்கி அவதிப் படுவதை
விட ஆறடியில் அடங்குவது
எவ்வளவோ மேல்
என்னுடைய கடைசி பக்கத்தை
எழுத விரும்புகிறேன்
அவளின் காதல் இல்லாமல்!

ஆசைப்படுவது
பாவமென்றான் புத்தன்
பாவமாகி போனாலும்
பரவாயில்லை உன் மீது
மட்டும் காதல் கொள்கிறேன்!

தொலைத்த இடத்தில் தான்
தேட வேண்டுமாம்
அதனால் தான்
உன்னிடத்திலேயே
தேடுகிறேன்
தொலைத்த என் இதயத்தை!

என்ன சித்து வேலை
செய்தாய்? உன் மீது பித்து
பிடித்து திரிகிறேன்!

காதலை கேட்டால்
தர மாட்டாய் என தெரியும்
முடிந்தால் உன் கரங்களால்
ஒரு கப் காபி போட்டு கொடு!

இத்தனை பிறகும்
உன் மீதான காதல்
குறைவதேயில்லை!

**லி.நௌஷாத் கான்**



## வாழைப்பழப் பாட்டு.!

வாழைப் பழம்.. வாழைப் பழம்.. வாழைப் பழம்.. அய்யா.. இது..
வவுத்துப் பசிப் போக்கும் பழம்..!
இது ஏழைக்கென்றே பொறந்தப் பழம்.!

எத்தனையோ பழங்களிங்கு.. கடைகளிலே இருக்குது!
எந்தநாளும் யாவருக்கும் எந்தப் பழம் கிடைக்குது.?
பார்க்க அம்சமாய்.. சுவைப்பதற்கு இனிமையாய்.. வாங்குங்கோ..
வாங்கி சுவையுங்கோ.. மலிவு விலையில் சக்தி மிகுந்த
வாழைப் பழத்தை வாங்குங்கோ!

காவிரியின் கரையினிலே விளைந்து வந்தப் பழமுங்கோ..
காணுகின்ற வளமைக்கெல்லாம் காரணமாம் பழமுங்கோ!
கோவிலில் தெய்வத்திற்கு பூசையிலே வைய்யுங்கோ!
கல்யாணம் கச்சேரிக்கு காசைக் கொடுத்து வாங்குங்கோ!

தேங்காயும் பழமும் போல.. இணைந்து என்றும் வாழுங்கோ..
தேடித்தேடி சந்தையிலே வாழைப் பழத்தை வாங்குங்கோ!
அழுகிற குழந்தைக்கு அம்மா தரும் பழமுங்கோ.! ஆயிரம்
தோழர்களுக்கு வேலை தரும் பழமுங்கோ.!
வாங்குங்கோ.. தினமும் வாங்குங்கே..! வாழை.. வாழை.. வாழ
வைக்கும் வாழைப் பழத்தை வாங்குங்கோ.!

ரஸ்தாளி.. பூவம்..கதலி.. பச்சை பல வகையுங்கோ.. மலையாளக்
கரையோரம் மலைவாழைப் பாருங்கோ..
பிள்ளையாரு கோவில் சென்று யானைக்கும் ஊட்டுங்கோ..
நல்லதெல்லாம் நடப்பதற்கு வாழை வைத்து
படையுங்கோ!
இனிப்புக்கு ஒருபழம் ஏழைக்கு ஒரு பழம்..
மருத்துவ குணம் கொண்ட.. மாசில்லாத
வாழைப்பழம்!



**வே.கல்யாண்குமார்.**

## நூல் விமர்சனம்

புல் நுனிப் பூக்கள்
நூல் ஆசிரியர் : கவிதாயினி
வ. விசயலட்சுமி
பூவரசு பதிப்பகம், 30/8,
கன்னிக்கோவில் பள்ளம்
அபிராமபுரம் முதல்தெரு,
சென்னை–600 018. பக்கம் :
80 விலை. : ரூ. 80
நூல் விமர்சனம் : கவிஞர்
இரா. இரவி.

‘புல் நுனிப் பூக்கள்’ கவித்துவமான தலைப்பு. நூலாசிரியர் கவிதாயினி வ. விசயலட்சுமி அவர்கள் புதுவையின் பெருமைகளில் ஒன்றானவர். சமூக அறிவியல் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே சமூகத்தையும் ஆய்வு செய்து துளிப்பா ஹைக்கூ வடித்து வருபவர். பல்வேறு இதழ்களில் பிரசுரமான துளிப்பாக்களை தொகுத்து நூலாக்கி உள்ளார்.

பேராசிரியர் எ.மு. ராசன் பாவலர் புதுவைத் தமிழ் நெஞ்சன் மின்மினி இதழ் ஆசிரியர் கன்னிக்கோவில் இராசா ஆகியோரின் அணிந்துரை வரவேற்புத் தோரணங்களாக உள்ளன. நூலாசிரியர் 10 க்கு மேற்பட்ட நூல்கள் எழுது உள்ளார். பல்வேறு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுள்ளார்.

ஆற்றில் இறங்க / அழகர் வந்தார் / ஆறு? முதல் துளிப்பாவே மதுரையின் இன்றைய நிலையை எடுத்து இயம்புவதாக இருந்தது. அழகர் ஆற்றில் இறங்க ஆறு ஓடவில்லை. செயற்கையாக தொட்டிக்கட்டி தண்ணீர் நிரப்பி அதில் தான் அழகர் இறங்க வேண்டி உள்ளது. நாடு கடத்தப்பட்டார் / புத்தர் / அன்பிலா நாடு! அன்பை போதித்த புத்தரை கடவுளாக வணங்கிடும் சிங்களர் சிறிதும் அன்பின்றி இலங்கை இராணுவம் தமிழினப் படுகொலை நடத்திய நிகழ்வை நினைவூட்டும் விதமாக வடித்த விதம் அருமை!




சுத்தமாக கைகள் / கறையாகிப் போனது / தேர்தல்! வாக்களிக்க வருபவர்களுக்கு அழியாத மை வைத்து கறையாக்குகின்றனர் என்பது ஒரு பொருள். வாக்களிக்க பணம் வாங்கி கறையாகி விடுகின்றனர் என்பது ஒரு பொருள். உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாட்டில் இந்தியாவில் தேர்தலே கறையாகி விட்ட்து என்பது ஒரு பொருள். ஒரு துளிப்பா மூலம் பல பொருள் உணர்த்த முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆறு நிறைய / சரக்குந்துகள் / மணல் கொள்ளை. நீதிமன்றங்களில் பல தீர்ப்புகள் வழங்கிய போதும் மணல் கொள்ளை மட்டும் நின்றபாடில்லை. தண்ணீர் ஓட வேண்டிய ஆறுகளில் சரக்குந்துகள் ஓடுவது வருங்கால வாரிசுகளுக்கு வஞ்சம் செய்யும் செயலாகும். வளத்தை அழிக்கும் கொடூரமாகும். “திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது” என்ற பட்டுக்கோட்டையாரின் பாடல் நினைவிற்கு வந்தது.

காட்டில் தீ / எரிந்து மடிந்தது / எத்தனை புல்லாங்குழல்களோ? முன்பே எழுதிய இந்த துளிப்பா குரங்கனி காட்டின் தீ விபத்தை நினைவூட்டியது. பலியான உயிர்களை புல்லாங்குழல் என்றும் பொருள் கொள்ளலாம். விடுமுறை இல்லை / பணி ஓய்வில்லை / இல்லத்தரசி! வீட்டில் சும்மா தான் இருக்கிறாள் என்று சொல்லி அறிமுகம் செய்து வைக்கும் இல்லத்தரசிக்கு ஞாயிறு விடுப்பு இல்லை. வருடம் முழுவதும் வேலை. தொல்லை அவர்களின் இன்னலை உணர்த்திய துளிப்பா நன்று.இல்லத்தில் துன்பம் / துன்பத்தில் இன்பம் / திருமணம்! திருமணம் பற்றி மிக இயல்பாக எதார்த்தமாக சொற்சிக்கனத்துடன் வழங்கிய விளக்கம் முற்றிலும் உண்மை.கற்றது கையளவு / மறந்ததோ கடலளவு / தேர்வு நேரம் புகழ்பெற்ற பொன்மொழியை சற்று மாற்றி மாணவர்களின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டிய விதம் அருமை. பாராட்டுக்கள். திருமணம் / சொர்க்கத்தில்/ விவாகரத்து? திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்கின்றனர். பிறகு ஏன் விவாகரத்து நடக்கின்றது என்று பகுத்தறிவுக் கேள்வி எழுப்பு உள்ளார். வறுமையை ஒழிப்போம் / முழங்கினார் தலைவர் /செழித்தனர் உறவினர்! உண்மை தான். இன்றைய அரசியல்வாதிகள் தான் மட்டும் கொள்ளையடிக்காமல் சம்பந்தி சொந்தம் பந்தம் அனைவரையும் கொள்ளையடிக்க விடும் நாட்டு நடப்பை துளிப்பாவாக்கியது சிறப்பு. மழைக்கு வான் தரும் / வரவேற்பு மாலை / வானவில்! அழகு காட்டிடும் வானவில்லை வரவேற்பு மாலையாகக் கற்பனை செய்திட்ட விதம் அருமை புதிய சிந்தனை. எழுந்தது தமிழகம் / விழுந்தது அரசியல் / சல்லிக்கட்டு சல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்திட்ட போது உலகத்தமிழர்கள் யாவரும் உலகம் முழுவதும் போராடி தடை தகர்த்தனர். அரசியல் இன்றி சாதித்துக் காட்டினார்கள்.

புகுந்த வீட்டிற்கு அனுப்பாமல் பிறந்த வீட்டிலேயே சிறை காவிரி! உச்சநீதிமன்றம் காவேரி ஆற்றுப் பிரச்சனைக்கு கடைசித் தீர்வாக காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட அறிவுறுத்திய போதும், சட்டைச் செய்யாமல் கர்னாடகாவின் தேர்தலில் வெல்ல வேண்டும் என்பதற்காக போக்குக் காட்டி வருகின்றனர். கல்நெஞ்சம் படைத்த கர்நாடகமும் ஈவு இரக்கமின்றி காவிரியை சிறைப்பிடித்து வைத்துள்ளது பல சிந்தனைகளை விதைத்தது. பெருமழை அறிவிப்பு / பள்ளிகளுக்கு விடுமுறை / அம்மாவுக்கு? வருடத்தில் 365 நாட்களும் அம்மாவிற்கு ஓய்வின்றி வேலை. எந்தவித விடுமுறையும் இன்றி குடும்பத்திற்காக உழைத்து வரும் உன்னத உறவு அம்மா. அம்மாவின் அளப்பரிய பணி போற்றுதலுக்கு உரியது. கஞ்சக்கருமி / அழைத்தான் காக்கையை / அமாவாசை! தானம் தரும் எண்ணம் இல்லாத கஞ்சன் அமாவாசையன்று காக்கையை அழைத்து சோறு வைக்கும் முரண்பாட்டை உணர்த்தி பகுத்தறிவுச் சிந்தனையை விதைத்துள்ளார். அழகிய முகம் / உள்ளே நஞ்சு! / நாகம்! அழகு, அதில் ஆபத்து உள்ளது என்று உணர்த்தியது சிறப்பு. ஏவுகணைத் தந்தை / ஏகினார் விண்ணை/தேம்பிடும் இந்தியா! இந்தியாவின் கடைக்கோடியில் உள்ள இராமேசுவரத்தில் பிறந்து இந்தியாவின் முதற்குடிமகனாக உயர்ந்து, செய்தித்தாள் விற்றுப் படித்து தலைப்புச் செய்தியான மாமனிதர் அப்துல்கலாம் அவர்களின் மறைவிற்கு இந்தியா மட்டுமல்ல உலகமே அழுதது. தேர்வில் வெற்றி / வாழ்வில் தோல்வி / மனப்பாடக் கல்வி!

புரிதல் இன்றி மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் கல்வி பயன்படுவதில்லை. இன்றைய கல்வியின் நிலையை உணர்த்திடும் துளிப்பா நன்று. M.A. உளவியல், M.A. தமிழ், M.Phil படித்த ஆசிரியர் படைப்பாளியாகவும் விளங்குவது சிறப்பு. அவர் பயின்றது பயனுள்ள கல்வி.






## இரத்த நிறமொரு கொக்கு

பாரத தோட்டதின் நடுவே.. ஒரு வாவி இருக்குதுப் பாரீர். அந்த ஞானக் குளக்கரை யருகே.. பல கொக்குகள் நிற்குது காணீர்..

வெள்ளை நிறமொரு கொக்கு.. மீன் வேண்டியே நிற்குது பாரீர்.. அந்த சாம்பல் நிறமொரு கொக்கு தலை சாய்த்துப் பார்க்குது பாரீர்..

செக்கச் சிவந்த நிறத்திலொரு கொக்கு.. ஒரு சிலையாக நிற்குதுப் பாரீர்.. அது நமக்கு உரைக்குது கேளீர்.. நன்றாக சிந்தித்துப் பாரீர்.

வேறு வேறு நிறம் கொக்கு.. அவை வெட்டி மடிவது உண்டோ?
கூறு போட்டு நீரைப் பிரித்து..
அவை வேறுபட்ட துண்டோ கூறீர்..

மாறுப்பட்ட நம் நாட்டு.. மக்கள் ஒரு இனமன்றோ.. இதில் வேறுப்பட்டு இங்கு நின்றால் நாம் வெற்றிக் காண்பது என்றோ?

**வே.கல்யாண்குமார்.**

## உயிர்களெல்லாம் சமம்.

ஈ யும் எறும்பும் சொந்தமென்று எவரும் இங்கே நினைப்பாரோ? வாயும் வயிறும் வலிக்குமென்று வதைத்தே தின்ன மறுப்பாரோ..

ஓயும் வரையில் உயிர் வதைப்பார் முன்னொரு உண்மை சொல்லுகிறேன். தேயம் யாவும் தெய்வமயம் இதை தெளிந்திட உங்களை அழைக்கின்றேன்.

மந்தையில் மேயுது வெள்ளாடு.. அது சந்தைக்கு வந்தால் சாப்பாடு.! விந்தையில் விந்தை உன் செயல்பாடு.. உயிர் நேயமே தமிழரின் பண்பாடு..!

ஆடு கோழி கடல் மீனினங்கள்.. ஆசைக்கு இரையானத் தாவரங்கள்.. வீதியெங்கும் விலை மாமிசங்கள்.. வாடியப் பயிர்களின் அழுகுரல்கள்..

மனிதர்கள் காதினில் விழவில்லையோ.. இந்த மரணத்தில் மாந்தனின் பங்கில்லையோ.. இனியொரு விதி செய்ய முன் வருவோம்! எல்லா உயிருக்கும் உயிர் தருவோம்.!

வள்ளுவர் புத்தர் காந்தி சொன்னார்.. அந்த வெள்ளுடை வள்ளலார் நீதி சொன்னார்.. பல்லுயிர் எல்லாம் நம்முயிராம்.. அதனைப் பாதுகாப்பது உலகில் நம்கடனாம்.!

**வே.கல்யாண்குமார்**

தீக்குச்சிக் கனவுகள் பாட்டுப் பெட்டிக்குள்ளே
"தீ"குச்சிகளை அடுக்கி வைத்தேன்.!

பொட்டுப் பூச்சிகளை உரசி நான் விழிக்க வைத்தேன்..
நாட்டு நடப்பையெலாம் என் பாட்டுக்குள் எழுதி வைத்தேன்..


நானோ உரசி வைத்தேன் நன்றாகப் பற்ற வைத்தேன்.!
ஏடறிய ஆசையுண்டு ஏழைமகன் படிக்கவில்லை..

பாடுபடச் சிறாரை.. பாஸ்பரஸ் கை நணைய வைத்தே.
ஓடேந்தி அலைய வைத்தார்..கல்வி உனக்கில்லை போ என்றார்

நாடோடிப் பாடகன் நான் தீக்குச்சி யாகவந்தேன்!
தீப்பந்தம் ஏந்தி வந்தேன்.. தீயில் தீயதை பொசுக்க வந்தேன்.!

நா பந்தல் போடாமலே பாட்டுச் சாட்டையில் நிமிர்த்த வந்தேன்..
தீ குச்சி எரிவது போல்.. எரியும் எண்ணங்கள் ஏந்தி வந்தேன்..
பாக்குச்சி அடுக்கி வைத்தே.. இந்த பாரினை நினைத்து வந்தேன்.

**வே.கல்யாண்குமார்**



## சித்ரா பௌர்ணமி

பொன்னியின் செல்வனில்
நந்தினியைப் பார்த்த
போதெல்லாம் இந்தக்
கயல்விழியாள்
சுடிதார் அணிந்து வந்தால்
எத்தனை சுந்தரமாக
இருக்குமென்று
எண்ணினேன்!
நினைத்தேன் வந்தாய் நீயும்
அந்த நந்தினியாக!
ஒரு சித்ரா பௌர்ணமியில்
முழு நிலவுப் பெண்ணாக மாறி
நடந்து வருவதைப்
போலிருக்கிறது
நீ சேலை அணிந்து அன்ன
நடையில் வரும் போதெல்லாம்!
எதற்கும் ஆவேசப் படக்
கூடாது என்ற புத்தரின்
கொள்கையை மகா
மனப்பாடம் செய்திருந்த
என் மனம்
உன்னைப் பார்த்த
அந்த ஒரு நிமிடத்தில்
அதை அப்படியே
குழி தோண்டிப் புதைத்து
விட்டது!
பிறகென்ன?!
இனி என் கா த ல்
நினைத்ததை
யெல்லாம்
நினைத்து நினைத்து
செய்யும்!



**முத்து ஆனந்த்**
வேலூர்



## பாரதிதாசனுக்கு இணை ஒருவர் உள்ளார் !

புரட்சிக் கவிஞர் என்றால் பாரதிதாசன் !
பாரதிதாசன் என்றால் புரட்சிக்கவிஞர்!
தந்தை பெரியாரின் புரட்சிக்கருத்துக்களை
தனது பாடல்களில் வடித்துக் காட்டியவர்!
தமிழ் ஆசிரியராகப் பணியினைத் தொடங்கியவர்!
தமிழ் ஆசு கவியாக வாழ்வில் உயர்ந்தவர்!
கொள்கையில் குன்றாக என்றும் நின்றவர்!
குணத்தில் அன்பின் சிகரமாகத் திகழ்ந்தவர்!
கனக சுப்புரத்தினம் என்ற இயற்பெயரை பாரதிக்காக
பாரதிதாசன் என்று மாற்றிய உண்மைச் சீடர்!
பாரதிதாசன் ஆத்திசூடி அழகாக வடித்தவர்!
பாரினில் அனைவரும் விரும்பிடும் பாடல் படைத்தவர்!
பாடல்களால் பரவசம் படிப்பவர்களுக்குத் தந்தவர்!
பார் போற்றும் பாடல்கள் புனைந்தவர்!
பகுத்தறிவுக் கருத்துக்களை விதைத்தவர்!
பகுத்து உணர பாடலால் உணர்த்தியவர்!
தமிழ் இன உணர்வை கவிதையில் ஊட்டியவர்!
தமிழுக்காக குரல் தந்த புதுவைக் குயில் அவர்!
'இருண்ட வீடு' தந்து 'குடும்ப விளக்கு' ஏற்றி
'எதிர்பாராத முத்தம்' தந்து 'அழகின் சிரிப்பு'க் கண்டவர்!
'தமிழச்சியின் கத்தி'யை 'பாண்டியன் பரிசாக'த் தந்தவர்!
'குயில்' 'இசையமுது' 'குறிஞ்சித் திட்டு' வடித்தவர்!
'பெண்கள் விடுதலை'யை 'பிசிராந்தையார்'க்கு யாத்தவர்!
படைப்பால் 'தமிழ் இயக்கம்' கண்ட பாவலர்!
புதுவையில் பிறந்திட்ட புதுமைக் கவிஞர்!
பிரஞ்சு படித்த போதும் தமிழை நேசித்தவர்!
பண்டிதர்களிடம் தமிழைக் கற்றவர்!
பைந்தமிழை அமுதமென்று புகழ்ந்தவர்!
பாடாத பொருள் இல்லை எனுமளவிற்கு
பல்வேறு பொருள்களில் பாடிய பாவலர்!
கவிதை கதை வசனம் கட்டுரை என
கணக்கிலடங்காத படைப்புகள் படைத்தவர்!
சகலகலா வல்லவராக வாழ்ந்து சிறந்தவர்!
சரித்தியம் படைத்து கவிஉலகில் உயர்ந்தவர்!
குடும்பக்கட்டுப்பாடு பேசுகிறோம் இன்று
குடும்பக்கட்டுப்பாடு பற்றி அன்றே பாடியவர்!
தமிழின் அருமை பெருமை உணர்த்தியவர்!
தமிழருக்கு மானமும் அறிவும் கற்பித்தவர்!
பாரதிதாசன் கவிதைகள் படித்தால் போதும்
பைந்தமிழ்ச் சொற்கள் யாவும் தெரியும்!
தமிழ் எனும் கடலில் மூழ்கி முத்தெடுத்தவர்!
தமிழ் முத்துமாலை தொடுத்து வழங்கியவர்!
கவிதையின் சுவையை பாமரருக்கும் உணர்த்தியவர்!
கவிதையில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர்!
புதுவையின் பெருமைகளில் ஒன்றாக மாறியவர்!
புதுமைகள் படைப்புகளில் புகுத்தி வென்றவர்!
சொற்களைச் சுவைபட பாட்டில் யாத்தவர்!
சுந்தரத்தமிழை சொக்கிடும் வண்ணம் தந்தவர்!
பாரதிதாசனுக்கு இணை ஒருவர் உள்ளார்!
பாரதிதாசன் தான் அந்த ஒருவர்!



## பாவேந்தர் !

பாவேந்தர் பட்டத்திற்கு
முற்றிலும் பொருத்தமானவர்
பாரதி தாசன் !

கனக சுப்புரத்தினம் என்ற
பெயரை குரு பாரதிக்காக
பாரதிதாசனாக மாற்றியவர்!

குடும்பக்கட்டுப்பாடு பற்றி
அன்றே குமுகத்திற்குச்
சொன்ன முதல் கவிஞர் !

பகுத்தறிவுப் பகலவன்
கருத்துக்களை
பாடலில் வடித்த போர்முரசு !

புதுவையின் பெருமைகளில்
ஒன்றானவர் புரட்சிப்
பாடல்கள் வடித்த சித்தர் !

குடும்பவிளக்கு இயற்றி
வைத்து குடும்பங்களை
ஒளிர விட்டவர் !

புரட்சிக்கு கவிஞர் படத்திற்கு
பொருத்தமானவர் நமது
பாவேந்தர் !

## புரட்சிக்கவிஞர் !

புதுவையின் புதுமை
பகுத்தறிவின் செழுமை
புரட்சிக்கவிஞர் !

குடும்பவிளக்கு ஏற்றிய
கவிதைச் சுடர்
புரட்சிக்கவிஞர் !

அன்றே உரைத்தவர்
அளவான குடும்பம்
புரட்சிக் கவிஞர் !

பெரியாரின் போர் முரசு
பார் போற்றும் பா அரசு
புரட்சிக் கவிஞர் !
தமிழை நேசித்தவர்
தன்னுயிருக்கும் மேலாக
புரட்சிக் கவிஞர் !

மகாகவி பாரதியை மதித்தவர்
மட்டற்ற கவிகளை வடித்தவர்
புரட்சிக் கவிஞர் !

சங்கநாதம் முழங்கியவர்
சங்கத்தமிழ் வளர்த்தவர்
புரட்சிக் கவிஞர் !

கனக சுப்பு ரத்தினம்
கவிதைகள் யாவும் ரத்தினம்
புரட்சிக் கவிஞர் !

சூழ்ச்சிகள் கழித்து
எழுச்சிகள் விதைத்தவர்
புரட்சிக் கவிஞர் !

அஞ்சாத சிங்கம்
பாடல்கள் தங்கம்
புரட்சிக் கவிஞர் !



**கவிஞர் இரா .இரவி !**

## உயிர்வெளி.!


எரிவாயு உருளை தட்டுபாட்டால்... முதல்முறையாக சுள்ளிப்பொறுக்க போனவள்... முட்களுக்கு சாயம் பூசி... கைகொள்ளாமல் காயங்கள் பெற்றாள்... சருகுகளின் சரசரப்பில் சப்தநாடியும் ஒடுங்க... ஓணானின் உதாரென உதறல் துறந்தாள்... காய்ந்த மரம் கண்ணில் பட்டால்... புதையல் கிடைத்த பூரிப்பு.. பூத்த நாணல் புதருக்குள்ளே.. சிட்டுக்களின் சிருங்காரம்... உடைமர உசரத்தில் யானைக்காதாய் தேன்கூடு.. பாம்பரணை.. உடும்பு.. நீர்கோழி.. கீரிப்பிள்ளை..உழவுக்காட்டில்... கூலக்கூட்டில் அடைகாக்கும் கவுதாரி.. அப்பப்பா.. உருளை ஒன்று தான் கிடைக்கவில்லை.. உலக உயிர்ப்பை காணும் பாக்கியம் பெற்றாள் அவள்.!

**க. குமாரகுரு,** மயிலாடுதுறை

ஒற்றை வரியில்
முழுமை ஆக்குகிறது
உன் நேசம்.
ஒரு ஸ்பரிசம்
துளிர்க்க செய்கிறது
மனப் பூவை. ஒரு பார்வை
ஸ்திரப்படுத்துகிறது
என் இருப்பை.
பிரளயம் வந்த மனசில்
ஆலிலையில்
நீயும் நானும் !

நிழலில் உலர்த்த சில..
வெய்யிலில் உலர்த்த சில..
உன்னில் உலர்த்த நான்.

**ரிஷபன்**



## மழைத்துளி காதல்

காலைச் சூரியனைத் தழுவும்
மலர்கள் மலரின் இதழ்களில்
மெல்லிய மழைத்துளி
மழைத் துளிக்குள் ஒளிரும்
வானவில் வானவில்
வண்ணமாய் உன் அழகு
அழகுக் கன்னத்தில் என்
பார்வை

பார்வை எழுதிய கவிதை
ஓவியம் ஓவிய வரைவில்
சுருங்கும் சிரிப்பு
சிரிப்பின் சாயலில்
வண்டுகளின் ராகம்
ராகம் பாடியே மகிழ்ச்சி
மலர...

மலர்ந்த முகத்தில் விழுந்த
துளிகள்... துளிர்த்த
நாணத்தில் சிவந்த
கன்னங்கள்...



காதல் பேசும்
கவிதையானதே
கண்கள்
பரிமாறும்
மொழியானதே

**நா.பத்மாவதி**
கொரட்டூர்



## உனக்கு மட்டும் !

கோவிலில் பூ விற்கும்
பூக்காரிக்கு தெரிகிறது...

செல்போன் ரீசார்ஜ்
கடைக்காரருக்கு
தெரிகிறது...

தெருவில் பால்விற்பவருக்கு
கூட தெரியும்....

பேப்பர் போடும் பையனுக்கும்
தெரியும்...

அதிகாலை சூரியனுக்கும்
இரவு நிலவுக்கும் தெரியும்...

காற்றுக்கும் தெரியும்...
ஏன் கடவுளுக்கு கூட
தெரியும்...

ஆனால்... உனக்கு மட்டும்
ஏன் தெரியவில்லை... நான்
உன் மீது கொண்ட காதல் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## தமிழ்மொழியை உள்ளத்தில் தாங்கு!

நேரிசை வெண்பா!

இலக்கியங்கள் நீதிநூல்கள்
ஈடின்றிக்காணும்
இலக்கணங்கள் பக்திநூல்கள்
இன்றும்...
கலையாய்க்கமழ்ந்திடக்காணும்
கவினாக நாளும்
தமிழ்மொழியை
உள்ளத்தில் தாங்கு!

தமிழிலே வாசிப்போம்
நந்தமிழை ஏற்றுக் கமழச்
சுவாசிப்போம் கண்டாய்...
அமைந்த நமது
மொழியையே நல்லுலகம்
காணத் தமிழ்மொழியை
உள்ளத்தில் தாங்கு!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**



## ஹைக்கூகள்.

இறகுதிர் காட்சிகள்/
ரசித்தவாறே பறக்கின்றன /
இலையுதிர்கால பட்சிகள்./

முகிலினத்தை தழுவிடும்/
சிறகுகளைத் தாக்கி
வலுவிழந்த/
குளிர் காற்று./

வேகமாய்ப் பறக்கையில்/
நிழலிருந்த பறவைகள்./
வானவில்லின் அருகில்.../

பின் பனிக்காலம்/
குளிர் காயும் யாத்திரிகன்/
தொடர் கணைப்பில்
குதிரை./

வழிப் போக்கன்/
இலக்கு இல்லாப்
பயணம்/
எம்மரமும் சம்மதம்./

நனைந்த காகிதப் பூக்கள்/
உலர்வதற்குள் மீண்டும் மழை/
இம்முறை மண்வாசனை./

கம்பி அறுந்த குடையை/
மேல் நோக்கி இழுக்கையில்/
நனைகிறது காற்று./

மழையைக் காதலிப்பீர்/
நாளை முளைக்கலாம்
இவ்விடத்தில்/ நிழல்கள்./

உடல் எடை இழக்கிறது/
ஒவ்வொரு
மொழிபெயர்ப்பிலும்/
ஹைக்கூ./

இளவேனில் இரவு/
சன்னலைத் திறந்ததும் /
இருபத்தேழு
நட்சத்திரங்கள்./



**முனைவர் வே. புகழேந்தி,** பெங்களூர்

உரிமையாளர் இந்நேரம் வீட்டை வேறொருவருக்கு
வாடகைக்கு விட்டிருப்பாரா?

அவரின் அடுக்கற்ற மாடி வீட்டில் தங்கியிருந்த
வாலிபர்கள் இன்னும் குடியிருப்பார்களா?

வீட்டைச்சுற்றியிருந்த வெற்று வெளி சுத்தப்படுத்தப்பட்டு
விட்டதா?

ஓர் மழை நாளில் வேருடன் சரிந்த
பப்பாளி மரம் திரும்பவும் துளிர்த்து விட்டதா?

மனைவி இறந்த நாளிலிருந்து மகள் கையால் சாப்பிடுகிற அவர்
மனைவியின் கைப்பக்குவத்தை ஞாபகம் கொண்டிருப்பாரா?

பேரனின் உயர் வகுப்பு தேர்வு முடிவுகள் அவரின் மனதை
என்னவாய் பிரதிபலித்திருக்கும்?

அவ்வரின் தள்ளாமையும் அன்றாடங்களில் அவர் பயணிக்கிற
மிதிவண்டியும் எந்நிலை கொண்டுள்ளது தெரியவில்லை.

வீதி திருப்பத்திலிருந்த பலசரக்குக்கடைக்காரர் நாங்கள்
விரும்பி வாங்குகிற முறுக்குப் பாக்கெட்டுகளை யாரிடம் விற்றுக்
கொண்டிருப்பார் இந்நேரம்?

அதிகமாக இல்லையென்றாலும் வாரத்தில் இருமுறையேனும்
துணிதேய்த்துக்கொடுக்கிற தேய்ப்பு வண்டிகடைக்காரரும்,
தெருமுனை பூக்கடைக்காரரும் பேசியும் எதிர்ப்பார்ப்பு வைத்தும்
இருந்திருப்பார்கள்தானே?

அயலகப் பணிதுறந்து தேநீர்விடுதி நடத்திக் கொண்டிருந்த
நண்பரின் நலம் இந்நாளில் எப்படியிருக்கும்?

மகனின் நண்பனிடம் நலம் கொண்டிருப்பான்தானே?

வாடகை ஒப்பந்தம் முடிந்த பால்க்கடைக்காரர் இந்நேரத்தில்
கடையை காலிசெய்திருப்பாரா?அதில் பணிசெய்த அக்கா
வேறெங்கு வேலைக்குச் சென்றிருப்பார்?

நெரிசல் மிகுந்த புகை வண்டி நிலையத்தின் மேம்பாலம் இன்னும்
அதே அடையாளம் கொண்டுதானா?

நகரப்பேருந்தும், மினிபோக்குவரத்தும் விரைவுப்பேருந்தும்
இன்னும் கூட்டம் கொண்டுதான் நகர்கிறதா?அவைகளின்
ஓட்டுனரும் நடத்துனரும் சப்தம் கொண்டுதான் பேசுகிறார்களா?

நானறிந்த கிராம வங்கி காசாளர் நலமுடன் இருக்கிறாரா?
வைத்தீஸ்வரன் கோவில் யானை எப்படியிருக்கிறது?

திருமணஞ்சேரியில் நேர்ந்து கொண்டது
இன்னும் இடையறுத்து நின்று கொண்டே!

பூம்புகாரின் கடற்கரையில் மனிதவாசம் இன்னமும்
மிகுந்திருக்கிறதா?

பேராளம் பேருந்து நிறுத்தத்தில் மரவள்ளிக்கிழங்கு துண்டு விற்ற
மூதாட்டியிடம் வயது கேட்க மறந்து போனேன்.

பழைய பேருந்து நிலைய உணவகத்தில் சாப்பிட்ட தோசை ருசி
இன்னும் நாவின்சுவையறும்புகளில்!


புகை வண்டி விட்டிறங்கிய நாளிலும் ஏறப்போகிற பொழுதிலுமாய்
வருகிற ஆட்டோக்காரர் அவ்வூரின் வரைபடத்தை
அடையாளப்படுத்தத் தவறுவதில்லை.

ஏழுமணி நேரத்திற்கும் மேலாய் எங்களை சுமந்து கொண்டோடிய
புகை வண்டியும், புகை வண்டி நிலையங்களும், நிலையங்களில்
தேநீர் விற்றவர்களும் இருப்புப்பாதைகளும்
பணியாளர்களும் நலம்தானே?



வாய்த்தால் ஒருமுறை போய் வர வேண்டும்.
அம்மண்ணையும் மக்களையும் பார்த்து
பேசிச்சிரித்து
நலம் விசாரித்துவிட்டு வரவேண்டும்.

**விமலன்.**




























திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

# ஆட்கள் தேவை

**ஆண்கள் மட்டும்**

வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**

தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com



GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

குன்றத்தூரில்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER)
அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER)
டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவுக்கு வரவும்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379

WANTED
ஆட்கள் தேவை
சமையல் | வீட்டுவேலை | குழந்தை | நோயாளி | தங்கி | தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families

உ முருகன் துணை
A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும்
அணுகவும்
7305025591, 9578622711

ADVERTISE WITH US
7789941009

ULTRA SEC FACILITY FORCE
YOUR SAFETY, OUR COMMITMENT
OUR SERVICES
Security Services (Trained Security Guards, Supervisors, 24x7 Coverage)
Facility Management Services (Housekeeping, Maintenance, Cleaning)
Manpower Supply (Skilled & Unskilled Staff for Industries, Apartments, Offices)
WHY CHOOSE US?
• Experienced & Professional Team
• 24/7 Reliable Support
• Affordable & Transparent Pricing
• Customized Service Plans
ULTRA SEC FACILITY FORCE
Flat No : 13A, Door No: 1, Moovarasampet Main Road, Madipakkam, Chennai-600091.
+91 93632 98980 ultrasecfacility@gmail.com
www.ultrasecfacility.com

ATTENTION
ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.

SHRI RAGHAVENDRA SCAN CENTRE
We Are HIRING PRO
PUBLIC RELATION OFFICER
DIAGNOSTIC ULTRASOUND & COLOUR DOPPLER STUDIES
TIMING : 9AM-8PM
Attractive salary package
@TONDIARPET
+91 8189997221
+91 9094337745
ADDRESS: THAI APARTMENTS 618 T.H.ROAD (NEAR) TONDIARPET METRO STATION CHENNAI-81

Sanjay Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

THANIGAI
WANTED ISO
REAL ESTATE MARKETING
PART TIME & FULL TIME
☑ Flexible work ☑ No Age Limit / No Investment
☑ No Experience/No Qualification ☑ No Risk / No Target
Simple work - just refer customers only
Office Location : Near Perambur Railway Station
K. Ramakrishnareddy 90879 55111

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner
www.vgpdevelopers.com

எலாவூர் மிக அருகில்
சுண்ணாம்பு குளம்
Sqft ₹120/_
(மினிமம் 10000sqft)
Ph.9600660997


MATRIMONY
WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
Trusted by Thousands, Chosen for a Lifetime
COMPLETE MATRIMONY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Member Registration
Advanced Search
Detailed Profiles
Instant Messaging
Interest / Shortlist
Privacy & Security
Premium Membership
Mobile Responsive
Email / SMS Notifications
Admin Dashboard
Reports & Analytics
24/7 Support
GET YOUR PROFESSIONAL
MATRIMONY WEBSITE
TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


ePAPER
ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
ePaper
Archive Management
Subscription & Free Access
Google Ads Integration
Upload PDF & Publish
Mark, Crop, Cut & Share
Share on Social Media
DAILY NEWS
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
UPLOAD, MARK, CROP, CUT & SHARE
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
EASY TO USE & MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR ONLINE REACH
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


ADVERTISE
WITH
US
7789941009


TOURS & TRAVELS AGENCY
WEBSITE / SOFTWARE
BOOK | MANAGE | GROW
All-in-One Solution to Grow Your Travel Business Online
COMPLETE TOURS & TRAVELS AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Tour Packages
Hotel Booking
Flight Booking
Bus Booking
Car Rental
Cruise Booking
Custom Packages
Payment Gateway
Enquiry Management
Trip Itinerary
Offers & Discounts
Blog Management
User Registration
Reviews & Ratings
Multi Currency
Multi Language
Email / SMS Notifications
Mobile Responsive
Gallery Management
Destination Management
SEO Friendly
Reports & Analytics
Role Management
Social Media Integration
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP:
9040463899


JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹ 25,000/-
PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
FRESHERS CAN APPLY
ATTRACTIVE SALARY
GROWTH OPPORTUNITIES
SECURE YOUR FUTURE
APPLY NOW!
Call / WhatsApp:
8122664699
*Terms & Conditions Apply


REAL ESTATE AGENT
WEBSITE / SOFTWARE
LIST | SHOWCASE | CONNECT | GROW
Everything You Need to Grow Your Real Estate Business Online
COMPLETE REAL ESTATE WEBSITE / SOFTWARE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Property Listing
Advanced Search & Filter
Property Details
Google Map Integration
Image & Video Gallery
Inquiry & Lead Management
Agent Profiles
User Registration
Compare Properties
Favorites Listing
Blog & News
SEO Friendly
Mobile Responsive
Social Media Integration
Email / SMS Notification
Advanced Dashboard
Reports & Analytics
Secure & User Friendly
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
BOOST YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


JOB PLACEMENT AGENCY
WEBSITE / SOFTWARE
CONNECTING TALENT, CREATING OPPORTUNITIES
COMPLETE JOB PLACEMENT AGENCY WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Job Listings Management
Advanced Job Search
Candidate Registration
Resume Upload
Employer Registration
Employer Dashboard
Job Application System
Shortlist Candidates
Interview Management
Email / SMS Notifications
Blog & News
Locations Management
Job Categories Management
Resume Database Search
Contact & Inquiry Management
Reports & Analytics
SEO Friendly
Mobile Responsive
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR BUSINESS
CALL / WHATSAPP
9040463899


LIVE
NEWS PORTAL
WEBSITE
/ SOFTWARE
FAST | RELIABLE | DYNAMIC
Powerful Solution for Digital News & Media Business
COMPLETE NEWS PORTAL WEBSITE
FOR JUST
₹2999/-
PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
Unlimited News Categories
Article & News Management
Breaking News Ticker
Multi Author System
Front-end News Submission
Featured News
Advanced Search
Comment & Engagement
Image & Video Gallery
Live TV / Radio Integration
Email / SMS Notifications
Social Media Integration
Advertisement Management
SEO Friendly
User Management
Role & Access Control
Reports & Analytics
Mobile Responsive
PROFESSIONAL DESIGN
EASY TO MANAGE
SECURE & RELIABLE
GROW YOUR AUDIENCE
CALL / WHATSAPP:
9040463899


ATTENTION
ரயில்வே மின்சார
ஒப்பந்த பணிக்கு
10th., ITI Electrical B- Licence, Dip EEE
தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599



# பல்சுவை களஞ்சியம்




# கொஞ்சம் யோசியுங்கள் பெற்றோர்களே..!

கோடை விடுமுறை துவங்கப் போகிறது பள்ளிக் குழந்தைகளுக்கு.! ஆனால் பள்ளிகளில் இனிமேல்தான் அதிரிபுதிரியாக வேலைகள் ஆரம்பிக்கும். தேர்வுத் தாள் மதிப்பீடு , தேர்வு முடிவுகள் , அடுத்த கல்வியாண்டுக்கான பாடப் பிரிவுகளை முறைப் படுத்துவது, புதிய மாணவர் சேர்க்கைக்காக விளம்பர உத்திகளை உருவாக்குவது அப்படி, இப்படியென்று ஆயிரத்தெட்டு வேலைகள் காத்திருக்கும் பள்ளி நிவாகத்துக்கும், ஆசிரியர் மற்றும் அலுவலக ஊழியர்களுக்கும்....!

பெற்றோர்களுக்கோ கோடை விடுமுறையில் குழந்தைகளை எப்படி போரடிக்காமல் அவர்கள் நேரத்தை உபயோகமாக செலவிட வைப்பது, அவர்கள் அடிக்கும் லூட்டிகளை எப்படி சமாளிப்பது என்பது பெரிய்ய கேள்விக்குறியாக இருக்கும்...! அதிலும் கணவன், மனைவி இரண்டு பேரும் வேலைக்குப் போகும் குடும்பங்களில் கோடை விடுமுறை என்பது கொஞ்சம் கொடுமையான விடுமுறையாகத்தான் இருக்கும்.



"குழந்தைகளை உங்க அம்மா வீட்டுக்கு அனுப்பலாமா" னு கணவனும்... "ஏன் எங்கம்மா,அப்பாவ மட்டும் இரும்புலயா அடிச்சு வெச்சிருக்கு...பாவம் அவங்களுக்கே ப்ரஷர், சுகருனு உடம்பைப் படுத்துது..பேசாம உங்கம்மா வீட்டுக்கே அனுப்பிரலாம் "னு மனைவியும் பேசி முடிவெடுப்பதற்குள் ..இரண்டு வீட்டுப் பெரியவர்களும் புத்திசாலித்தனமாக ஒரு முடிவெடுத்து விடுவார்கள். ரெண்டு பக்கத்திலிருந்தும் ஃபோன் வரும். "குழந்தைகளுக்கு லீவ் விட்டாச்சில்ல... குழந்தைகளோட வந்து ஒரு வாரமாச்சும்(!) தங்கிட்டுப் போகக்கூடாதா?..அப்படீனு...! இதிலிருந்தே தெரிஞ்சிக்கலாம்..."குழந்தைகளை மட்டும் அனுப்பினா எங்களால சமாளிக்க முடியாது.".னு அவங்க சொல்லாம சொல்றத...! உடனே பெத்தவங்களுக்கு ரோஷம் வரும். எங்கேயும் போக வேண்டாம். குழந்தைகளையும் அனுப்ப வேண்டாம். ஏதாச்சும் சம்மர் க்ளாஸ் ல சேத்திரலாம். லீவு முடியறதுக்குள்ள எங்கயாச்சும் நாலு நாள் டூர் போய்ட்டு வந்தா போகுது. அதுக்கப்புறம் இருக்கவே இருக்கு. அடுத்த வருஷத்துக்கான யூனிஃஃபார்ம் தைக்க...நோட்டு, புக்ஸ் இதை எல்லாம் வாங்கிட்டு வந்து அட்டை போட்டு,லேபிள் ஒட்டனு லீவெல்லாம் ஓடியே போயிடும்"னு இவங்களாகவே சம்மர் லீவுக்கு கூட ஒரு டைம் டேபிள் போட்டுக் கொள்வார்கள்...! சம்மர் கிளாஸில் சேர்த்த பிறகு தினமும் யார் கொண்டு போய் விட்டு, அழைத்து வருவது.. நீயா.. இல்லை நானா..?இது அடுத்த பிரச்சினை..!

இப்பிடி ஸ்கூல் நடத்துபவர்கள் ஒரு மாதிரி பிஸியாவும் மாணவர்களும் அவர்களைப் பெற்றவர்களும் வேறு ஒரு மாதிரி பிஸியாவும் இருப்பார்கள்.. ஆனால் இரண்டு தரப்பில் இருப்பவர்களும் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி யோசிக்கவே மாட்டார்கள். அது என்ன தெரியுமா? குழந்தைகளின் ஸ்கூல் பஸ் கண்டிஷன் எப்படி இருக்கிறது என்பதையோ, இல்லை குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் ஆட்டோ,வேன் இவற்றின் கண்டிஷன் எப்படி இருக்க்கிறதென்பதையோ யாரும் கவனிப்பதே இல்ல. ப்ரைவேட்டாக ஸ்கூலுக்கு மாணவர்களை அழைத்துச் செல்லும் வேன், ஆட்டோ எல்லாம் கோடை விடுமுறையில் ஓட்டமாக ஓடி டயர் எல்லாம் தேய்ந்து ஒரு மாதிரி இருக்கும்.! வாகன ஓட்டுனர்களிடம் சொல்லி வாகனத்தை எந்தவித ரிப்பேருமில்லாமல் நன்றாக சர்வீஸ் செய்து கொண்டு வந்தால்தான் குழந்தைகளை அனுப்ப முடியும் என்று பெற்றோர்கள் கறாராக சொல்வது மட்டுமல்லாமல்..வாகனம் நல்ல கண்டிஷனில் இருக்கிறதா என்று தாங்களே கட்டாயம் சோதனை செய்வது மிக அவசியம்.

அப்புறம் ஸ்கூல் பஸ்..! ஸ்கூல் பஸ்ஸோட கண்டிஷனை எல்லாம் பள்ளி நிர்வாகம் கவனத்தில் எடுத்துக்காது..! அவர்கள் கவனமெல்லாம் புதிதாக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்ன கண்டிஷன் போடலாமென்றோ அல்லது பள்ளிக் கட்டணத்தை எந்த விதமாக உயர்த்தலாம் என்பதில்தான் இருக்கும்.

இந்த விஷயத்தில் அதிக அக்கறையும்..பொறுப்பும் .பெற்றோர்களுக்கு மட்டும்தான்..! புதிய கல்வியாண்டுக்கு ஃபீஸ் கட்டச் செல்லும் போதே,பள்ளிப் பேருந்து நல்ல முறையில் பராமரிக்கப் பட்டு வருகிறதா..? பேருந்து ஓட்டுனர் ஓட்டுனர் உரிமம் பெற்றவரா...? உரிமத்தைப் புதுப்பித்துள்ளாரா? குழந்தைகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் அளவுக்குப் பொறுப்பானவராக அனுபவசாலியாக இருக்கிறாரா? என்பதை எல்லாம் ஐயமறக் கேட்டுத் தெரிந்து கொண்ட பிறகு திருப்தியான பதில் வந்த பிறகுதான் பள்ளிக் கட்டணத்தைக் கட்ட வேண்டும்.

மழுப்பலாகவோ...இல்லை இதை எல்லாம் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கட்டாயமில்லை என்று அதிகார தோரணையாகவோ பதில் அளித்தால் பெற்றோர்கள் தாரளமாக அவர்களைக் கேள்வி கேட்கலாம்.. பிள்ளைகளை வேறு பள்ளியில் சேர்க்கப் போவதாக எதிர்க்குரல் கொடுக்கலாம். குழந்தைகளின் பாதுகாப்புதான் முக்கியம். படிப்பு பிறகுதான்....!

“நாங்க ரொம்ப பிஸி..! அதனால வேற பேரன்ட்ஸ்கிட்ட இதைப் பத்தி விசாரிக்கச் சொல்லி இருக்கோம்னு விட்டேத்தியா இருந்துடாதீங்க...! உங்களுக்கு அறிமுகமான பேரன்ட்ஸ் எல்லோரையும் கூட்டிகிட்டு ஒரு க்ரூப்பா போயி இதைப் பத்தி ஸ்கூல்ல விசாரிங்க.அப்புறமா "ஃபுல் ஃபீஸ்" ( Full Fees ) கட்டுங்க..! அப்பதான் உங்க மைண்ட் "பீஸ் ஃபுல்" லா (Peacefull) இருக்கும்... !. கவனமாக இருங்க பெற்றோர்களே!

# மஹா பெரியவா அருள்வாக்கு



* வீண் செலவை தவிர்த்து அந்த பணத்தை தர்மத்துக்குப் பயன்படுத்துங்கள்.
* பணத்தைப் போலவே, பேச்சையும் அளவாகப் பயன்படுத்துவது நல்லது.
* எதிலும் அலட்சியபுத்தி கூடாது. விழிப்புடன் செயல்படுவது அவசியம்.
* லாப, நஷ்டக் கணக்கு போல வாழ்க்கை வியாபாரம் அல்ல. நல்ல பண்பே வாழ்வின் ஆதாரம்.
* கோபம் எதிராளிக்கு மட்டுமில்லாமல், நமக்கும் தீமையாகவே அமையும்.
* எடுத்து சொல்வதை விட, எடுத்துக்காட்டாக இருப்பது ஆற்றல் வாய்ந்தது. *-

# மீம்ஸ்








# விடுகதை



| | |
|---|---|
| என்னங்க ஏன் அடிக்கடி சமையல் ரூம் பக்கம் போறீங்க? | டாக்டர் தான் சுகர் இருக்கானா அடிக்கடி செக் பண்ண சொன்னாரு. |
| தானத்தில் பெரிய தானம் எது? | மைதானம். |
| ஏன்டா நாய் படம் வரைந்து விட்டு வாய் மட்டும வரையாமல் வச்சி இருக்க? | அது வாயில்லா பிராணி சார். |
| டாக்டர் இவ்வளவு மாத்திரையும் இரண்டு நாள்ல சாப்பிட்டு முடிக்கும் என்று சொன்னிங்களே ஏன்? | இரண்டு நாட்களுக்கு அப்புறம் எக்ஸ் ஸ்ப்ரே முடிந்துவிடும். |
| கும்பகர்ணன் மாத கணக்கில் தூங்கினான் அது என்ன காலம்? | கொசுவே இல்லாத காலம். |


# ஜோக்ஸ்



சாப்பாடு சரியில்லைன்னு சொன்னதுக்கு ஏண்டி உன் புருஷனை இந்த திட்டு திட்டறே?

பின்ன, அவரே சமைச்சிட்டு சரியில்லைன்னு சொன்னா....?

***********



கபாலி! போலீஸ்காரங்க வீட்டுலேயே உன் கைரிசையைக் காமிச்சியாமே?

பின்ன, கொடுத்த மாமூல் பணத்தை திருப்பி எடுக்க வேணாமா?

***********

போருக்குப் போகும் மன்னர் போர் ஆயுதங்கள் ஒன்றும் எடுக்காமல் போகிறாரே?

எதிரியின் காலில் விழுந்து சரணாகதி அடைவதற்கு போர் ஆயுதங்கள் எதற்கு?

***********

அந்த டிராபிக் போலீஸ்காரரை ஏன் சஸ்பென்ட் செஞ்சாங்க?

ரோடு என்ஜின் டிரைவருக்கு எதிரா "ஓவர் ஸ்பீடு "க்கு கேஸ் எழுதினாராம்!

***********

ஒட்டப்பந்தய வீரர்கள் எல்லோரும் ஏன் வரிசையா நிற்கறாங்க?

ஃபைனான்ஸ் கம்பெனி வேலைக்கு தேர்வு நடக்குது!



# வாங்க சம்பாதிக்கலாம்

## வங்கியில் வேலை



ரிசர்வ் வங்கியில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
ஜூனியர் இன்ஜினியர் பிரிவில் சிவில் 7, எலக்ட்ரிக்கல் 4 என மொத்தம் 11 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: டிப்ளமோ / பி.இ.,/ பி.டெக்.,
வயது: 20–30 (6.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு
தேர்வு மையம்: சென்னை, மதுரை
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 600. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 6.5.2026
விவரங்களுக்கு: opportunities.rbi.org.in

## இன்ஜினியரிங் முடித்தவருக்கு வங்கியில் வாய்ப்பு



பஞ்சாப் நேஷனல் வங்கியில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
ஆபிசர் பதவியில் சிவில் 21, எலக்ட்ரிக்கல் 7, மெக்கானிக்கல் 2 என மொத்தம் 30 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 20–30 (5.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு
தேர்வு மையம்: சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், நாகர்கோவில், விருதுநகர்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1180. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 59
கடைசிநாள்: 5.5.2026
விவரங்களுக்கு: pnb.bank.in

## ராணுவத்தில் எஸ்.ஐ., பணி



துணை ராணுவத்தை சேர்ந்த சகஸ்ட்ர சீமா பால் (எஸ்.எஸ்.பி.,) படையில் காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
சப் இன்ஸ்பெக்டர் பிரிவில் பயோனிர் 21, கம்யூனிகேசன் 20, நர்ஸ் 10 என மொத்தம் 51 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,/ பி.எஸ்சி., / ஜி.என்.எம்.,
வயது: 18–30 (20.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, உடல் தகுதி தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 200. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 4.5.2026
விவரங்களுக்கு: ssb.gov.in

## அனல் மின் நிறுவனத்தில் 250 அசிஸ்டென்ட் காலியிடங்கள்



மத்திய அரசின் தேசிய அனல் மின் நிறுவனத்தில் (என்.டி.பி.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'அசிஸ்டென்ட் எக்சிகியூட்டிவ்' பிரிவில் மொத்தம் 250 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18–35 (7.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 7.5.2026
விவரங்களுக்கு: careers.ntpc.co.in

## இன்ஜினியர்ஸ் இந்தியாவில் பணி




மத்திய அரசின் இன்ஜினியர்ஸ் இந்தியா நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையிலான காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அசோசியேட் இன்ஜினியர் 78, அசோசியேட் ஆபிசர் 15 என மொத்தம் 93 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,
வயது: 18- 35 (4.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: வாக் - இன் - இன்டர்வியூ.,
இடம்: Engineers India Limited, Sector-16 (On NH-48), Gurugram, Haryana- - 122 001
தேதி: 2026 மே 11 - 29.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 4.5.2026
விவரங்களுக்கு: eil.co.in

## மத்திய அரசில் 731 பணியிடங்கள்



மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பணியிடங்களுக்கு தேர்வு அறிவிப்பை எஸ்.எஸ்.சி., வெளியிட்டுள்ளது.
'ஸ்டெனோகிராபர்' பிரிவில் மொத்தம் 731 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிளஸ் 2
வயது: 18–30 (1.8.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, ஸ்கில் தேர்வு
தேர்வு மையம்: சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், கிருஷ்ணகிரி, தேனி, திருநெல்வேலி.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்.
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
விவரங்களுக்கு: ssc.gov.in

## சென்செக்ஸ், நிஃப்டி மீட்சி: உச்சம் தொட்ட எஃப்எம்சிஜி, வாகனத் துறை பங்குகள்!

நேற்றைய வர்த்தக அமர்வில் சரிவைக் கண்ட இந்தியப் பங்குச் சந்தை, இன்றைய வர்த்தகத்தில், வலுவாக மீண்டெழுந்தன. மேலும், நிறுவனங்களின் வருவாய் வளர்ச்சி குறித்த வலுவான உத்வேகம் உள்ளிட்டவையால், முதலீட்டாளர்கள் பங்குகளை வாங்கியதால், நிஃப்டி 50 குறியீடு வலுவாகத் தொடங்கி, வர்த்தக நேரத்தின் இடையே 24,334.70 என்ற உச்சத்தைத் எட்டியது.

அரசியல் பதற்றங்கள் தணியக்கூடும் என்பதற்கான அறிகுறிகளும், பங்குச் சந்தையின் வளர்ச்சிக்கு வெகுவாக உதவியதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இன்றைய வர்த்தகத்தில், சென்செக்ஸ் 1,095.6 புள்ளிகள் உயர்ந்து 77,982.51 புள்ளிகளாக இருந்தது. வர்த்தக முடிவில், 30 பங்குகளைக் கொண்ட சென்செக்ஸ் குறியீடு 609.45 புள்ளிகள் உயர்ந்து 77,496.36 புள்ளிகளாகவும், 50 பங்குகளைக் கொண்ட நிஃப்டி குறியீடு 181.95 புள்ளிகள் உயர்ந்து 24,177.65 புள்ளிகளாக நிலைபெற்றது.

சென்செக்ஸில் ஐடிசி, டெக் மஹிந்திரா, மாருதி, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ், பார்தி ஏர்டெல் மற்றும் மஹிந்திரா & மஹிந்திரா உள்ளிட்ட நிறுவன பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் இன்டர்குளோப் ஏவியேஷன், என்.டி.பி.சி, பஜாஜ் ஃபின்சர்வ் மற்றும் ஐசிஐசிஐ வங்கி ஆகிய நிறுவனங்களின் பங்குகள் சந்தித்தன.

நிஃப்டி-யில் மாருதி சுசுகி இந்தியா, கோல் இந்தியா, டெக் மஹிந்திரா, ஐடிசி லிமிடெட் மற்றும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் பங்குகள் உயரந்தும் மறுபுறம் இன்டர்குளோப் ஏவியேஷன், டாக்டர் ரெட்டிஸ் லேபரட்டரீஸ், என்டிபிசி, ஐசிஐசிஐ வங்கி மற்றும் பஜாஜ் ஃபின்சர்வ் ஆகிய நிறுவன பங்குகள் சரிந்தன.

நிஃப்டி மிட்கேப் 100 குறியீடு சரிவுடன் நிறைவடைந்த நிலையில், நிஃப்டி ஸ்மால்கேப் குறியீடு 0.65% உயர்ந்தன.

நாட்டின் மிகப்பெரிய கார் தயாரிப்பு நிறுவனமான மாருதி, 2026 நிதியாண்டில் ரூ. 14,679.5 கோடி என்ற சாதனை அளவிலான ஒருங்கிணைந்த நிகர லாபத்தைப் பதிவு செய்துள்ளதாக அறிவித்தது. இது கடந்த ஆண்டை விட 1.24 சதவீதம் அதிகமாகும். ஜிஎஸ்டி வரி விகிதக் குறைப்பால் உந்தப்பட்டு 24.22 லட்சத்திற்கும் அதிகமான வாகனங்களை விற்பனை செய்து, நிறுவனம் தனது வரலாற்றிலேயே, மிகச்சிறந்த வருடாந்திர விற்பனை சாதனையைப் படைத்ததன் விளைவாக, மாருதியின் பங்குகள் 2.82 சதவீதம் உயர்ந்தன.



வலுவான முடிவுகள் மற்றும் சாதகமான கருத்துக்களால், எஃப்எம்சிஜி, ஆட்டோமொபைல் மற்றும் ரியல் எஸ்டேட் பங்குகள் பங்குச் சந்தையை வழிநடத்தின. அதே வேளையில், பலவீனமான அறிகுறிகள், உயர்ந்து வரும் கச்சா எண்ணெய் விலை மற்றும் இந்திய ரூபாயின் மதிப்பு சரிவு, அரசியல் நிச்சயமற்ற தன்மை இருந்தபோதிலும், எதிர்பார்த்ததை விட சிறந்த வருவாய் ஆதரவுடன், முதலீட்டாளர்கள் இந்த சரிவைப் பயன்படுத்தி தங்கள் முதலீடுகளை அதிகரித்ததால், இந்தியப் பங்குச் சந்தைகள் சமீபத்திய சரிவிலிருந்து மீண்டன.

தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் ரூ. 2,103.74 கோடி மதிப்பிலான பங்குகளை விற்பனை செய்த நிலையில், உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் ரூ. 1,712.01 கோடி மதிப்பிலான பங்குகளை வாங்கியுள்ளனர்.

ஆசிய சந்தைகளைப் பொறுத்தவரை, தென் கொரியாவின் முக்கியக் குறியீடான கோஸ்பி, ஷாங்காய் எஸ்எஸ்இ காம்போசிட் மற்றும் ஹாங்காங்கின் ஹாங் செங் ஆகிய குறியீடுகள் உயர்வுடன் வர்த்தகத்தை நிறைவு செய்தன. ஜப்பானியப் பங்குச் சந்தைகள் விடுமுறை காரணமாக வர்த்தகம் நடைபெறவில்லை.

ஐரோப்பிய சந்தைகள் சரிவுடன் வர்த்தகமானது. அமெரிக்க சந்தைகள் நேற்று (செவ்வாய்க்கிழமை) சரிவுடன் முடிவடைந்தன.

உலகளாவிய பிரெண்ட் கச்சா எண்ணெய், பீப்பாய்க்கு ஒன்றுக்கு 2.85 சதவீதம் உயர்ந்து 114.4 அமெரிக்க டாலராக உள்ளது.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## மீன பட்டற்கழகு வாகனம்




ஸ்ரீ ஸ்தலசயன பெருமாள் பிரமோட்சவம் நாள் 6 காலை. சுர்ணாபிஷேகம். மீன பட்டற்கழகு வாகனம்

## யானை வாகனம்




மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமர் ஸன்னதி பராபவ வருட ப்ரம்மோத்ஸவம் 6ம் திருநாள் மாலை யானை வாகனம்.

## ஸ்ரீ நாராயணபெருமாள் பிரமோற்சவன்



நங்கூர் மணிமடக்கோவில் ஸ்ரீ நாராயணபெருமாள் பிரமோற்சவன்

## வைகுண்ட நாதா!!




அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில் சித்திரை பெருவிழா-2026 இரண்டாம் திருநாள்.

சர்வ அலங்காரத்தில் ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள்.







## கருட சேவை

ஸ்ரீ ஸ்தலசாயனா பெருமாள் பிரமோட்சவம் நாள் 5 மாலை.
கருட சேவை.





புதுப்பாடி பிரதோஷம்

## காட்பாடி கிளித்தான்பட்டறை ஸ்ரீராகவேந்திர சுவாமிகள் துவாதசி யை முன்னிட்டு ஊதா நிற அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலிப்பு!





**வேலூர்,ஏப்.30:**

வேலூர் மாவட்டம், காட்பாடி குடியாத்தம் செல்லும் சாலையில் கிளித்தான்பட்டறையில் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தை ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி நிர்வகித்து இதை பராமரித்து பல்வேறு பூஜைகளை இடைவிடாது நடத்தி வருகிறார்.

இந்த ஸ்ரீ ராகவேந்திரர் கோவிலில் மகா அன்னதான சேவை, ஸ்ரீ சத்திய நாராயண சுவாமி பூஜை, பல்லக்கு சேவை, ஊஞ்சல் சேவை, திருத்தேர் (ரத) உற்சவ சேவை, சர்வ சேவை, அனைத்து அபிஷேகங்கள், கனகாபிஷேகம் சேவா, வெள்ளிக்கவச சேவா, பஞ்சாமிர்த அபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் தொடர்ந்து நடத்தி வரப்படுகிறது.

இதனை ஸ்ரீக. மோதிலால் சுவாமி தொடர்ச்சியாக நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. புதன்கிழமை துவாதசியை முன்னிட்டு அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு விசேஷ அலங்கார பூஜைகள் நடந்தது.

இதைத் தொடர்ந்து இடைவிடாது நண்பகல் 12 மணி வரை கோவில் நடை திறந்திருந்தது. ஸ்ரீராகவேந்திரர் ஊதா நிற உடையில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ராகவேந்திரரை தரிசனம் செய்தனர். இதை தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடை திறக்கப்பட்டு பக்தர்கள் இடைவிடாது இரவு 9 மணி வரை தரிசனம் செய்தனர்.

இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்தாபகர் க. மோதிலால் சுவாமி விமரிசையாக செய்திருந்தார்.

## திருமஞ்சனம்



பாக்கம் ஸ்ரீஅமிர்தவல்லி தாயார் ஸமேத ஸ்ரீகரிய மாணிக்கப் பெருமாள் திருக்கோயில் உத்திரம் நட்சத்திரம் திருமஞ்சனம் நடைபெற்றது.

## மயிலை கேசவன் வசந்த உற்சவம்




மயிலை கேசவன் வசந்த உற்சவம் மூன்றாம் நாள்

## ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் வசந்தோத்சவம் திவ்ய சேவை.



ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் வசந்தோத்சவம் திவ்ய சேவை.

ர வசு மணி
ஒளிரும் வாழ்க்கைக்கு ஆசைப்பட்டால் இருளை கடந்துதான் ஆக வேண்டும்
ராஜகோபாலன்.J
பெங்களூரு



## ஏனாமில் பெட்ரோல், டீசல் வாங்க அலைமோதும் ஆந்திரா விவசாயிகள்: கேன்களுடன் குவிந்ததால் கட்டுப்பாடு விதிப்பு

**புதுச்சேரி, ஏப்.30:**

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் ஏனாம் பிராந்தியமானது ஆந்திரா மாநிலத்தின் காக்கிநாடா அருகே கோதாவரி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. பக்கத்தில் உள்ள ஆந்திராவைவிட ஏனாமில் பெட்ரோல், டீசல் ரூ.12 முதல் ரூ.14 வரை குறைவு என்பதால் ஆந்திராவின் காக்கிநாடா, கிழக்கு கோதாவரி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பெரும்பாலான வாகன ஓட்டிகள், விவசாயிகள் ஏனாமில்தான் பெட்ரோல், டீசல் வாங்கி செல்வது வழக்கம்.

தற்போது அங்கு பயிர் அறுவடை காலம் என்பதால் ஆந்திராவின் பல பங்க்குகளில் பெட்ரோல், டீசல் உடனடியாக தீர்ந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனால் ஆந்திராவின் காக்கி நாடா,



கிழக்கு கோதாவரி மட்டுமின்றி பல்வேறு பகுதிகளை சேர்ந்த அம்மாநில விவசாயிகள், வாகன ஓட்டிகள் பல கிமீ தூரம் கடந்து ஏனாம் பங்க்குகளுக்கு கடந்த சில நாட்களாக படையெடுத்து வருகின்றனர்.

இதனால் கேன் மற்றும் பேரல்களுடன் கூட்டம் அலைமோத, உள்ளூர்வாசிகளோ அத்தியாவசிய தேவைக்களுக்கு நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருள் வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அங்கு மொத்தம் 15 பங்க்குகளில் 7 பங்குகளே செயல்பட்டதால் ஏனாம் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

## ஜப்பான் விண்வெளி மையத்தில் இஸ்ரோ குழு ஆய்வு – விஞ்ஞானிகள் தகவல்

**சென்னை, ஏப்.30:**

நிலவின் தென் துருவத்தில் உள்ள நீர் பனிக்கட்டிகளை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் ஜப்பான் நாட்டு விண்வெளி ஆய்வு நிறுவனம் (ஜாக்ஸா) ஆகியவை இணைந்து சந்திரயான்-5 என்று அழைக்கப்படும் நிலவு துருவ ஆய்வு (லூபெக்ஸ்) திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

இதற்கான விண்கலம் ஜப்பானில் உள்ள தனேகாஷிமா விண்வெளி மையத்திலிருந்து ஜப்பானின் எச்.3 ராக்கெட்டைப் பயன்படுத்தி வருகிற 2028-ம் ஆண்டு ஏவப்பட உள்ளது. இதற்காக இஸ்ரோ தயாரித்த லேண்டரும், ஜப்பான் தயாரித்த ரோவரும் இதில் அனுப்பி வைக்கப்படுகிறது.

இந்திய லேண்டர், ரோவரை பாதுகாப்பாக நிலவின் மேற்பரப்பிற்கு கொண்டு செல்லும். அங்கு சென்றதும், சுமார் 350 கிலோ எடையுள்ள ஜப்பானிய ரோவர், நிலவைச் சுற்றி வந்து, அதன் மண்ணில் சுமார் 5 அடி ஆழம் வரை துளையிட்டு, மாதிரிகளை சேகரிக்கும். பனிக்கட்டி மற்றும் பிற பொருட்களை ஆய்வு செய்ய சிறப்பு கருவிகளும் பயன்படுத்தப்படுகிறது. தரவுகளைச் சேகரிப்பதற்காக நாசா மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சியின் (இ.எஸ்.ஏ.) கருவிகளும் அதில் இணைக்கப்பட்டிருக்கும். இந்த பயணம் நிலவில் குறைந்தது மூன்றரை மாதங்களிலிருந்து ஒரு ஆண்டுகள் வரை பணியில் இருக்கும். இது, 2023-ல் தென் துருவத்திற்கு அருகில் மென்மையாகத் தரையிறங்கிய சந்திரயான்-3 திட்டத்தில் இந்தியா பெற்ற வெற்றியை அடிப்படையாகக் கொண்டது.

திட்டமிடப்பட்ட சந்திரயான்-5 விண்கலம் ஏவுதலுக்கு முன்னதாக, இஸ்ரோ குழுவினர் ஏவுதள வசதிகளை ஆய்வு செய்ய ஜப்பான் நாட்டிலுள்ள தனேகாஷிமா விண்வெளி மையத்திற்கு சென்றனர். அங்கு, உபகரணங்களையும், அமைப்புகளையும் ஆய்வு செய்தனர்.

## வடமலம்பட்டியில் மாரியம்மன் திருவிழா



**போச்சம்பள்ளி, ஏப்.30:**

போச்சம்பள்ளி வட்டம் வடமலம்பட்டி கிராமத்தில் மாரியம்மன் திருவிழா வெகு விமரசியாக நடைபெற்று வருகிறது. வடமலம்ப்பட்டி கிராமத்தில் மாரியம்மன் திருவிழாவின் முதல் நிகழ்வாக மாரியம்மன் கூல் ஊற்றுதல் விழாவும் அதைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் மற்றும் ஸ்ரீ மாரியம்மனுக்கு மாவிளக்கு ஊர்வலமும் நடைபெற்றது.


இன்று 30.04.2026 வியாழக்கிழமை மாலை 6:30 மணி அளவில் மாரியம்மன் திருவிழாவை முன்னிட்டு சிவ. முத்து லட்சுமணன் குழுவினரின் இன்னிசை பாட்டு பட்டிமன்றம் நடைபெற உள்ளது.

01.05.2026 வெள்ளிக்கிழமை காலை சர்வலிங்கேஸ்வரர் ஞானாம்பிகை தாயார் மற்றும் சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை ஆகியோருக்கு தெய்வத் திருமணங்கள் நடைபெற உள்ளது.

விழாவில் சுற்றுப்புற கிராமங்களைச் சார்ந்த பக்த கோடிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று கோவில் நிர்வாகத்தின் சார்பாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# சுற்றுலா: ஏழைகளின் ஊட்டி ஏற்காட்டில் காணவேண்டிய இடங்கள்!



ஏற்காடு மலை சேலத்தின் அருகே கிழக்கு தொடர்ச்சி மலை பகுதியில் உள்ள ஒரு மலைவாச தலமாகும். இது சேர்வராயன் மலைத்தொடரின் ஒரு பகுதியாக உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 1515 மீட்டர் சுமார் 5000 அடி அடி உயரத்தில் உள்ளது. பசுமையான மலைகள் காப்பி தோட்டங்கள் இதமான சூழ்நிலை என பிரமிக்க வைக்கிறது இது சிறந்த சுற்றுலா தலமாக செயல்பட்டு வருகிறது. இவன் பரப்பளவு 4382 சதுர கிலோமீட்டர். ஏழைகளின் ஊட்டி என பெயர் பெற்றுள்ளது.

சேலத்தில் இருந்து ஏற்காடு செல்ல பேருந்து வசதிகள் உள்ளது.

இங்கு கோடை விழாவின்போது மலர் கண்காட்சி நாய் கண்காட்சி படகு போட்டி ஆகியன சிறப்பாக நடைபெறும் இதை காண்பதற்காக ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருவார்கள். இங்குள்ள ஜப்பானிய பூங்கா பார்க்கவேண்டிய ஒரு இடமாகும். இங்கு பல வகையான தாவர கன்றுகள் விற்பனைக்கு கிடைக்கும் மணிப்பாறை என்ற இடத்தில் கல்லால் மோதினால் மணி சத்தம் கேட்கும். இதை பார்ப்பதற்கு வினோதமாக இருக்கும்.

ஏற்பாட்டில் இருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் கிள்ளியூர் நீர்வீழ்ச்சி உள்ளது. இந்த இடத்தில் குளிப்பதற்கு சுகமாக இருக்கும். ஏராளமான சுற்றுலா பயணிகள் இந்த கிள்ளியூர் நீர்வீழ்ச்சியில் குளித்து மகிழ்ச்சி அடைகின்றனர். இங்குள்ள பாறைகள் அழகாக இயற்கையாக அமைந்துள்ளது. சேர்வராயன் கோவில் பெருமாள் குகை கோவில் சிறப்பாக உள்ளது.

இதை சுற்றி மான் பூங்கா பொழுதுபோக்கு பூங்கா அண்ணா பூங்கா மற்றும் படகு சவாரி உள்ளது. படகு சவாரி செய்ய காலை 9 மணி முதல் 5 மணி வரை செயல்படும் எட்டு நபர்களுக்கு 320 நான்கு நபர்களுக்கு 110 ரூபாய் வசூல் செய்கிறார்கள். இதை ஒட்டி பக்கோடா காட்சி முனை உள்ளது. ஏற்காடு கிழக்கு முனையில் அமைந்துள்ளது பிரமிடு பாய்ண்ட். இந்த இடத்தில் ராமர் கோவில் உள்ளது. இங்கிருந்து அயோத்தியா பட்டணம் முழுவதையும் அருமையாக பார்க்கலாம். இவை ஏற்காட்டில் இருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

ஏற்காட்டில் இருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. இங்குள்ள பட்டுப் பண்ணை கண்ணை கவரும் விதத்தில் உள்ளது.

மல்பெரி செடிகள் அதிகம் காணப்படுகிறது. இந்தப் பூங்காவில் பல வண்ணங்களில் ரோஜா மலர்களை காணலாம். தமிழக கேரள எல்லைப் பகுதியில் இருப்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகை தருகின்றனர். ஏற்காடு ஏரி சீமாட்டி இருக்கை பக்கோடா, டாப் சிகரம் காவேரி சிகரம் போன்றவை பார்க்க வேண்டிய இடங்கள்.

சேலம் பஸ் நிலையத்தில் இருந்து 32 கிலோமீட்டர் தொலைவில் ஏற்காடு உள்ளது. அக்காலத்தில் பிரிட்டிஷ்காரர்கள் இந்த இடங்களில் கோடை காலத்தில் குடும்பத்துடன் வசித்து வந்தனர். பார்க்க வேண்டிய இடங்கள் என எடுத்துக்கொண்டால் மரகதை ஏரி லேடிஸ் சீட் பக்கோடா பாயிண்ட் சேர்வராயன் கோவில் நல்லூர் அருவி கிள்ளியூர் அருவி கரடி முனை காட்சி லலிதா திரிபுரசுந்தரி அம்மன் கோவில் முதலியவற்றையும் சுற்றி வரலாம்.

இங்கு கோடை விழாவின்போது மலர் கண்காட்சி நாய் கண்காட்சி, மூலிகை கண்காட்சி படகு பட்டி ஆகியவை சிறப்பாக நடைபெறும்.

இதனைக்காண பல்லாயிரக்கணக்கான மக்கள் கோடைகாலத்தில் இங்கு வருகை தருவார்கள். இங்கு தங்குவதற்கு ஏற்றபடி விடுதிகளும் உணவகங்களும் உள்ளன. ஊட்டிக்கு போனால் அதிக செலவாகும் ஆனால் ஏற்காடு போனால் செலவு கம்மியாகும்

எனவே இதனை ஏழைகளின் ஊட்டி என அழைக்கின்றனர். வாழ்க்கையில் ஒரு முறையேனும் கண்டுகளிக்க அற்புதமான இடமாக உள்ளது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### மத்திய அரசுத் துறைகளில் போட்டித் தேர்வு மூலம் சுருக்கெழுத்தர்கள் நியமனம்



மத்திய அரசுத் துறைகளில் போட்டித் தேர்வு மூலம் 731 சுருக்கெழுத்தர்களை நியமனம் செய்வதற்கான அறிவிப்பை அரசுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (எஸ்எஸ்சி) வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: மத்திய நிதி அமைச்சகத்தின்கீழ் உள்ள வருவாய்த் துறை, பணியாளர் மற்றும் பயிற்சித் துறை ஆகியவற்றில் குரூப்-சி, குரூப்-டி பிரிவுகளில் 731 சுருக்கெழுத்தர்கள் நியமனம் செய்யப்பட உள்ளனர். இதற்கான போட்டித் தேர்வுக்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர் பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதோடு, சுருக்கெழுத்துப் பயிற்சியும் அவசியம். குரூப்-டி பிரிவுக்கு வயது வரம்பு 27, குரூப்-சி பிரிவுக்கு 30 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வயது வரம்பில் ஓபிசி பிரிவினருக்கு 3 ஆண்டுகள், எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகள், மாற்றுத் திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் தளர்வு அளிக்கப்படும். உரிய வயது, கல்வித் தகுதி உடையவர்கள் https://ssc.gov.in என்ற இணையதளம் வாயிலாக மே 15-ம் தேதிக்குள் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

முதல்கட்டமாக, கணினி வழி எழுத்துத் தேர்வு ஜூலை - ஆகஸ்டில் நடைபெறும். பொது நுண்ணறிவுத் திறன், ரீசனிங், பொது அறிவு, ஆங்கில மொழி ஆகிய 3 பாடங்களில் இருந்து வினாக்கள் இடம்பெறும். இதில் தேர்ச்சி பெறுவோருக்கு சுருக்கெழுத்து தேர்வு நடத்தப்படும் என்று எஸ்எஸ்சி அறிவித்துள்ளது.

## கோடை விடுமுறைக்குப் பின் ஜுன் 1 பள்ளிகளில் வகுப்புகள் துவக்கம்

**தஞ்சாவூர், ஏப். 30:**

*தஞ்சாவூர் மாவட்டத்தில், அரசு, அரசு உதவிபெறும், தனியார், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பள்ளி இறுதித் தேர்வுகள் ஏப். 16 அன்று நிறைவடைந்து, ஏப். 17 முதல் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் கோடை விடுமுறை என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏப்ரல் 25 ஆம் தேதி வரை அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் எல்கேஜி, யூகேஜி வகுப்புகளை கையாளும் ஆசிரியர்கள் உட்பட அனைத்து ஆசிரியர்களும் பள்ளிக்கு வருகை புரிந்து விடைத்தாள் மதிப்பீட்டு பணி, 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை பணி சார்ந்த நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026-27 ஆம் ஆண்டிற்கான புதிய கல்வியாண்டில் ஜுன் 1 (திங்கட்கிழமை) முதல் அனைத்து வகை அரசு, அரசு உதவிபெறும், தனியார், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்புகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2026-2027 ஆம் கல்வியாண்டு முதல் 1 முதல் 3 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு புதிய பாட நூல்கள் அறிமுகப்படுத்தப்படுவதால், இவ்வகுப்புகளை கையாளும் ஆசிரியர்களுக்கு ஜுன் 1 முதல் ஜுன் 3 வரை மாவட்ட அளவில் பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. எனவே, 1 முதல் 3 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு மட்டும் ஜுன் 4 (வியாழக்கிழமை) அன்றுமுதல் வகுப்புகள் தொடங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தஞ்சை மாவட்ட ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.*

## உணவக ஊழியரை தாக்கியவர்கள் கைது

**மயிலாடுதுறை, ஏப்.30:**

*மயிலாடுதுறை மாவட்டம் பழைய பேருந்து நிலையத்தில் செந்தில் என்பவர் உணவகம் நடத்தி வருகிறார். இந்த உணவகத்தில் கடந்த ஏப்.25 ஆம் தேதி மாலை உணவு வாங்க வந்த அம்பேத்கர் தெருவைச் சேர்ந்த 17வயது சிறுவன் ஒருவர், உள்ளே வந்த சோயா சாஸ்சை எடுத்து அதிகமாக ஊற்றி பிரைடு ரைஸ் பார்சல் கேட்டுள்ளார்.*

*ஆர்டர் போட்டு வரும்படி மாஸ்டர் ஆரோன் கூறுகையில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.*

*தொடர்ந்து ஆரோன் சிறுவனை தாக்கிய நிலையில் கைகலப்பு ஏற்பட்டது. உணவக ஊழியர்கள் சிறுவனை விரட்டியுள்ளனர். தொடர்ந்து சிறுவன், தனது சகோதரர் பிரவீன் உள்ளிட்ட 6 பேர் அடங்கிய கும்பலுடன் வந்து உணவக ஊழியர்கள் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தினர். உணவு தயார் செய்யும் மாஸ்டர் ஆரோனை கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு தாக்கியதில், தலையில் அடிபட்டு ரத்தம் வழிந்தது.*

*ரத்தம் சொட்ட சொட்ட நின்ற ஆரோனை மீண்டும் மீண்டும் தாக்கினர். தடுத்தவர்களையும் தாக்கிவிட்டு தப்பிச் சென்றனர்.*


*இச்சம்பவம் தொடர்பாக அம்பேத்கர் நகரைச் சேர்ந்த 17 வயது சிறுவன், அவரது அண்ணன் பிரவீன் ஆகிய இருவரை போலீசார் கைது செய்து சிறுவனை தஞ்சை கூர்நோக்கு மையத்திலும் பிரவீனை சிறையிலும் அடைத்தனர்.*

*பிரவீன் மீது கஞ்சா உள்ளிட்ட அடிதடி வழக்குகள் உள்ளன. தாக்குதலில் ஈடுபட்டவர்கள் போதையில் இருந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. தாக்குதலின் போது மேஜையில் இருந்த செல்போனையும் திருடிச் சென்று விட்டதாக கூறப்படுகிறது.*

*தாக்குதலில் ஈடுபட்ட மேலும் சிலரை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.*

## சுட்டெரிக்கும் வெயில்: ‘ஹீட் ஸ்ட்ரோக்’ பாதிப்பில் இருந்து தப்புவது எப்படி?

**சென்னை, ஏப்.30:**



*தமிழகத்தின் முக்கிய நகரங்களில் வெயில் 100 டிகிரியைத் தாண்டி பதிவாகி வருவதால், ‘ஹீட் ஸ்ட்ரோக்’ எனப்படும் வெப்பத்தாக்கம் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இது சாதாரண உடல் உபாதை அல்ல, உடலின் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ்க்கும் மேல் உயர்ந்து உறுப்புகளைப் பாதிக்கும் ஒரு மருத்துவ அவசர நிலை என்பதால் பொதுமக்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும்.*

*உடல் மிகச் சூடாக இருப்பது, தோல் வறட்சி, கடுமை யான தலைவலி, வாந்தி, பேசுவதில் தடுமாற்றம் மற்றும் இதயத் துடிப்பு அதிகரித்தல் போன்றவை இதன் முக்கிய அறிகுறிகளாகும். இதிலிருந்து தப்பிக்க தாகம் இல்லாவிட்டாலும் தொடர்ந்து தண்ணீர் அருந்துவதுடன், நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை நேரடியாக வெயிலில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். வெளியேசெல்லும்போது குடை, தொப்பி அணிவதுடன், வெளிர் நிறப் பருத்தி ஆடைகளை உடுத்துவதும், நீர்ச்சத்து நிறைந்த உணவுகளை உண்பதும் பாதுகாப்பானது. குறிப்பாக, மதுபானங்கள் மற்றும் அதிகப்படியான காபி, டீயைத் தவிர்ப்பது உடலில் நீரிழப்பு ஏற்படுவதைத் தடுக்கும்.பாதிப்புக்குள்ளான நபரை உடனடியாகக் காற்றோட்டமான இடத்திற்கு மாற்றி, இறுக்கமான ஆடைகளைக் கழற்றிவிட்டு, குளிர்ந்த நீரால் நனைக்கப்பட்ட துணியைக் கொண்டு உடல்முழுவதையும் துடைக்க வேண்டும். குறிப்பாகக் கழுத்து, அக்குள் மற்றும் இடுப்புப் பகுதிகளில் ஐஸ் கட்டிகள் அல்லது குளிர்ந்த நீர் துணியை வைப்பது உடல் வெப்பத்தை சீக்கிரம் குறைக்க உதவும்.*

*பாதிக்கப்பட்டவர் சுயநினைவுடன் இருந்தால் மட்டும் இளநீர் அல்லது உப்பு - சர்க்கரை கரைசல் வழங்கலாம்; மயக்க நிலையில் இருப்பவர்களுக்கு வாயில் எதை யும் ஊற்றக்கூடாது. மேலும், ஹீட் ஸ்ட்ரோக் பாதிப்பிற்குச் சாதாரணக் காய்ச்சல் மருந்துகள் பலன் தராது என்பதால், முதலுதவிக்குப் பின் தாமதிக்காமல் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதே உயிரைக் காப்பாற்றச் சிறந்த வழியாகும்.*

## ரசாயனம் கலந்த மாம்பழங்களை விற்றால் ரூ.5 ஆயிரம் அபராதம்: தமிழக அரசு எச்சரிக்கை

**சென்னை, ஏப்.30:**



*மாம்பழ சீசன் மார்ச் இறுதியில் தொடங்கி ஜூலை வரை நீடிக்கும். இந்த ஆண்டு ஏப்ரல் இறுதியில் சீசன் தொடங்கியுள்ள நிலையில், வரத்து குறைவாக இருப்பதால் விலை சற்று அதிகமாக உள்ளது.*

*சந்தைகளில் மாம்பழம் விற்பனை சூடுபிடித்துள்ள நிலையில், கடை உரிமையாளர்களுக்கு தமிழக உணவு பாதுகாப்புத்துறை எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.*

*ரசாயனம் மூலம் செயற்கையாக மாம்பழங்களைப் பழுக்க வைத்து விற்பனை செய்யும் கடை உரிமையாளருக்கு 5ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதோடு, உணவுப் பாதுகாப்புத் துறை உரிமம் ரத்து செய்யப்படும் என தமிழக அரசு எச்சரித்துள்ளது.*

*அதிக லாபத்திற்காக செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட பழங்களை உண்பது உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் என்பதால் மாம்பழங்கள் மொத்த மற்றும் சில்லரை விற்பனைக்கடைகளில் ரசாயன முறையில் மாம்பழம் பழுக்க வைக்கப்படுகிறதா? என அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ளவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.*

## நெல்லையில் எலுமிச்சம் பழம் விலை உயர்வு

**நெல்லை, ஏப்.30:**

கோடை வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் எலுமிச்சம் பழம் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் உள்ள திருக்குறுங்குடி சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த பிப்ரவரி மாத துவக்கத்திலிருந்து வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. வெயிலின் தாக்கத்திலிருந்து தற்காத்துக் கொள்ள பழவகைகள், குளிர்ச்சி தரும் இயற்கை பானங்கள், பழச்சாறுகளை பொது மக்கள் நாடுகின்றனர். குறிப்பாக எலுமிச்சம் பழத்திற்கான தேவை மக்களிடம் அதிகரித்துள்ளது. இந்நிலையில் பிப். மாதத்தில் பத்து ரூபாய்க்கு 3 எலுமிச்சம் பழம் விற்பனை செய்யப்பட்டு வந்தது. கடந்த வாரம் ஒரு கிலோ எலுமிச்சம் பழம் ரூ.200க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனிடையே வரத்து குறைந்துள்ளதால் தற்போதைய நிலவரப்படி ஒரு கிலோ எலுமிச்சம் பழம் ரூ.280-க்கு விற்கப்பட்டது.

## களக்காடு அருகே ஊருக்குள் உலா வரும் மலைப்பாம்பு

**திருநெல்வேலி, ஏப்.30:**

களக்காடு அருகே உள்ள தோப்பூரில் தினசரி நள்ளிரவில் 12 அடி நீளமுள்ள மலை பாம்பு ஒன்று சுற்றி வருவதாக கூறப்படுகிறது. வீடுகளுக்கு அருகே தெருக்களில் மலை பாம்பு சுற்றி வருவதால் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர்.

தெருக்கள் வழியாக செல்லும் பாம்பு ஊரையொட்டி உள்ள கால்வாய் புதர்களுக்குள் செல்வதாகவும் கூறுகின்றனர். இதனால் பொதுமக்களின் உயிர்களுக்கு பாதுகாப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளதால், மலை பாம்பை பிடித்து வனப்பகுதிக்குள் கொண்டு விட வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## வெப்ப அலை தாக்கம்: பொதுமக்களுக்கு எச்சரிக்கை

**பெரம்பலூர், ஏப். 30:**

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக வெப்பம் அதிகரித்துவரும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் தனது அறிவிக்கையில், பெரம்பலூர் மாவட்டத்தில், வரும் நாட்களில் ஓரிரு இடங்களில் வெப்ப அலைவீசக்கூடும் என்றும், வெயிலின் அளவு 41 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கக்கூடும் எனவும் அறிவித்துள்ளது. எனவே, பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துமாறும், அத்தியாவசியத் தேவையின்றி வெயிலில் செல்வதைத் தவிர்க்குமாறும், குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியில் செல்வதை தவிர்த்திடுமாறும், வெயிலின் தாக்கத்தால் உடல்நலக்குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக அரசு மருத்துவமனையை அணுகுமாறும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# மின்மாற்றி கொள்முதல் முறைகேடு விவகாரம்: செந்தில் பாலாஜி தொடர்பான வழக்கு சிபிஐக்கு மாற்றம்




**சென்னை, ஏப்.30:**

செந்தில் பாலாஜி, மின் துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில், டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதலில் அரசுக்கு ரூ.397 கோடி இழப்பு ஏற்படுத்தியது தொடர்பான புகார்கள் மீது சிபிஐ விசாரணை நடத்த சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை இரண்டு வாரங்களில் சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என, லஞ்ச ஒழிப்புத்துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

கடந்த 2021 முதல் 2023 ஆம் வரையிலான காலகட்டத்தில், செந்தில் பாலாஜி, மின் துறை அமைச்சராக பதவி வகித்த காலத்தில், 45 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் செய்ததில் 397 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி சிறப்பு புலனாய்வு குழு விசாரணைக்கு உத்தரவிடக் கோரி அறப்போர் இயக்கத்தின் சார்பிலும், சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி அதிமுக வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் இ.சரவணன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் சார்பிலும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு, டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் முறைகேடு புகார்கள் மீது சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக புதிதாக விசாரணையை நடத்த சிபிஐக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு தொடர்பான ஆவணங்களை இரண்டு வாரங்களில் சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என, லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டனர்.

ஆவணங்களை பெற்றுக் கொள்ளும் சிபிஐ, விரைந்து விசாரணையை நடத்தி முடித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், சிபிஐ விசாரணைக்கு, டான்ஜெட்கோ, லஞ்ச ஒழிப்புத் துறை, தமிழக அரசு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், வழக்கை சுதந்திரமான விசாரணை அமைப்புக்கு மாற்ற வேண்டுமா என்பதை முடிவு செய்வதற்கு தானே தவிர, குற்றச்சாட்டுக்களின் தகுதி குறித்த முடிவாக கருத முடியாது எனவும், இந்த கருத்துக்கள் யாருக்கும் எதிரானவையாக கருத முடியாது என்றும் நீதிபதிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

# க்ரைம் கார்னர்

## விருதுநகர் அருகே பயங்கரம்: நகைக்காக கழுத்தை நெரித்து இளம்பெண் கொலை

**விருதுநகர், ஏப்.30:**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே வைத்தியலிங்கபுரம் வ.உ.சி. நகர் பகுதியை சேர்ந்தவர் கணேசன், மின்வாரிய ஊழியர் இவருடைய மனைவி கலைச்செல்வி (25). இவர்களது பக்கத்து வீட்டை சேர்ந்தவர் முனியராஜ் (36). இவருடைய மனைவி ஐஸ்வர்யா (33). ஐஸ்வர்யா வீட்டுக்கு சென்று கலைச்செல்வி பேசுவது வழக்கம். கணேசன் நேற்று வழக்கம்போல் பணிக்கு சென்று விட்டார். கலைச்செல்வி மட்டும் தனியாக இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து கணேசன் பணி முடிந்து மாலையில் வீட்டுக்கு வந்தார். அப்போது மனைவியை காணவில்லை. எனவே முனியராஜ் வீட்டுக்கு தேடிச்சென்றார். அங்கு கலைச்செல்வி கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் பிணமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இதுகுறித்து அவர் வன்னியம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். போலீசாரின் விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து முனியராஜ், ஐஸ்வர்யா ஆகிய 2 பேரிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். நகைக்காக இளம்பெண் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கொலை முயற்சி வழக்கில் வாலிபர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, ஏப்.30:**

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி பகுதியில் கொலை முயற்சி, மிரட்டல் உள்ளிட்ட குற்ற செயல்களில் ஈடுபட்ட தூத்துக்குடி மாவட்டம், வசவப்பபுரத்தை சேர்ந்த சுடலைமுத்து என்பவரின் மகன் மாயாண்டி(எ) மதன் (வயது 21) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் கொலை முயற்சி, மிரட்டல், வழிப்பறி போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொதுமக்களை அச்சுறுத்தி வருவதாக சீவலப்பேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் சுபாஷ் கவனத்திற்கு வந்தது. இதனையடுத்து அவர் மேற்சொன்ன வாலிபர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன் பேரில், திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. பிரசண்ணகுமார் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் சுகுமார் உத்தரவின்பேரில் மாயாண்டி(எ) மதன் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று அடைக்கப்பட்டார். திருநெல்வேலி மாவட்டத்தில் மக்களின் பாதுகாப்பை கருதி, சட்ட ஒழுங்கை பாதுகாக்கவும், குற்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்கவும், அதனை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 46 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## 13 வயது சிறுமிக்கு பாலியல் தாக்குதல்: தந்தைக்கு 14 ஆண்டுகள் சிறை

**திருநெல்வேலி, ஏப்.30:**

கடந்த 2025-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் தந்தை ஒருவர் தனது 13 வயதான மகளிடம் பாலியல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய், திருநெல்வேலி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில், காவல்துறையினர் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து, திருநெல்வேலி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரியம்மாள் புலன் விசாரணை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட சிறுமயின் தந்தையை கைது செய்தார். புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் குற்றவாளிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதிபதி சுரேஷ்குமார் நேற்று குற்றவாளிக்கு தண்டனை வழங்கினார்.

# விளையாட்டு செய்திகள்

## ஐ.எஸ்.எல். கால்பந்து: ஒடிசாவை வீழ்த்தி ஈஸ்ட் பெங்கால் வெற்றி

**கொல்கத்தா, ஏப்.30:**

14 அணிகள் இடையிலான 12-வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி தொடர் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் கொல்கத்தாவில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் - ஒடிசா எப்.சி. அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி சார்பில் பிபின் சிங் ஆட்டத்தின் 11-வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். யூசுப் 70 மற்றும் 83-வது நிமிடங்களில் என இரண்டு கோல்கள் அடித்தார். ஒடிசா அணி எந்த கோலும் அடிக்கவில்லை. இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் ஈஸ்ட் பெங்கால் அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஒடிசா எப்.சி. அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

## ஐசிசி டி20 தரவரிசை: ஸ்ரீசரனி அதிரடி




**துபாய், ஏப்.30:**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நேற்று வெளியிட்ட பெண்கள் டி20 கிரிக்கெட் வீராங்கனைகளின் புதிய தரவரிசைப் பட்டியலில், இந்திய வீராங்கனை ஸ்ரீசரனி மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி இரண்டு போட்டிகளில் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்திய இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஸ்ரீசரனி, தரவரிசையில் 12 இடங்கள் முன்னேறி 11-வது இடத்தைப் பிடித்துள்ளார்.

மற்றொரு இந்திய நட்சத்திரம் தீப்தி ஷர்மா ஒரு இடம் உயர்ந்து 4-வது இடத்தைப் பெற்றுள்ளார். பாகிஸ்தானின் சாடியா இக்பால் பந்துவீச்சாளர் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

## "விராட் கோலிக்கு சவால் விட அவரால் மட்டுமே முடியும்" - இந்திய முன்னாள் வீரர்

இந்திய நட்சத்திர வீராங்கனை ஸ்மிர்தி மந்தனா ஒரு இடம் சரிந்து 5-வது இடத்திற்கும், ஷபாலி வர்மா 2 இடங்கள் சரிந்து 8-வது இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளனர். கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 10-வது இடத்தில் உள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான தொடரில் 330 ரன்கள் குவித்து தொடர் நாயகி விருது வென்ற தென் ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வார்ட், 2 இடங்கள் முன்னேறி 3-வது இடத்தைப் பிடித்துள்ளார். ஆஸ்திரேலியாவின் ஜார்ஜியா வோல் (815 புள்ளிகள்) மற்றும் பெத் மூனி (788 புள்ளிகள்) முறையே முதல் மற்றும் இரண்டாம் இடங்களில் நீடிக்கின்றனர்.

# தவெக தலைவர் விஜய் சீரடியில் தரிசனம்



**சென்னை, ஏப்.30:**

தவெக தலைவர் விஜய் நேற்று அதிகாலை திருச்செந்தூர் முருகன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார். நேற்று முன்தினம் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்ற விஜய், அங்கு கடல் குளித்து முடித்துவிட்டு விஸ்வரூப தரிசனம் செய்தார். முன்னதாக கோவில் சார்பில் நடிகர் விஜய்க்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது. அதே போன்று செந்தூர் முருகனின் நினைவாக அவருக்கு வேல் ஒன்றும் பரிசளிக்கப்பட்டது. திருச்செந்தூர் முருகப்பெருமானை தரிசித்துவிட்டு உடனடியாக சென்னை திரும்பி இருக்கும் நடிகர் விஜய் அடுத்ததாக தனது இஷ்ட தெய்வமான ஷீரடி சாய் பாபா கோவிலுக்கு செல்ல முடிவு செய்தார். இதற்காக நேற்று (புதன்கிழமை) காலை சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் மராட்டியத்திற்கு விஜய் புறப்பட்டுள்ளார். ஷீரடி சாய்பாபா கோவிலில் சாமி தரிசனம் முடித்த பிறகு விஜய் சென்னை திரும்புவார் என்று தவெக வட்டாரங்கள் கூறுகின்றன.

# புல்லட் ரயில் திட்டம்! சென்னையிலிருந்து பெங்களூருக்கு வெறும் 73 நிமிடங்களில்...



**விசாகப்பட்டினம், ஏப்.30:**

சென்னை - பெங்களூரு இடையேயான புல்லட் ரயில் சேவையால் பயண நேரம் 73 நிமிடங்களாகக் குறைக்கப்படும் என மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தரவு மையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பேசியதாவது, "புல்லட் ரயில் நம் அனைவரின் கனவுத் திட்டம். இந்தச் சேவை, நமது பயண நேரத்தைக் குறைத்து, முக்கிய நகரங்களைக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த பொருளாதார மண்டலத்தை உருவாக்கும்.

புல்லட் ரயில் சேவையால், அமராவதி - ஹைதராபாத் இடையேயான பயண நேரம் வெறும் 70 நிமிடங்களாகக் குறைக்கப்படும். அமராவதி - சென்னை இடையேயான பயணமும் 112 நிமிடங்களாகக் குறைக்கப்படும்.

ஹைதராபாத் - புணே இடையே 1 மணி 55 நிமிடங்களும், புணே - மும்பை இடையே 48 நிமிடங்களும், ஹைதராபாத் - பெங்களூரு இடையே 2 மணி 8 நிமிடங்களாகவும், அமராவதி - ஹைதராபாத் இடையே 70 நிமிடங்களும், சென்னை - பெங்களூரு இடையேயான பயண நேரம் 73 நிமிடங்களாகவும் இருக்கும். சென்னை - பெங்களூரு இடையேயான திட்டம் விரைவில் தொடங்கப்படும்.

இந்த அதிவேக ரயில் சேவையானது, முக்கிய நகரங்களை இணைத்து, குறிப்பிடத்தக்க முக்கிய முன்னேற்றங்களைக் கொண்டுவரும்" என்று தெரிவித்தார்.

# விடுமுறை என போலி அரசாணை: இளைஞர் கைது

**ஐஸ்வால், ஏப்.30:**

மிசோரம் மாநிலத்தில் பலத்த மழை காரணமாக பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக, சமூக வலைதளங்களில் போலி சுற்றறிக்கையைப் பரப்பிய 18 வயது இளைஞரை அம்மாநில சைபர் கிரைம் போலீஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 27-ம் தேதி, சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் ஒன்று பெறப்பட்டது. அதில், "மாநிலத்தில் கனமழை பெய்து வருவதால் ஏப்ரல் 27-ம் தேதி பொது விடுமுறை" என ஒரு போலி அரசாணை சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீஸார், தீவிர விசாரணையில் இறங்கினர்.

தொழில்நுட்ப உதவியுடன் துப்பு துலக்கிய போலீஸார், அந்தப் போலிச் செய்தியை உருவாக்கிய 18 வயது இளைஞரை அடுத்த 24 மணிநேரத்திற்குள் கண்டுபிடித்துக் கைது செய்தனர்.

பொதுமக்களைக் குழப்பும் வகையிலும், அரசு ஆவணங்களைப் போலியாகத் தயாரித்தும் சமூக வலைதளங்களில் பரப்புவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீஸார் எச்சரித்துள்ளனர்.

# வணிகச் செய்திகள்

## ரூ.2,800 கோடி முதலீட்டில் அதிவேக டெலிவரி சேவையை வழங்க அமேசான் திட்டம்

**பெங்களூரு, ஏப்.30**

அமேசான் நிறுவனம் 'AMAZON NOW' என்ற அதிவேக டெலிவரி சேவையை இந்தியாவில் 100 நகரங்களுக்கு விரிவுபடுத்த உள்ளது. 1000-க்கும் மேற்பட்ட சிறு டெலிவரி சேவைமையங்களின் ஆதரவுடன் இத்திட்டத்தை வலுப்படுத்த ரூ. 2,800 கோடி முதலீடு செய்யப்படவுள்ளது. இந்தியா முழுவதும் சில நிமிடங்களில் பொருள்களை டெலிவரி செய்யும் முறைக்கு ஆன்லைன் நிறுவனங்களிடையே போட்டிகள் பெருகிவரும் நிலையில், அமேசான் நிறுவனத்தின் இந்தத் திட்டம் அதிவேக டெலிவரி சந்தையில் புதிய பாய்ச்சலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'அமேசான் நவ்' சேவை தற்போது மும்பை, தில்லி, பெங்களூரு நகரங்களில் தற்போது செயல்பாட்டில் இருப்பதாகவும் விரைவில் கொச்சி, அமிர்தசரஸ், மங்களூர், விசாகப்பட்டினம், லக்னௌ, புனே, ஹைதராபாத், சென்னை, கொல்கத்தா, ஜெய்ப்பூர் போன்ற மெட்ரோ மற்றும் மெட்ரோ அல்லாத நகரங்களுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தச் சேவையின் மூலம் தினசரி தேவைக்குப் பயன்படுத்தப்படும் மளிகைப் பொருள்கள், அழகு சாதனங்கள், காய்கறிகள், பழங்கள், சிறு உபகரணங்கள், குழந்தைகளுக்கானப் பொருள்கள், வளர்ப்புப் பிராணிகளுக்குத் தேவையானப் பொருள்கள் என 1000-க்கும் மேற்பட்ட பொருள்கள் நிமிடங்களில் டெலிவரி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லையில் 5 தொகுதிகளுக்கு முதல் கட்டமாக 225 அலுவலர்கள் ஒதுக்கீடு

**நெல்லை, ஏப்.30:**

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை பணிகளில் ஈடுபடவுள்ள அலுவலர்களை, கணினி குலுக்கல் முறையில் (RANDOMIZATION) ஒதுக்கீடு செய்யும் முதல்கட்டப் பணிகள் நேற்று திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றன. மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் சுகுமார் தலைமையில், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற்ற சட்டமன்ற தேர்தலை தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு எந்திரங்கள் அரசு பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அங்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு, கண்காணிப்பு கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மே 4-ம் தேதி நடைபெறவுள்ள வாக்குஎண்ணிக்கையையொட்டி செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்:

வாக்கு எண்ணிக்கை மேஜைகள்: ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 14 மேஜைகள் மற்றும் 3 இருப்பு (RESERVE) மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அலுவலர்கள் ஒதுக்கீடு:

ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 17 மேற்பார்வையாளர்கள், 17 உதவியாளர்கள், 17 நுண்பார்வையாளர்கள் என 51 பேர் வீதம், 5 தொகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 255 அலுவலர்கள் முதல்கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

தபால் வாக்கு எண்ணிக்கை:

தபால் வாக்குகளை எண்ணுவதற்கு ஒவ்வொரு தொகுதிக்கும் 7 மேஜைகள் மற்றும் ஒரு இருப்பு மேஜை அமைக்கப்படவுள்ளது. இதற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் 8 நுண்பார்வையாளர்கள், 8 மேற்பார்வையாளர்கள், 8 நிலை-1 உதவியாளர்கள், 8 நிலை-2 உதவியாளர்கள் என 32 பேர் வீதம், 5 தொகுதிகளுக்கும் சேர்த்து மொத்தம் 160 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஒதுக்கீடு செய்யும் பணியில் மாவட்ட வருவாய் அலுவலர் துரை, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சுப்பிரமணியன் மற்றும் அனைத்து சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# டிஜிட்டல் கைது முறைகேடு தொடர்புடைய 9,400 வாட்ஸ்- அப் கணக்கு முடக்கம்

புதுடெல்லி, ஏப்.30:




நாட்டில் தொடர்ந்து நடைபெறும் டிஜிட்டல் கைது முறைகேடுகள் குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது.

இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் தலைமை வழக்கறிஞர் ஆர்.வெங்கடரமணி, உச்சநீதிமன்றத்தில் தற்போதைய நிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:

டிஜிட்டல் கைது முறைகேடுகளை தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை தொலைத் தொடர்பு நிறுவனங்களும், இணைய தளங்களும், வங்கிகளும் எடுத்து வருகின்றன.

சிம் கார்டுகளை விரைவாக முடக்குவது, வாட்ஸ்-அப் பயனாளரை பயோமெட்ரிக் முறையில் சரி பார்ப்பது போன்றவை செயல்படுத்தப் பட்டுள்ளன.

டிஜிட்டல் கைது முறைகேட்டில் பயன்படுத்தப்பட்ட 9,400 கணக்குகளை வாட்ஸ்-அப் முடக்கியுள்ளது.


டிஜிட்டல் கைது முறைகேட்டில் ஈடுபடும் நபர்கள் பெரும்பாலும் தெற்காசிய நாடான கம்போடியாவில் இருந்து செயல்படுகின்றனர்.

போலி பயனாளர்களைத் தடுக்க, பயனாளர் பெயர்களை காட்டும் முறை கடந்த ஜனவரி முதல் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# குஜராத் உள்ளாட்சித் தேர்தல்: பாஜக அமோக வெற்றி -பிரதமர் வாழ்த்து

புதுடெல்லி, ஏப்.30:



மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் என உள்ளாட்சித் தேர்தலில் மொத்தமுள்ள 9,900 இடங்களில் 6,472 இடங்களை பாஜக கைப்பற்றியுள்ள நிலையில், அங்கு வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. காங்கிரஸ் 1,412 இடங்களிலும் ஆம் ஆத்மி, அகில இந்திய மஜ்லீஸ் கட்சி மற்றும் சுயேச்சைகள் 597 இடங்களிலும் வென்றிருப்பதாக செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி குஜராத் மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டது.

குஜராத்தில் அகமதாபாத், சூரத், வதோதரா உள்ளிட்ட 15 மாநகராட்சிகள், 84 நகராட்சிகள், 34 மாவட்ட பஞ்சாயத்துகள், 260 தாலுகா பஞ்சாயத்துகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் வாக்களிக்க 4.18 கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் தகுதிபெற்றிருந்தனர். மாநகராட்சிப் பகுதிகளில் 55.1 சதவீதம், நகராட்சிகளில் 65.53 சதவீதம், மாவட்ட பஞ்சாயத்துகளில் 66.64 சதவீதம், தாலுகா பஞ்சாயத்துகளில் 67.26 சதவீத வாக்குகள் பதிவானதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

பாஜகவினருக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், ‘குஜராத் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்ட காரணமான பாஜக நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள். மக்களின் பிரச்னைகளை கண்டறிந்து களத்தில் பணியாற்றி அவற்றுக்கு தீர்வு காண தொடர்ந்து உழைப்பதால்தான் குஜராத் மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் பாஜகவை தேர்வு செய்கின்றனர். தற்போது பாஜகவுக்கும் குஜராத்துக்குமான உறவு மேலும் வலுவடைந்துள்ளது. மாநில அரசின் சிறப்பான ஆட்சிக்கு சான்றளிக்கும் விதமாக உள்ளாட்சித் தேர்தலிலும் வெற்றியை மக்கள் பரிசாக அளித்துள்ளனர். வருங்காலங்களில் முன்பைவிட பல மடங்கு வேகமாக குஜராத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல நாங்கள் பாடுபடுவோம் என உறுதியளிக்கிறேன்’ என குறிப்பிட்டார்.

# தேர்தலுக்குப் பின் பெட்ரோல், டீசல் விலை உயர்வா? - மத்திய அரசு சொல்வது என்ன?

புதுடெல்லி, ஏப்.30:

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால், தேர்தல் முடிந்தவுடன் எரிபொருள் விலை உயர்த்தப்படலாம் என சமூக வலைதளங்களில் வதந்திகள் பரவின. இதன் காரணமாக, ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்களில் பொதுமக்கள் பெட்ரோல் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளை நிரப்பத் தொடங்கினர்.

இதன் காரணமாக சுமார் 400-க்கும் மேற்பட்ட பெட்ரோல் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்ட நிலையில், மத்திய அரசு தற்போது இதுகுறித்து விளக்கம் அளித்துள்ளது.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா கூறுகையில், “பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. பொதுமக்கள் வதந்திகளை நம்பி தேவையற்ற முறையில் பீதி அடைந்து எரிபொருளைச் சேமிக்க வேண்டாம். நாட்டில் போதுமான அளவு பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி சிலிண்டர் இருப்பு உள்ளது,” என்று தெரிவித்தார். மேலும், எரிபொருள் விநியோகத்தை அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இந்தியாவில் எரிபொருள் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. இருப்பினும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 114 டாலராக உயர்ந்துள்ளதால், பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி சுமார் ரூ.2,400 கோடி இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# இறப்புக்கு ஆதாரமாக வங்கிக்கு சகோதரியின் எலும்புக் கூட்டுடன் வந்த நபர்

கியோஞ்சர், ஏப்.30:

ஒடிசாவின் கியோஞ்சர் மாவட்டத்தை சேர்ந்த, வயதான பழங்குடியின நபர் ஒருவர், தனது இறந்த சகோதரியின் வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை எடுப்பதற்காக, நேற்று (ஏப்.27) அவரின் எலும்புக் கூட்டையே தோண்டியெடுத்து வங்கிக்கு கொண்டுவந்த சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

கியோஞ்சரின் பட்னா வட்டாரத்தில் உள்ள மாலிபாசி பகுதியைச் சேர்ந்த ஜிது முண்டா (55) என்ற பழங்குடியின நபர், இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்த தனது சகோதரி கலரா முண்டாவின் வங்கிக் கணக்கில் இருந்த ரூ.20,000-ஐ எடுக்க பட்னா வட்டாரத்தில் உள்ள ஒடிசா கிராமீன் வங்கியின் மாலிபாசி கிளையை அணுகினார். வங்கி அதிகாரிகள், வங்கிக் கணக்கு உள்ள நபரையோ அல்லது அவர் உயிரிழந்தது தொடர்பான ஆவணங்களையோ சமர்ப்பிக்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டனர்.

இது குறித்த புரிதல் இல்லாத அந்த நபர், கல்லறையை தோண்டி உயிரிழந்த தனது சகோதரியின் எலும்புக் கூட்டை வங்கிக்கே எடுத்து வந்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், “நான் பலமுறை வங்கிக்கு அலைந்து திரிந்தேன். ஆனால், அவரது பெயரில் வைப்புத் தொகையாக உள்ள பணத்தை எடுக்க வேண்டுமென்றால், கணக்கு வைத்திருப்பவரை அழைத்து வருமாறு அங்கிருந்தவர்கள் என்னிடம் கூறினர். அவர் இறந்துவிட்டார் என்று நான் அவர்களிடம் கூறினேன். அவர்கள் பிடிவாதமாக ஆதாரம், ஆவணம் கேட்டனர்.

எனவே, விரக்தியின் காரணமாக, நான் அவரது கல்லறையைத் தோண்டி, இறந்துவிட்டார் என்பதற்குச் ஆதாரமாக அவரது எலும்புக் கூட்டை எடுத்து வந்தேன்” என்று ஜிது முண்டா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# ஆந்திராவில் ரூ.1.35 லட்சம் கோடி முதலீடு: கூகுள் ஏஐ டேட்டா மையத்துக்கு அடிக்கல்

விசாகப்பட்டினம், ஏப்.30:




ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தில் 3 இடங்களில் ரூ.1.35 லட்சம் கோடி முதலீட்டில் கூகுள் ஏஐ டேட்டா மையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுடன் இணைந்து ஆந்திர முதல்வர் சந்திரபாபுநாயுடு அடிக்கல் நாட்டினார். இதன் மூலம் 1.88 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினம் தர்லவாடா பகுதியில் நேற்று கூகுள் ஏஐ டேட்டா மையத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா விமரிசையாக நடந்தது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் அடிக்கல் நாட்டினர். ரூ.1.35 லட்சம் கோடி முதலீட்டில் அமைய உள்ள கூகுள் ஏஐ டேட்டா மையம் மூலம் 1.88 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது. ஒரு கிகா வாட்டுக்கு மேல் திறன் கொண்ட இந்த ஏஐ மையம், விசாகப்பட்டினத்தில் 2028-ம் ஆண்டுக்குள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில், தர்லவாடாவில் 266.6 ஏக்கரிலும், பின்னர் அடவிவரம் பகுதியில் 160 ஏக்கரிலும், அனகாபல்லி மாவட்டம் ராம்பில்லி அருகே 174.80 ஏக்கரிலும் இந்த டேட்டா மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த மையம் கட்டப்படும் போதே சிவில், எலக்ட்ரிக்கல் மற்றும் மெக்கானிக்கல் பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற சுமார் 60 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

கேம் சேஞ்சர்: விசாகப்பட்டினத்துக்குக் கூகுள் ஏஐ டேட்டா மையம் வரவு என்பது ஒரு கேம் சேஞ்சர் என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

# சமூக ஊடகங்களில் ஆதரவளிக்கும் அகிலேஷ்: மம்தா பானர்ஜிக்காக பிரச்சாரம் செய்யாதது ஏன்?

புதுடெல்லி, ஏப்.30:



உத்தரபிரதேச மாநில முன்னாள் முதல்வரான அகிலேஷ், மேற்கு வங்க முதல்வர் மம்தாவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்படுகிறார். இவர் கடைசியாக, கடந்த ஜனவரியில் முதல்வர் மம்தாவை கொல்கத்தாவில் சந்தித்தார். ஆனால், அங்கு தேர்தல் நெருங்கியதும் சமாஜ்வாதி கட்சித் தலைவரான அகிலேஷ், மேற்கு வங்க மாநிலத்திலிருந்து விலகியே இருந்தார். மம்தா பானர்ஜிக்கு அகிலேஷின் ஆதரவு சமூக ஊடகப் பதிவுகளுடன் மட்டும் நின்றுபோனது.

அதேசமயம், அகிலேஷுடன் இண்டியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள பிஹாரின் முன்னாள் துணை முதல்வரும், ஆர்ஜேடி கட்சித் தலைவருமான தேஜஸ்வி யாதவும், ஜார்க்கண்டின் முதல்வரான ஹேமந்த் சோரனும் திரிணமூல் காங்கிரஸ்(டிஎம்சி) வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தனர். டெல்லியின் முன்னாள் முதல்வரான அர்விந்த் கேஜ்ரிவால் கூட டிஎம்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து திரும்பினார்.

இந்த 3 தலைவர்களை விடவும் சமாஜ்வாதியின் அகிலேஷ், முதல்வர் மம்தாவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்பட்டார். இந்நிலையில் அவரது செயல், வெறும் தற்செயல் நிகழ்வா அல்லது இதற்குப் பின்னால் ஏதேனும் அரசியல் கணக்கு உள்ளதா? என்ற கேள்விகளும் தற்போது எழுந்துள்ளன. தேசிய அளவிலான இண்டியா கூட்டணிக் கட்சிகளாக இருந்தும் மேற்கு வங்க மாநிலத்தில் காங்கிரஸ் மற்றும் டிஎம்சி கட்சிகள் தனித்தனியாகவே தேர்தலைச் சந்தித்தன. ஆனால், இந்தமுறை 6 பொதுக் கூட்டங்களை மேற்கு வங்கத்தில் ராகுல் காந்தி நடத்தினார். இந்தக் கூட்டங்களில், மம்தா பானர்ஜி மற்றும் டிஎம்சி மீது ராகுல் காந்தி கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

மாநிலத்தில் ஜனநாயகம் நிலவுவதற்குப் பதிலாக, டிஎம்சியின் ஆட்சியே நடைபெற்று வருவதாகக் கூட அவர் குற்றம் சாட்டினார். அகிலேஷ் யாதவ் பிரச்சாரத்தில் ஈடுபடாமல் இருக்க எடுத்த முடிவுக்கு, ராகுலின் நடவடிக்கையும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த மக்களவை தேர்தலில் சமாஜ்வாதியுடன் காங்கிரஸும் இணைந்து போட்டியிட்டது. இதேபோல், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உ.பி.யின் சட்டப்பேரவைத் தேர்தலிலும் கூட்டணி அமைக்கும் ஊகங்கள் நிலவுகின்றன.

# குடியரசு துணைத் தலைவர் திருமலையில் வழிபாடு

திருமலை, ஏப்.30:

இரண்டு நாள்களாக பயணமாக திங்கள்கிழமை வந்த அவர் இரவு திருமலையில் தங்கி செவ்வாய்க்கிழமை காலை கோயிலை அடைந்ததும், மாநில அறநிலையத்துறை அமைச்சர் நாராயண ரெட்டி, தேவஸ்தான தலைவர் பி.ஆர். நாயுடு, செயல் அதிகாரி ரவிச்சந்திரா, கூடுதல் செயல் அதிகாரி சி.எச். வெங்கையா சௌத்ரி, சிவிஎஸ்ஓ முரளிகிருஷ்ணா ஆகியோர் வரவேற்றனர். மேலும், அர்ச்சகர்கள் குழுவினர் கோயில் சடங்குகளுடன் இஸ்திகபால் மரியாதை அளித்து அழைத்து சென்றனர்.

முதலில், அவர் கொடிமரத்தை வணங்கி பின்னர் கோயிலுக்குள் சென்று ஏழுமலையானை தரிசித்தார்.

அதைத் தொடர்ந்து, அவர் வகுளமாதா, விமான வெங்கடேஸ்வர சுவாமி, பாஷ்யங்காரர் சன்னிதி மற்றும் யோக நரசிம்ம சுவாமி ஆகியோரைத் தரிசித்தார்.

பின்னர், வேத அறிஞர்கள் ரங்கநாயக்கர் மண்டபத்தில் வேதஆசீர்வாதம் வழங்கினர். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் தலைவரும் செயல் அதிகாரியும் சுவாமியின் படத்தையும் தீர்த்த பிரசாதத்தையும் வழங்கினர்.

# வெளிநாடுவாழ் இந்திய குடிமகன் அட்டை விண்ணப்பக் கட்டணம்: ரூ.26,034-ஆக நிர்ணயம்

புதுடெல்லி, ஏப்.30:

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் விண்ணப்பிக்கும்போது மேற் குறிப்பிட்ட கட்டணம் அந்த நாட்டின் ரூபாய் மதிப்பிலும் இந்தியாவில் விண்ணப்பித்தால் நமது நாட்டின் ரூபாய் மதிப்பிலும் செலுத்த வேண்டும் என அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

முன்னதாக இந்தியாவில் இருந்து ஓசிஐ அட்டைக்கு விண்ணப்பிக்க ரூ.15,000 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து அதிகாரிகள் மேலும் கூறுகையில், ‘ஓசிஐ அட்டைக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.26,034-ஆக நிர்ணயிக்கப்படுகிறது. ஓசிஐ அட்டையில் உள்ள தகவல்களில் திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் விநியோகிக்க ரூ.2,366 (25 அமெரிக்க டாலர்கள்) வசூலிக்கப்படும். ஓசிஐ அட்டை தொலைந்துவிட்டால் அதை மீண்டும் பெற ரூ.9,467 (100 அமெரிக்க டாலர்கள்) கட்டணமாக செலுத்த வேண்டும் என்றனர்.

# அனில் அம்பானியின் ரூ 3,034 கோடி சொத்துகளை முடக்கிய அமலாக்கத் துறை

புதுடெல்லி, ஏப்.30:

தொழிலதிபர் அனில் அம்பானிக்குச் சொந்தமான ரிலையன்ஸ் குழுமத்துக்கு எதிரான பண மோசடி வழக்கில் புதிதாக ரூ.3,034 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை அதிகாரிகள் முடக்கியுள்ளனர்.

மும்பையில் உள்ள அனில் அம்பானிக்குச் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு, மகாராஷ்டிரத்தின் மலைப் பிரதேசமான கண்டாலாவில் உள்ள அனில் அம்பானி மற்றும் அவரின் மகன் ஜெய் அன்ஷுல் அம்பானிக்குச் சொந்தமான பண்ணை வீடு, அகமதாபாத் அருகே சனந்த் பகுதியில் உள்ள நிலங்கள் உள்ளிட்ட ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் ரிலையன்ஸ் உள்கட்டமைப்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் ரிலையன்ஸ் உள்கட்டமைப்பு நிறுவனத்தின் ரூ.7.71 கோடி பங்குகள் என மொத்தம் ரூ. 3,034 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மத நடவடிக்கை என்ற பெயரில் சாலையை மறிக்க முடியாது: உச்ச நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி, ஏப்.30:



சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்புக்கு எதிரான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதி மன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இடையீட்டு மனுதாரர் சார்பில் நிஜாம் பாஷா வாதிடும் போது, “ஹிஜாப் அணிவது கட்டாயம் என்ற நம்பிக்கையில் உயர் நீதிமன்றம் தலையிட்டு ஹிஜாப் அணிவது இஸ்லாத்தில் கட்டாயமாகப் பின்பற்றப் படும் வழக்கம் இல்லை என்று தீர்ப்பு கூறியது” என்று தெரிவித்தார். வழக்கறிஞர் ஏகலைவ துவிவேதி வாதிடும்போது, “மத சுதந்திரத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மத விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமைக்குப் பொருந்தாது” என்று தெரிவித்தார். இந்து தர்ம ஆச்சார்ய சபா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அக்சய் நாகராஜன் கூறும்போது, “மத நடவடிக்கைகளில் பொது ஒழுங்கு உள்ளிட்ட காரணங்களைக் காட்டி அரசு தலையிட முடியாது” என்றார். அப்போது நீதிபதி பி.வி. நாகரத்னா கூறும் போது, “மதச்சார்பற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படும் பட்சத்தில் அரசு தலையிட முடியும். உதாரணத்துக்கு ஒரு கோயிலில் நடைபெறும் தேரோட்ட நிகழ்வுக்காக அனைத்து சாலைகளையும் மறித்து அடைத்து வைக்க முடியாது. சாலைகளை மறித்து அடைத்து வைப்பதற்கும், மதத்துக்கும் தொடர்பில்லை. அரசு தலையிட்டு முறைப்படுத்த முடியும்” என்று தெரிவித்தார். வழக்கறிஞர் அஸ்வினி குமார் உபாத்யாய் கூறும்போது, “லட்சக்கணக்கான மசூதிகள் இருந்தாலும் மெக்காவுக்கும். லட்சக்கணக்கான தேவாலயங்கள் இருந்தாலும் ஜெருசலேத்துக்கும் தனி புனிதத் தன்மை உள்ளது. இதுபோல 1,500 ஐயப்பன் கோயில்கள் இருந்தாலும் சபரிமலைக்கு தனி புனிதத் தன்மை உள்ளது. சம்ஸ்கிருதம் ஆங்கிலத்தை காட்டிலும் அதிகமாக 52 எழுத்துக்களைக் கொண்டுள்ளதால் அலுவல் மொழியாக்கும் மசோதாவை டாக்டர் அம்பேத்கர் அறிமுகப்படுத்தினார்” என்று வாதிட்டார். அப்போது நீதிபதி ஆர். மகாதேவன் குறுக்கிட்டு, ‘‘வழக்கு சார்ந்து மட்டும் வாதிட வேண்டும்” என்று தெரிவித்தார். நீதிபதி அறிவுறுத்தல்: அரசமைப்பு சாசனத்தை ஆங்கிலத்தில் விளக்குவது கடினம் என்று வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய் வாதிட்டபோது, மற்றொரு நீதிபதி பி.வி.நாகரத்னா குறுக்கிட்டு “கன்னடமும் 52 எழுத்துகளைக் கொண்டுள்ளது. அனைவரும் சமமே. மேட்டிமை வாதத்தை முன் வைக்க வேண்டாம்” என்று அறிவுறுத்தினார்.

மற்றொரு நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் குறுக்கிட்டு இது போன்ற வாதங்களை முன் வைக்கக் கூடாது என்று கூறி வாதத்தை நிறைவு செய்ய அறிவுறுத்தினார்.

# அமெரிக்காவின் பாஸ்போர்ட்டுகளில் இடம்பெறும் டிரம்ப்பின் புகைப்படம்

**வாஷிங்டன், ஏப்.30:**

அமெரிக்காவின் 250-வது சுதந்திர தினம் ஜூலை 4, 2026 அன்று கொண்டாடப்படவுள்ளது. "Freedom 250" என்ற பெயரில் ஓராண்டு கொண்டாட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

இதற்காக விழா ஒருங்கிணைப்பு சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சிறப்பு நாணயங்கள், அஞ்சல் தலைகள் மற்றும் ராணுவ அணிவகுப்புகள் போன்ற பிரம்மாண்ட நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக சுதந்திரம் பெற்றதில் இருந்து இதுவரை அமெரிக்கா அடைந்துள்ள முன்னேற்றம், ஜனநாயக மதிப்புகள் மற்றும் எதிர்கால இலக்குகள் போன்றவற்றை




முன்னிலைப் படுத்துவதே இந்த விழாவின் நோக்கமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவின் 250-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு அதிபர் டிரம்ப்பின் புகைப்படம் மற்றும் அவரது கையெழுத்துடன் கூடிய சிறப்பு பாஸ்போர்ட்டுகள் அறிமுகம் செய்யப்பட உள்ளன.

வரையறுக்கப்பட்ட பதிப்பு முறையில் வெளியிடப்படும் இது, வாஷிங்டன் பாஸ்போர்ட் ஏஜென்சியில் மட்டுமே கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய 100 டாலர் நோட்டுகளில் டிரம்ப்பின் கையெழுத்து இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## காசாவில் இஸ்ரேல் தாக்குதல்: சிறுமி உட்பட 11 பேர் கொலை

**வாஷிங்டன், ஏப்.30:**

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இஸ்ரேல் ராணுவம் காசா மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இத்தாக்குதலில் 10 வயது சிறுமி, பெண் உட்பட 11 பாலஸ்தீனர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு அக்டோபர் 10 அன்று போர் நிறுத்த ஒப்பந்தம் அமலானதில் இருந்தே இஸ்ரேல் தொடர்ந்து விதிமீறல்களில் ஈடுபட்டு வருகிறது. போர்நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை நேதன்யாகு அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும். குறிப்பாக முதற்கட்ட நிபந்தனைகளை நிறைவேற்றினால் மட்டுமே அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தைக்கு நகர முடியும் என்று ஹமாஸ் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## பயங்கரவாதத் தாக்குதல் : ஆட்சிக் கவிழ்ப்பு சதி

மாலி நாட்டில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட கொடூரமான பயங்கரவாதத் தாக்குதல்கள் திட்டமிட்ட சதி என அந்நாட்டின் பிரதமர் அப்துல்லாயே மைகா குற்றம்சாட்டியுள்ளார். மேலும் இது வெறும் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றி ஜனநாயக நிறுவனங்களைச் சிதைக்க நடத்தப்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய இடைக்கால ஆட்சி செயல்பாட்டை தடுத்து நிறுத்துவது. மக்களிடையே அச்சத்தையும் சந்தேகத்தையும் விதைத்து, தேசிய ஒற்றுமையைக் குலைப்பது. நாட்டிற்குள் சீர்குலைவுகளை உருவாக்கி ஆட்சிக்கவிழ்ப்பை நடத்துவதே அவர்களின் நோக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## மீண்டும் முட்டுக்கட்டை: பேச்சுவார்த்தையை சிதைக்கும் டிரம்ப்

ஈரான் முன்வைத்துள்ள அமைதித் திட்டத்தில் டிரம்ப் திருப்தி அடையவில்லை என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஹோர்முஸ் நீரிணையை ஈரானின் முழு கட்டுப்பாட்டில் மீண்டும் திறப்பது. ஈரான் கடல் எல்லை களில் அமெரிக்க கடற்படை முற்றுகையை திரும்பப்பெற வேண்டும். அணுசக்தித் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளை மட்டும் தற்காலிகமாகத் தள்ளி வைத்து விட்டு, பிறகு விவாதிப்பது என ஈரான் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. இது குறித்து டிரம்ப் தனது அதிகாரிகளுடன் விவாதித்ததாகவும் இதனை அவர் ஏற்க மறுத்து பிடிவாதம் பிடிப்பதாகவும் கூறப்படுகிறது.

## மரணத்தின் விளிம்பில் சோமாலியா குழந்தைகள்

அமெரிக்க-இஸ்ரேல் போரினால் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்குத் தேவையான உயிர்காக்கும் உணவுகள் கிடைக்காமல் உள்ளது. இதனால் ஏற்கெனவே வாழ்வா சாவா போராட்டத்தில் உள்ள சோமாலிய குழந்தைகளை மரணத்தின் விளிம்பில் தள்ளப்பட்டுள்ளனர். கடல் வழிப் போக்குவரத்துத் தடைகளால், கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்க உதவும் சிறப்பு பால், வேர்க்கடலை கலந்த ஊட்டச்சத்து பசை ஆகிய வற்றுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள லட்சக்கணக்கான குழந்தைகள் மருத்துவமனைகளில் இருந்து திருப்பி அனுப்பும் நிலை உருவாகியுள்ளது.

## பாகிஸ்தானில் ஹபீஸ் சயீத் கூட்டாளி சுட்டுக்கொலை

லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத்தின் முக்கிய கூட்டாளியான ஷேக் யூசுப் அப்ரிடி பாகிஸ்தானில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அடையாளம் தெரியாத மர்ம நபர்களால் அவர் கொல்லப்பட்டார். கைபர் பக்துன்வா மாகாணத்தில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

லஷ்கர் பயங்கரவாத இயக்கத்திற்கு ஆட்களை சேர்த்தல் மற்றும் ஒருங்கிணைப்பு பகுதிகளில் முக்கிய பங்கை ஷேக் யூசுப் அப்ரிடி வகித்துள்ளார். கடந்த வாரம் லஷ்கர் அமைப்பின் அமீர் ஹம்சா துப்பாக்கிச்சூட்டில் காயம் அடைந்த நிலையில், தற்போது யூசுப் அப்ரிடி மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

யூசுப் அப்ரிடி கொல்லப்பட்டதால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. குற்றவாளிகளை கண்டறியக்கோரி போராட்டமும் வெடித்துள்ளதாக கூறப்படுகிறது. மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் ஹபீஸ் சயீத். இவர் தற்போது பாகிஸ்தானில் உள்ள லாகூர் துணைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

## "ஒரு தலைமுறைக்கான வாய்ப்பு" - இந்தியா உடனான வர்த்தக ஒப்பந்தம் குறித்து நியூஸி. பிரதமர் நெகிழ்ச்சி

**வெலிங்டன், ஏப்.30:**

இந்தியா - நியூஸிலாந்து இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் டெல்லியில் கடந்த 27ம் தேதி கையெழுத்தானது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் நியூஸிலாந்து வர்த்தக அமைச்சர் டாட் மெக்லே ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவுக்கு சுமார் 20 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1.88 லட்சம் கோடி) மதிப்பிலான முதலீடுகள் கிடைக்கும் என்றும், இருதரப்பு வர்த்தகம் இருமடங்காக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த ஒப்பந்தம் குறித்து நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் தனது எக்ஸ் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "இந்தியாவுடன் நியூஸிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொண்டிருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது ஒரு மிகச் சிறந்த செய்தி. நியூஸிலாந்துக்கு ஒரு தலைமுறையில் ஒருமுறை மட்டுமே கிடைக்கக்கூடிய ஒரு மாபெரும் வாய்ப்பு இது. நான் ஏன் இவ்வாறு கூறுகிறேன் என்தற்கான காரணம் மிகவும் எளிமையானது.இந்தியா இப்போது பூமியிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு.

இந்தியாவில் 150 கோடி மக்கள் வசிக்கிறார்கள். அவர்கள் படிப்படியாக செல்வந்தர்களாக மாறி வருகிறார்கள். இதன் காரணமாக, நியூசிலாந்து போன்ற இடங்களில் இருந்து வரும் உயர்தரமான பொருட்கள் மற்றும் சேவையை அவர்கள் விரும்புகிறார்கள். அதோடு, மிக முக்கியமாக இந்தியா உலகின் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதாரமாக உருவெடுக்க உள்ளது. குறைந்த வருமானம் கொண்ட நிலையில் இருந்து நடுத்தர வருமானம் கொண்ட நிலைக்கு இந்தியா உயருவதால், நியூசிலாந்தின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவை அதிகரிக்கும். இப்படிப்பட்டச் சூழலில், இந்தியாவுடன் இணைந்து வளர்வதற்கான ஒரு மிகப் பெரிய வாய்ப்பு நியூஸிலாந்துக்கு உள்ளது.


இந்தியாவுக்குத் தேவைப்படும் பொருட்களில் சுமார் 95% பொருட்கள் நியூஸிலாந்தால் ஏற்றுமதி செய்ய முடியும். இதில், மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால், ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் முதல் நாளில் இருந்தே 57% பொருட்களுக்கு சுங்கவரி விலக்கு அளிக்கப்படுகிறது. ஒப்பந்தக் காலம் செல்லச் செல்ல சுங்கவரி விலக்கு பெறும் பொருட்களின் சதவீதம் படிப்படியாக உயரும். இதன்மூலம் கூடுதல் செலவுகளை சந்திக்க வேண்டிய அவசியம் நியூஸிலாந்துக்கு இருக்காது.

உலக அரங்கில் நியூஸிலாந்து ஏற்றுமதியாளர்களை போட்டித்தன்மை மிக்கவர்களாக இது மாற்றும். வளர்ந்து வரும் இந்தியச் சந்தையில் உலகம் முழுவதிலும் இருந்து வரும் பொருட்களுடன் நம்மால் போட்டியிட முடியும்" என நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் தெரிவித்துள்ளார்.

## வேலைக்காக விண்ணப்பித்தும் பலன் இல்லை: பிரிட்டனில் பட்டப்படிப்புக்காக ரூ.1 கோடி செலவு செய்ததாக எகிப்து இளைஞர் வேதனை

**லண்டன், ஏப்.30:**

எகிப்து நாட்டை சேர்ந்தவர் காலித் ஷெரீப். இவரது பெற்றோர் எகிப்தில் இருந்து கத்தார் நாட்டில் குடியேறினர். அங்கு பள்ளிப் படிப்பை நிறைவு செய்த காலித் தன்னுடைய 18-வது வயதில் உயர் கல்விக்காக பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு சென்றார்.



லண்டனின் புறநகர் பகுதியில் உள்ள கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் டிஜிட்டல் மீடியா தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றார். இதற்காக அவர் மொத்தம் ரூ.1.04 கோடியை செலவு செய்து உள்ளார். இதன் பிறகு பிரிட்டனில் ஏதாவது ஒரு வேலையில் சேர திட்டமிட்ட காலித் இதுவரை 500-க்கும் மேற்பட்ட பணிகளுக்காக விண்ணப்பித்தார். ஆனால் 20 நிறுவனங்கள் மட்டுமே அவரை நேர்முகத் தேர்வுக்கு அழைத்தன. அதிலும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை.

இதுகுறித்து அவர் கூறியதாவது: பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளேன். ஆனாலும் பிரிட்டனில் எனக்கு வேலை கிடைக்கவில்லை. எனக்கே இந்த நிலை என்றால், குறைந்த மதிப்பெண் பெற்றவர்களின் நிலை இன்னமும் மோசமாக இருக்கிறது. கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார பாதிப்புகள், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உள்ளிட்ட காரணங்களால் வேலைவாய்ப்புகள் குறைந்து வருகின்றன.

பள்ளிப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கு சூப்பர் மார்க்கெட்டில் எளிதாக வேலை கிடைக்கிறது. ஆனால் பட்டதாரிகளுக்கு வேலை கிடைப்பது மிகவும் கடினமாகிவிட்டது. நீண்ட தேடலுக்குப் பிறகு சொந்தமாக ஜவுளி நிறுவனம் ஒன்றை தொடங்கி உள்ளேன்.

அதோடு பகுதிநேர வீடியோகிராபர், புகைப்பட கலைஞராகவும் பணியாற்றி வருகிறேன். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


## அமெரிக்காவின் 250-வது சுதந்திர தினம்: இங்கிலாந்து மன்னர் சார்லஸ் - டிரம்ப் சந்திப்பு

**வாஷிங்டன், ஏப்.30:**

அமெரிக்காவின் 250-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, அமெரிக்கா-இங்கிலாந்து இடையேயான உறவை வலுப்படுத்தும் நோக்கில் இங்கிலாந்து மன்னர் சார்லஸ் 4 நாட்கள் அரசு முறைப் பயணமாக அமெரிக்கா சென்றார்.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், மெலனியா டிரம்ப் ஆகியோர் மன்னர் சார்லஸ், ராணி கமிலாவை வெள்ளை மாளிகையில் நேற்று வரவேற்றனர். இந்த சந்திப்பு, அமெரிக்கா-இங்கிலாந்து உறவை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளின் தொடக்கமாக அமைந்தது. இருவரும் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஆலோசனை நடத்தினர். ஈரானுக்கு எதிரான டிரம்ப் நிர்வாகத்தின் கடுமையான நிலைப்பாடு மற்றும் இங்கிலாந்து மீதான டிரம்பின் விமர்சனங்களுக்கு மத்தியில், இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் முயற்சியாக கருதப்படுகிறது.

## 146 ஆண்டுகளுக்குப் பின்... மாஸ்கோவை உலுக்கிய பனிப்புயல்



**மாஸ்கோ, ஏப்.30:**

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் கடந்த சில தினங்களாக வீசி வரும் கடும் பனிப்புயல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது.

கடந்த 1880-ம் ஆண்டிற்குப் பிறகு சுமார் 146 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இப்போதுதான் இவ்வளவு சக்திவாய்ந்த பனிப்புயலை நகரம் எதிர்கொண்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். இந்தப் பனிப்புயலானது வினாடிக்கு 23 மீட்டர் (சுமார் 82 கி.மீ/மணி) என்ற அதிவேகத்தில் வீசியது. இதனால் நகரின் பல பகுதிகளில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்து விழுந்ததால் பல இடங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

சாலைகளில் சுமார் 12 சென்டிமீட்டர் உயரத்திற்குப் பனி குவிந்துள்ளதால் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது அதனை அகற்றும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## இங்கிலீஷ் கால்வாயை கட்டுமரப் படகில் கடக்க ஆர்வம் காட்டும் பயணிகள்



**லண்டன், ஏப்.30:**

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு இடையே அமைந்துள்ள இங்கிலீஷ் கால்வாயை, பழங்காலத்தைப் போலவே கட்டுமரப் படகுகள் மூலம் கடக்க சுற்றுலாப் பயணிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நவீன மோட்டார் படகுகளுக்கு மாற்றாக, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் 'செயில் லிங்' (SAILLINK) என்ற நிறுவனம் இந்தச் சேவையைத் தொடங்கியுள்ளது.

17 மீட்டர் நீளமுள்ள இந்தப் பாய்மரப் படகில் ஒரே நேரத்தில் 12 பேர் வரை பயணிக்கலாம். ஒரு முறை பயணம் செய்ய ஒரு நபருக்கு 110 அமெரிக்க டாலர்கள் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. கால்வாயைக் கடக்க சுமார் 4 முதல் 5 மணி நேரம் ஆகிறது. எஞ்சின் சத்தம் மற்றும் கரும்புகை இல்லாத இந்தப் பயணம் குறித்து பயணிகள் நெகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். காலநிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, இத்தகைய பசுமைப் போக்குவரத்து முயற்சிகள் சர்வதேச அளவில் பெரும் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

## "இனியும் நல்லவராக இருக்க முடியாது": துப்பாக்கியுடன் ஈரானுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஏப்.30:**




ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள போதிலும், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. கட்டுப்பாடுகள் மற்றும் கட்டணம் ஏதும் இன்றி ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும், அணு ஆயுத முயற்சியை கைவிட வேண்டும் என்று ஈரானை அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பாக அமெரிக்காவுடன் ஈரான் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அது வலியுறுத்தி வருகிறது.

எனினும், இது தொடர்பாக அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த ஈரான் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டுமானால், முதலில், ஈரான் மற்றும் லெபனான் மீது போர் தொடுக்கப்படாது என்பதற்கும், போர் முழுமையாக நிறுத்தப்படுவதற்கும் அமெரிக்கா முறையான உத்தரவாதம் அளிக்க வேண்டும். இந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டால், ஹார்முஸ் ஜலசந்தி நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறித்து ஆலோசிக்கப்படும். அதன் பின்னரே, அணுசக்தி விவகாரம் குறித்து ஈரான் விவாதிக்கும் என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் நிபந்தனைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் சமீபத்தில் தெரிவித்தார். இது தொடர்பாக உயர்மட்ட பாதுகாப்பு ஆலோசகர்களுடன் அதிபர் டொனால்டு ட்ரம்ப் நேற்று முன்தினம் ஆலோசனை மேற்கொண்டதாக ஈரானின் ஃபார்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

இந்நிலையில், தனது ட்ரூத் சமூக ஊடக பக்கத்தில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஈரானுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுவாக எழுத்து மூலமாக தனது கருத்துகளைத் தெரிவிக்கும் டொனால்டு ட்ரம்ப், இம்முறை புகைப்படம் ஒன்றையும் சேர்த்து பதிவிட்டுள்ளார்.

குண்டுகள் வெடிக்கும் பின்னணியில், கையில் அதிநவீன துப்பாக்கியுடன் திரைப்பட கதாநாயகன் போல் காட்சியளிக்கும் டொனால்டு ட்ரம்ப், 'இனியும் நல்லவராக இருக்க முடியாது' என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "ஈரானால் ஒருங்கிணைந்து செயல்பட முடியவில்லை. அணு ஆயுதமற்ற ஒப்பந்தத்தில் எப்படி கையெழுத்திடுவது என்பது குறித்து அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் விரைவில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்" என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# 5 மாநில பேரவைத் தேர்தல்! கருத்துக் கணிப்பு முடிவுகள்





## மேற்கு வங்கம்: 89.99% வாக்குப்பதிவு!

## அரசு மருத்துவ சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்

## புல்லட் ரயில் திட்டம்! சென்னையிலிருந்து பெங்களூருக்கு வெறும் 73 நிமிடங்களில்...

## அமெரிக்காவின் பாஸ்போர்ட்டுகளில் இடம்பெறும் டிரம்ப்பின் புகைப்படம்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 30.04.2026 வியாழக்கிழமை இலவச இ-பேப்பர்